# புதிய ஜனநாயகம்

(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

அக்டோபர் 2025
ரூ. 20.00




## நேபாளத்தில் வெடித்த ஜென் Z போராட்டங்கள்:
# முன்னேற்றமா? பின்னடைவா?

H-1B விசா கட்டணம் உயர்வு: யாருக்கு பாதிப்பு?

இந்துத்துவாவிற்கு பாதையமைக்கும் சிபிஎம் - திமுக ஓட்டரசியல்!

“அதானி ஃபிராடு இல்லை” ‘குற்றவாளிகளின்’ தீர்ப்பு!

# தந்தை பெரியார் பிறந்த நாளில் சாதி ஆணவப் படுகொலைகளைக் கண்டித்தும் ஆணவப் படுகொலைக்கு தனிச்சட்டம் இயற்றக் கோரியும் மாநில அளவில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் ஆணவப் படுகொலையை கண்டித்து செப் 17 தந்தை பெரியார் பிறந்த நாளில் ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்று! சாதி மறுப்பு திருமணங்களுக்கு பாதுகாப்பு வழங்கு! என கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மக்கள் அதிகாரம் அமைப்பு அதன் தோழமை அமைப்புகளுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

சமீபத்தில் நெல்லையில் நடந்த கவினின் ஆணவப்படுகொலை தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் சாதிவெறியர்களால் பல்வேறு ஆணவப்படுகொலைகள் நடந்துள்ளது. குறிப்பாக தருமபுரி கண்ணகி - முருகேசன், இளவரசன், கோகுல்ராஜ், உடுமலை சங்கர் இப்படியாக சாதிவெறி கும்பலுக்கு பலியானவர்கள் ஏராளம். சமீபத்தில் கவின் மற்றும் இந்த மாதத்தில் மயிலாடுதுறையை சேர்ந்த வைரமுத்து என தொடர்கிறது ஆணவப் படுகொலைகள். சாதிவெறி படுகொலைகளுக்கு காரணமான சனாதனத்தை தாங்கிப் பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ் சங்க பரிவார் அமைப்புகளைத் தடை செய்! சாதி வெறி சங்கங்களைத் தடை செய்! என்ற கோரிக்கை முழக்கங்களும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒலித்தன.

இதற்கு முன்னதாக ஆணவப்படுகொலை செய்யப்பட்ட கவினின் குடும்பத்தினரை மக்கள் அதிகாரம் அமைப்பினர் பார்த்து ஆறுதல் கூறிவிட்டு ஆணவப்படுகொலைகளுக்கு எதிராக மக்கள் அதிகாரம் எடுத்திருக்கும் இயக்கம் குறித்து தோழர்கள் விளக்கினார்கள். கவினின் தந்த மதுரையில் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொள்வதாக உறுதியளித்தார். கடைசி நேரத்தில் மனதளவில் பிரச்சினையாக உள்ளதால் தோழர்களிடம் வராததற்கு வருத்தம் தெரிவித்தும், நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு தனது ஆதரவையும் நன்றியையும் தெரிவித்திருந்தார்.



மதுரை


கோவை



மதுரை



கோவை

# கரூர்: 42 மனித உயிர்கள் படுகொலை!

# பாசிசக் கோமாளி விஜயை கையாள வேண்டிய அணுகுமுறை!


புதிய ஜனநாயகம்
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தொகுதி : 39 இதழ் : 06

அக்டோபர் - 2025

தனி இதழ் நன்கொடை ரூ. 20.00
(தனிச்சுற்றுக்கு மட்டும்)

வடிவமைப்பு:
மு.துரை



தொடர்பு முகவரி :
புதிய ஜனநாயகம்
M.J.சுதேஷ்குமார்
45, பெருமாள் கோயில் தெரு,
மஞ்சங்காரணை,
திருவள்ளூர்,
தமிழ்நாடு - 601 102.
மின்னஞ்சல்:
puthiyajananayagam2022@gmail.com
கைபேசி:
+91 98844 31949


கரூரில் சினிமா கழிசடையும், பாசிச கோமாளியுமான, திருவாளர் விஜய் நடத்திய 'வீக் எண்ட் கூட்டம்' ஒன்றில் அவரை பார்க்கச் சென்ற எமதருமை உழைக்கும் மக்கள் 42 பேர் படுகொலையாகி உள்ளனர். 75-க்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புகளின் காரணமாக இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

நடிகர் விஜய் அரசியலுக்கு வந்த போது அவர் புதிதாக ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கப் போவதாகவும், ஏற்கனவே தமிழகத்தை ஆண்டு வருகின்ற திராவிடக் கட்சிகள், இந்திய ஒன்றியத்தை ஆண்டு வருகின்ற பாசிச பாஜக ஆகியவற்றுக்கு மாற்றாக புதிய ஒரு அரசியலை முன்வைப்பதாக செயற்கையாக திட்டமிட்டு அவரைப் பற்றி கருத்துருவாக்கம் மேற்கொண்டார்கள்.

2014 ஆம் ஆண்டு ஆர்எஸ்எஸ் - பாஜக கும்பலானது, இந்திய ஒன்றியத்தின் அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு அது தனது சித்தாந்த ரீதியான எதிரியாக கருதிக் கொண்டிருக்கும் திராவிட இயக்கத்தை குறிப்பாக திமுகவை ஒழித்துக் கட்டுவதற்கு பொருத்தமான ஒரு கவர்ச்சிவாத தலைவன் ஒருவனை தேடிக் கொண்டிருந்தது. ஆர்எஸ்எஸ்-காரனும், மற்றொரு சினிமா கழிசடை நாயகனுமான ரஜினிகாந்த் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றவுடன் அப்போதிலிருந்து விஜயின் தந்தையான எஸ்.ஏ.சந்திரசேகர் மற்றும் ஒரு கிச்சன் கேபினட் ஒன்று சேர்ந்து விஜய்யை அரசியலுக்கு கொண்டுவர திட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இந்த காலகட்டத்தில் வெளியான விஜயின் திரைப்படங்கள் அனைத்தும் அரசியல் ரீதியிலாக விஜயை மக்களின் உரிமைகளுக்காக போராடுவதைப் போலவும், தீவிரவாதிகளுக்கு எதிராக போராடும் போராளியைப் போலவும் சித்தரிப்பதாக கொண்டுவரப்பட்டது. ஏ.ஆர்.முருகதாஸ் உருவாக்கிய கத்தி திரைப்படம் முதல் கடைசியில் வெளிவந்த கோட் திரைப்படம் வரை திட்டமிட்டு தமிழகத்தில் பாசிச கோமாளியான எம்ஜிஆரைப் போன்ற ஒரு புது வகையான கோமாளியை, அதுவும் கொள்கை, லட்சியம், விழுமியங்கள் ஏதுமற்ற (விக்ரவாண்டி மாநாட்டில் பேராசிரியர் சம்பத்குமார் முன் வைத்த சில உல்டா கொள்கைகள் தவிர) இன்றைய புதிய தலைமுறைக்கு பொருத்தமான பாசிசக் கோமாளியை உருவாக்குவதற்கு முயற்சித்தனர் என்பதையும் இணைத்தே புரிந்துக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் ஆர்எஸ்எஸ் - பாஜகவின் சூத்திரதாரியாக இயங்கி வருகின்ற ஆடிட்டர் குருமூர்த்தி ஆலோசனையின் கீழ் படிப்படியாக உருவான இந்த தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியானது, தன்னை ஒரு தேர்தல் கட்சியாக அறிவித்துக் கொண்ட பிறகு, கொள்கை என்று தனக்கு இருப்பதாக காட்டிக் கொள்வதற்கு பெரியார், அம்பேத்கர் முதல் வேலுநாச்சியார் அனைவரையும் முன்னிறுத்தி இவர்கள் வழியில் தான் செல்வதாகவும், தமிழகத்தில் நிலவுகின்ற திமுக ஆட்சியை வீழ்த்துவது ஒன்றே தனது குறிக்கோள் என்றும் பிரகடனம் செய்து கொண்டு மாநாடுகளை நடத்துவது; அதன் பிறகு ஊர் ஊராக சென்று பிரச்சாரம் செய்வது; அந்த பிரச்சாரங்களில் எழுதிக் கொடுத்த ஸ்கிரிப்டை தப்பும் தவறுமாக படிப்பது; பஞ்ச் டயலாக்குகள், பாடல் பாடுவது; குத்தாட்ட பாணியில் நடனமாடுவது; பாசிச ஜெயா பாணியில் மக்களிடம் கேள்வி எழுப்புவது போன்ற வழிமுறைகள் ஆகியவற்றை கடைபிடித்து, 'தன்னிகரில்லாத தலைவனாக' தன்னை உருவாக்கிக் கொள்ள விஜய் முயன்று வந்தார்.

இப்படிப்பட்ட அரசியல் ஏதுமற்ற பாசிசக் கோமாளிகள் சமூக அங்கீகாரத்தை பெறுவதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

2008ல் ஏற்பட்ட ஏகாதிபத்திய முதலாளித்துவ நெருக்கடியானது, உலகம் முழுவதும் நிலவி வருகின்ற முதலாளித்துவ ஜனநாயகத்தை பாதுகாக்கும் பல்வேறு ஆட்சி வடிவங்கள் அனைத்தையும் கேள்விக்குறியாக்கி சொல்லிக் கொள்ளப்படும் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து வருகிறது. மாற்றாக பாசிச சர்வாதிகார வழிமுறையில் ஆட்சி செய்வதை நிலைநாட்டி வருகிறது.

இந்த பொருளாதார நெருக்கடியானது அரசியல் மற்றும் பண்பாட்டு துறையிலும் வெளிப்பட்டது என்பது மட்டுமின்றி, அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் ஜனநாயகம் ஆகியவற்றின் மீதும் தனது தாக்குதலை தொடுத்தது.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் தொட்டில் என்று கருதப்படுகின்ற அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் முதல் முதலாளித்துவ வளர்ச்சி பெறாத பின் தங்கிய காலனிய, அரைக்காலனிய, நவீன காலனிய நாடுகளிலும் அரசியல் கட்சிகள் தனது கொள்கைகள் விழுமியங்கள், நெறிமுறைகள் ஆகியவற்றை தூக்கியெறிந்து விட்டு புதிய வகையிலான கட்சி அமைப்பு ஒன்றை முன்வைத்து செயல்படத் துவங்கினர்.

இத்தகைய மோசமானதொரு அரசியல் நிலைமையை அவதானித்து 2015 ஆம் ஆண்டு வாக்கில், இந்தியாவைப் பொறுத்தவரை ஆளும் வர்க்கங்கள் உருவாக்கிய அதன் கட்டமைப்புகள் அனைத்தும் தோல்வியை தழுவி விட்டன என்பதை முன் வைத்திருந்தோம்.

''இப்பொழுது எந்த தேர்தல் அரசியல் கட்சியை எடுத்துக் கொண்டாலும் தேசியம், திராவிடம், சோசலிசம், முற்போக்கு, சமூகநீதி, காந்தியம், மனிதநேயம் முதலான கொள்கை, கோட்பாடு, சித்தாந்தம் எதுவும் கிடையாது. அவை எல்லாவற்றிலும் பிழைப்புவாதமும் இலவசங்களும் தான் கோலோச்சுகின்றன.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் வந்தப் பிறகு உள்நாட்டு தேசங்கடந்த தரகு முதலாளிகள், ஏகாதிபத்திய ஏகபோக கார்ப்பரேட் முதலாளிகளை சார்ந்த பொருளாதாரமே வளர்ச்சிக்கான முன்னேற்றத்திற்கான ஒரே பாதை என்பதாக போலிக் கம்யூனிச கட்சிகள் உட்பட எல்லா தேர்தல் அரசியல் கட்சிகளின் கொள்கை கோட்பாடாக ஆகிவிட்டது.

ஆகவே எல்லா தேர்தல் அரசியல் கட்சிகளும் கொள்கை கோட்பாடுகள் இல்லாத கட்சிகளாக மாறிக்கொண்டன. எந்த வழியானாலும் பணம்-செல்வம்-சொத்து சேர்ப்பது; சுகபோகங்களில் புரள்வது; ஆடம்பரங்களில் மூழ்கித் திளைப்பது; பதவிகளில் ஒட்டிக் கொண்டிருப்பது என்பதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டவர்களே எல்லா தேர்தல் அரசியல் கட்சிகளின் தலைவர்களாகவும், பிரமுகர்களாகவும் உள்ளனர். இதற்கு ஏற்ப ஒட்டுமொத்த சமுதாயத்தையே பண்பாட்டு ரீதியில் சீரழிக்கிறார்கள். இவற்றுக்காக எந்த வித கிரிமினல் குற்றச் செயல்களிலும் வேண்டுமானாலும் ஈடுபடுகிறார்கள்.

அது மட்டுமல்ல ஊழல் முறைகேடு, கிரிமினல் குற்றச் செயல்கள், கொலைபாதக செயல்கள் ஆகியவற்றில் தாங்கள் சிக்கிக் கொள்ளும் போது, இவர்கள் இப்போது ஒரு புது அரசியல் கலாச்சாரத்தை பரப்பி வருகிறார்கள். இவர்கள் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் புகார்கள் வந்தால் அவை அரசியல் அவதூறுகள் என்றும், தண்டிக்கப்பட்டால் அவ்வாறு செய்வது அரசியல் சதிகள், சூழ்ச்சிகள், அரசியல் பழிவாங்குதல்கள் என்றும் கூறி கூலிப்படையை வைத்து போராட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள்'' என்று வரையறுத்திருந்தோம். இத்தகைய போக்குகள் அனைத்தும் தற்போது படிப்படியாக செழித்து வளர்ந்து மிகப்பெரும் முள் மரமாக மாறிவிட்டது.

குறிப்பாக ஜென்-Z என்று அழைக்கப்படுகின்ற இளம் தலைமுறையினரை தமது திரைப்படங்களிலும் அதற்கு வெளியிலும் நண்பா-நண்பி என்றும், 'விர்ச்சுவல் வாரியர்ஸ்' என்றும் பெயரிட்டு அழைத்து வந்ததன் விளைவாக குறிப்பான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் விரும்பாத, அரசியலை சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்படும் பழமைவாத வடிவம் என்று புரிந்து வைத்துள்ள இளைய தலைமுறையினருக்கு விஜயின் மீது ஈர்ப்பு ஏற்பட்டது.

இத்தகைய இளம் தலைமுறையினர் வீடுகளில் பெற்றோர்களை மதிப்பதில்லை என்பதில் துவங்கி பணிபுரியும் இடங்களில் ஒரு சில மாதங்களுக்கு மேல் தாக்குப் பிடிப்பதில்லை; ஒரே வகையான உடை உடுத்துவதில்லை; தனது நடை, உடை, பாவனைகள் முதற்கொண்டு அனைத்தையும் வெவ்வேறு விதமாக மாற்றிக்கொண்டு, எந்த விதமான ஒழுங்குகளும் இல்லாத அராஜகவாதிகளாகவும், லும்பன்களாகவும் திரிந்து கொண்டுள்ளனர் என்பதும் இப்படிப் பட்டவர்கள் வீட்டுக்கு வெளியில் விஜய் போன்ற சினிமா கழிசடைகளால் ஈர்க்கப்பட்டு கூட்டங்களுக்கு தானாகவே செல்வது; ஆயிரக்கணக்கில் என்பதை தாண்டி கட்டுப்பாடு இன்றி குவிவது; கொள்கை-கோட்பாடுகள் லட்சிய முழக்கங்களுக்கு பதிலாக கீழ்த்தரமாக ஊளையிடுவது; பஞ்ச் டயலாக்குகளை பேசி தொலைக்காட்சிகளுக்கு, சமூக ஊடகங்களுக்கு செய்தியாக கொடுப்பது என்று அரசியல் ஆபாச வக்கிரத்தின் உச்சத்திற்கே சென்றுள்ளனர்.

இத்தகைய அரசியலற்ற லும்பன்கள் கடந்த ஒரு மாத காலமாக பாசிசக் கோமாளியான விஜய் நடத்தி வருகின்ற கூட்டங்களுக்கு செல்வதில் கட்டுப்பாடுகளற்று திரிந்து கொண்டிருப்பதால் ஒவ்வொரு கூட்டத்திலும் சாவுகள் நடப்பது சகஜமாகி வருகின்றது. இவையே உச்சகட்டமாகி கரூரில் 42 பேர் மரணத்திற்கு காரணமாக மாறியுள்ளது.

விஜய் போன்ற பாசிச கோமாளிகள் இயல்பாகவே ஆர்எஸ்எஸ் பாஜகவின் சித்தாந்தத்துடன் ஒத்துப்போகிறவர்களாகவும், பாசிசக் கைக்கூலிகளாகவும் இயங்குகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இன்றைய இளைஞர்கள் மத்தியில் நிரம்பி வழிகின்ற நுகர்வு கலாச்சார சூழ்நிலை, செல்போன் மற்றும் இன்டர்நெட் கலாச்சாரமும், மாணவர்களை இளைஞர்களையும் மகிழ்ச்சி கேளிக்கை ஆகியவற்றில் ஈடுபடுத்துகின்ற செலிபிரிட்டி கலாச்சாரமும், மேலோட்டமான அறிவு; இலட்சியத்தின் மீது ஆர்வமற்ற நிலை ஆகியவை கலந்த கலவையாக உருவாகி வருகின்றனர். இதில் விதிவிலக்கானவர்கள் சமூகத்தைப் பற்றியும், நாட்டைப் பற்றியும் அக்கறையுடன் செயல்படுகின்றனர். பெரும்பான்மையானவர்கள் மேற்கண்ட வழிமுறைகளிலேயே தனது வாழ்க்கையைக் கழிக்கின்றனர்.

நாடோடி தொழிலாளர்களாகவும், அன்றாடங்காய்ச்சிகளாகவும், தினக்கூலி பெறுகின்ற அரைப் பாட்டாளிகளாகவும் மாற்றப்பட்டுள்ள இந்த பெரும்பான்மை இளைய தலைமுறை மத்தியில் இருந்து பாசிச கோமாளியை ஆதரிக்கின்ற ஒரு கும்பல் உருவாவது ஆச்சரியம் இல்லை.

'கொக்கு தலையில் வெண்ணையை வைத்து பிடிப்பதை போல' பாசிச கோமாளி விஜயை மென்மையாகவும், நாசுக்காகவும், மொன்னையாகவும் விமர்சித்து விஜய்யின் கீழே திரண்டுள்ள இளைஞர்கள் மற்றும் அரசியல் வேண்டாம், 'எனது வாழ்க்கை-எனது குடும்பம்-எனது தொழில்' என்று சுயநல பிண்டங்களாக சீரழிந்துள்ள நடுத்தர, குட்டி முதலாளித்துவ பிரிவினரை அரவணைக்க கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்று சிந்திப்பது மிகவும் ஆபத்தானது.

குஜராத் படுகொலையின் போது பாசிச மோடியை அனுமதித்ததன் விளைவாக நாடு கடந்த கால் நூற்றாண்டாக பல்வேறு நெருக்கடிகளை அனுபவித்துக் கொண்டுள்ளது. பாசிசக் கோமாளியான விஜயை அனுமதித்தால் தமிழகமும் அதே திசையில் சென்று சிக்கி சீரழியும் என்பதே நாம் மக்களுக்கும், அரசியல் முன்னணியாளருக்கும் விடுக்கும் எச்சரிக்கையாகும். ■

# அமெரிக்க H-1B விசா கட்டணம் பன்மடங்கு உயர்வு: யாருக்கு பாதிப்பு?

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவின் நலனுக்காக என்று கூறிக் கொண்டு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை அடுத்தடுத்து எடுத்து வருகிறார். முதலில் பல்வேறு நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களை கை, கால்களில் சங்கிலி பிணைத்து சரக்கு விமானத்தில் ஏற்றி அந்தந்த நாடுகளுக்கு கொண்டு போய் தள்ளினார். அடுத்து பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கான வரியை நாட்டுக்கு ஏற்றவாறு பல மடங்கு உயர்த்தினார்.

அடுத்தக் கட்டமாக கடந்த மாதம் 19ஆம் தேதியன்று அமெரிக்காவில் வேலைக்கு செல்பவர்களுக்காக வழங்கப்படும் H-1B விசாவுக்கான கட்டணத்தை பல மடங்கு உயர்த்தியுள்ளார். ஏற்கனவே வெறும் 2000 டாலராக இருந்த கட்டணத்தை ஒரு லட்சம் டாலராக (கிட்டத்தட்ட 88 லட்ச ரூபாய்) உயர்த்தப் போவதாக அறிவித்தார். அடுத்த இரண்டு நாட்களில் இது அமலுக்கு வரும் என அறிவித்ததால் அமெரிக்காவிலிருந்து தங்களது சொந்த நாட்டுக்கு சென்றவர்கள் அனைவரும் அலறியடித்து அமெரிக்கா திரும்ப எத்தனித்தனர்.

## அமெரிக்காவின் எதிர்வினை என்ன?

இந்த அறிவிப்பு வெளியானவுடன் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில், ''இந்த உத்தரவு அமலாக்கப்பட்டு நீடிக்கும் நிலையில் அமெரிக்காவுக்குள் சட்டபூர்வமாக குடியேறுவதற்கான முக்கியமான வழித்தடம் மூடப்படும் அபாயம் உள்ளது'' என குறிப்பிட்டது. அமெரிக்காவின் சேம்பர் ஆப் பிராக்ரஸின் நிறுவனர் ஆடம் கோவா செவிக், ''நாம் சீனாவுக்கு எதிராக செயற்கை நுண்ணறிவுப் போரை நமது கைகளை பின்பக்கம் கட்டிக்கொண்டு மேற்கொள்ளப் போகிறோம். ஏனென்றால் இத்துறையில் திறமையானவர்கள் பலர் வெளிநாட்டில் பிறந்துள்ளனர்'' என்று குறிப்பிட்டார்.

அமெரிக்க குடியேற்ற வழக்கறிஞர்கள் அமைப்பின் தலைவர் ஜெஃப் ஜோசப், பிற அமைப்புகளுடன் சேர்ந்து இந்த உத்தரவுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இடைக்காலத் தடை பெற இருப்பதாக தெரிவித்தார். அமேசான், கூகுள், மைக்ரோசாப்ட் மற்றும் இதர நிறுவனங்கள் தங்களது H-1B விசா ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் இருக்குமாறும், வெளிநாடுகளில் இருப்பவர்கள் ஒரே நாளில் திரும்பாவிட்டால் பிறகு அமெரிக்காவில் நுழைவது கடினமாகிவிடவும் எனவும் அறிவித்தனர்.

இதனால் பதட்டமும் குழப்பமும் அதிகரித்தது. அமெரிக்கா திரும்புவதற்கான விமான கட்டணங்கள் பன்மடங்கு உயர்த்தப்பட்டன. இப்படி தொழில் நிறுவனங்கள் மற்றும் H-1B விசா வைத்திருப்பவர்கள் உலகெங்கிலும் அதிர்ச்சியில் ஆழ்ந்த நிலையில், அடுத்த நாள் இரவு சாவகாசமாக ஏற்கனவே இந்த விசா வைத்திருப்பவர்களுக்கு இது பொருந்தாது என்றும், புதிதாக விண்ணப்பம் செய்பவர்களுக்கே இந்த கட்டண உயர்வு என்றும் வெள்ளை மாளிகை அறிவித்தது.

இது போன்ற விஷயங்களில் மோடிக்கும், டிரம்புக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதை பார்க்க முடிகிறது. பண மதிப்பிழப்பு நடவடிக்கையின் போதும், கொரோனா பெருந்தொற்றில் நாட்டையே முடக்கும் விதமான அறிவிப்பின்போதும் சில மணி நேர அவகாசம் கொடுத்து அமல்படுத்தினார் பாசிச மோடி. அதே போன்றதொரு அறிவிப்பைத்தான் அவருடைய எஜமானரான பாசிச டிரம்பும் செய்துள்ளார்.




டிரம்பின் இந்த அறிவிப்பு அமெரிக்கா மற்றும் இந்தியாவின் மென்பொருள் மற்றும் தொழில்நுட்பத் துறையை உலுக்கியுள்ளது. உலகெங்கிலும் உயர் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் படித்து அமெரிக்கக் கனவோடு இருந்த இளைஞர்கள் பலரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். H-1B விசா கிடைத்து அமெரிக்காவில் வேலைக்கு செல்பவர்களின் கிட்டத்தட்ட ஓராண்டு வருமானத்தை கட்டணமாக செலுத்த

**இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வேலைக்கு செல்பவர்கள் பெரும்பாலும் IIT, IIM போன்ற உயர்தர கல்வி நிறுவனங்களில் படித்தவர்கள்தான். இந்தக் கட்டண உயர்வால் அதிகம் பாதிக்கப்பட போவதும் இவர்கள்தான். மிகக் குறைந்த கட்டணத்தில் படித்துவிட்டு, நமது நாட்டிற்கு சேவை செய்யாமல் அதிக சம்பளம் பெறும் நோக்கில் அமெரிக்காவுக்கு பறக்கும் இவர்களுக்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையை உருவாக்க வேண்டும்.**

சொல்வது எந்த வகையில் நியாயம் எனப் பலரும் கொதிப்படைந்துள்ளனர்.

அமெரிக்கா மனிதாபிமானம் இன்றி நடந்து கொள்வதாக பாஜகவினர் கருத்து தெரிவித்தனர். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை ஈவிரக்கம் இன்றி வஞ்சிக்கும், பொது மக்களை வாட்டி வதைக்கும் பாஜக விற்கு மனிதாபிமானம் பற்றி பேசுவதற்கு துளியும் அருகதை இல்லை.

## இந்தக் கட்டண உயர்வுக்கு டிரம்ப் கூறும் காரணம்!

அமெரிக்காவில் தற்காலிகமாக பணி செய்வதற்காக வழங்கப்படும் H-1B விசா அதி உயர் தொழில் நுட்பத் திறன் கொண்டவர்களை அமெரிக்காவுக்கு அழைத்து வருவதற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் அமெரிக்கத் தொழிலாளர்களை நீக்கிவிட்டு, அவர்களை விட திறன் குறைவான, சம்பளம் குறைவான ஆட்களை இங்கு அழைத்து வருகிறார்கள்.

பல நிறுவனங்கள் இப்படி குறைவான சம்பளத்தில் ஆட்களை அமர்த்திக் கொள்ள எச் 1 பி விசாவை முறைகேடாக பயன்படுத்துகின்றனர். அதை தடுக்கவே இந்த கட்டண உயர்வு என்கிறார் டொனால்ட் டிரம்ப். மேலும் இது அமெரிக்காவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். டிரம்ப் கூறுவது ஓரளவு உண்மைதான். டிசிஎஸ், இன்போசிஸ், விப்ரோ, ஹெச்சிஎல் போன்ற நிறுவனங்கள் அமெரிக்கர்களுக்கு கொடுக்க வேண்டியதில் பாதி சம்பளம் கொடுத்து இந்தியர்களை வேலைக்கு எடுக்கிறார்கள். மலிவான கூலிக்கு தரமான வேலையை அவர்களிடம் வாங்குகிறார்கள்.

## இந்தியாவுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள்!

இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வேலைக்கு செல்பவர்கள் பெரும்பாலும் IIT, IIM போன்ற உயர்தர கல்வி நிறுவனங்களில் படித்தவர்கள்தான். இந்தக் கட்டண உயர்வால் அதிகம் பாதிக்கப்பட போவதும் இவர்கள்தான். மிகக் குறைந்த கட்டணத்தில் படித்துவிட்டு, நமது நாட்டிற்கு சேவை செய்யாமல் அதிக சம்பளம் பெறும் நோக்கில் அமெரிக்காவுக்கு பறக்கும் இவர்களுக்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையை உருவாக்க வேண்டும்.

கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ள இந்த சூழலில் இந்திய நிறுவனங்கள் இந்தப் பிரச்சனையை சமாளிக்க, மிகவும் அவசியமான ஊழியர்களை மட்டும் அமெரிக்காவில் பணியாற்றும் விதமாகவும், மற்றவர்களை அமெரிக்காவின் அண்டை நாடுகளில், அதாவது அமெரிக்க நேரத்திற்கு ஒத்துப்போகும் கனடா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பணிக்கு அமர்த்த திட்டமிட்டுள்ளன. இதன் மூலம் அமெரிக்காவில் இருந்து கிடைக்கும் வர்த்தக பாதிப்புகளை சரி செய்ய முடியும்.

ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதைக் காரணம் காட்டி சமீபத்தில் இந்தியா மீது 50 சதவீத அபராத வரியை விதித்தார் டிரம்ப். இந்திய-அமெரிக்க உறவில் இதனால் சிக்கல் ஏற்பட்ட நிலையில், அடுத்த கட்டமாக H-1B விசா கட்டண உயர்வு என்பது இந்தியாவுக்கு மேலுமொரு அடியாக அமைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் வழங்கப்பட்ட 10 லட்சம் விசாக்களில் 7,30,000 விசாக்களை இந்தியர்கள் தான் வைத்துள்ளனர்.

எனவே இந்த விசா கட்டண உயர்வால் அதிகம் பாதிப்புக்கு ஆளாவதும் இந்தியாவிலிருந்து வேலைக்கு செல்பவர்களாகத்தான் இருப்பார்கள். இந்தக் கட்டண உயர்வு அறிவிப்பை தொடர்ந்து தமிழகத்திலுள்ள ஆர்எஸ்எஸ் புரவலரான 'கிராமத்து முதலாளி' ZOHO நிறுவன அதிபர் ஸ்ரீதர் வேம்பு, "நிச்சயமற்ற சூழலில் நாம் அமெரிக்காவை நம்பத் தேவையில்லை. இந்தியாவிற்குத் திரும்பி இங்கு தொழிலை வளர்ப்போம்" என்கிறார்.

மோடியும் கிட்டத்தட்ட இதே கருத்தைத்தான் வழி மொழிந்திருக்கிறார். நாம் மற்றவர்களை நம்பி இருக்கக்கூடாது. தற்சார்பு தான் அனைத்திற்கும் தீர்வு என்று பேசியுள்ளார். ஏற்கனவே இந்தியப் பொருளாதாரம் ஏற்றுமதி சார்ந்தும், அந்நிய முதலீடுகள் சார்ந்தும், வெளிநாட்டு தொழில்நுட்பம் சார்ந்தும் இருக்கும் நிலையில், போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாத சூழலில் இவர்கள் பேசுவது அர்த்தமற்றதாகவும், வேடிக்கையாகவும்தான் உள்ளது. ஆனால் இருவரும் நாக்பூர் தயாரிப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவுக்கு உள்ள நெருக்கடிகள்!

அமெரிக்காவைப் பொறுத்தவரை அறிவியல், தொழில்நுட்பம், மென்பொருள், சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகளில் வேலை செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்து திறன்வாய்ந்த ஆட்கள் தேவைப்படும் நிலைதான் உள்ளது. இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தான் 1990 களில் H-1B விசா அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்டுக்கு ஒரு லட்சம் விசா வழங்கப்படுகிறது.

இது 3 ஆண்டுகள் செல்லுபடியாகும். மேலும் 3 ஆண்டுகளுக்கு இதை நீட்டிப்பு செய்ய முடியும். டிரம்ப் மீண்டும் அதிபராக பதவியேற்றப் பிறகு, அமெரிக்காவின் அரசியல் சூழலே மாறி வருகிறது. ஏற்கனவே 37 பில்லியன் டாலர் கடனை திருப்பி செலுத்த முடியாத நெருக்கடி இருப்பதாலும், ராணுவ செலவினங்கள் மென்மேலும் அதிகரித்துக் கொண்டே செல்வதாலும் அமெரிக்கப் பொருளாதாரம் கடும் நெருக்கடியை சந்தித்து வருகிறது.

இதிலிருந்து மீள்வதற்காக இறக்குமதி வரியை அதிகரிப்பதும், H-1B விசா கட்டணத்தை உயர்த்துவதின் மூலம் அமெரிக்கர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் டிரம்ப் எடுத்துள்ளதாகத் தெரிகிறது. மேலும் டிரம்பின் நண்பரான சார்லி கிர்க் ஒரு தீவிர வலது சாரியாக இருந்தார். சமீபத்தில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

“அமெரிக்கா நமது நாடு, அன்னியர்கள் வெளியேற்றப்பட வேண்டும், கிறித்துவத்தை, வெள்ளை மேலாதிக்கத்தை பாதுகாக்க வேண்டும். இந்தியர்களை இனிமேலும் உள்ளே விடக்கூடாது. முஸ்லிம்களோ, இந்துக்களோ இங்கு இருக்கக் கூடாது'' என்பதாக அவரது கருத்துப் பிரச்சாரம் இருந்தது. இங்குள்ள இந்துத்துவா கும்பலைப் போலவே அங்கு இந்த நபர் பேசி வந்தார்.

இது குறித்துப் பேசிய முன்னாள் அதிபர் ஒபாமா, “ஒரு அபாயகரமான நெருக்கடியை அமெரிக்கா சந்திக்க உள்ளது'' என்று குறிப்பிட்டார். அமெரிக்க ஜனநாயக கட்சியின் உறுப்பினரான அமி பெரா, விசா கட்டண உயர்வானது இந்திய அமெரிக்க உறவில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறினார். இந்த நடவடிக்கை அதிபர் டிரம்பின் வர்த்தக ஆலோசகராக உள்ள பீட்டர் நவரோவால் முன்மொழிக்கப் பட்டதாகவும் தெளிவு படுத்தினார்.

இந்தியாவுக்கு எதிரான மனநிலை கொண்டவரான அவர், அபராத வரிவிதிப்பு பிரச்சனைகளுக்கும் காரணமாக இருந்ததை எடுத்துக் கூறினார். சிலிக்கான் பள்ளத்தாக்கு உட்பட பரந்த அமெரிக்க தொழில்நுட்பத் துறையை இந்த அறிவிப்பு கடுமையாக பாதிக்கும் என்றும், இந்தக் கட்டணக் கொள்கையை தாம் ஏற்கவில்லை என்றும், ஏனெனில் இது அமெரிக்க நிறுவனங்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் கூறினார். இந்த பீட்டர் நவரோதான் “பிற இந்தியர்களை பார்ப்பனர்கள் சுரண்டுகிறார்கள்'' என்றும் கருத்து தெரிவித்தார். இவரது கருத்துக்கு எதிராக இங்குள்ள பார்ப்பனர்களோ, பார்ப்பன அடிவருடிகளோ வாயே திறக்கவில்லை. சுப்பிரமணியசாமி கூட வாய்மூடி மௌனியாகத்தான் உள்ளார். அமெரிக்கா என்றால் சங்கிகளுக்கு அஅவ்வளவு பயம்!

## இந்தியா என்ன செய்யப்போகிறது?

“ஹெச் 1 பி விசாக்களுக்கு ஒரு லட்சம் டாலர் கட்டணம் வசூலிக்கும் டிரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைக்கான விதிகளை உருவாக்குவது தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. திறமையுள்ள இந்தியர்களின் இடப்பெயர்வு இரு நாடுகளிலும் புதுமை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. தொழில்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறைகளுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்க விரும்புகிறோம். மேலும் இந்த விவகாரம் உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என நம்புகிறோம்'' என்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால். எஜமானர்களின் மனம் நோகாமல் வருடுகின்றனர்.

மேலும் இந்த விசா நடைமுறையில் மாற்றங்கள் செய்வதற்கான விதிமுறைகள் உருவாக்கம் தொடர்பாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை வெளியிட்ட அறிவிப்பை குறிப்பிட்ட ஜெய்ஸ்வால், தொழில்துறை மற்றும் பிற பிரிவினர் தங்களது கருத்துக்களை தெரிவிக்க ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவரிடம் அக்டோபர் 1 முதல் மருந்துப் பொருட்கள், பெரிய லாரிகள் மற்றும் தளவாடங்கள் மீது 100 சதவீத வரிகளை விதிக்கும் டிரம்ப் நிர்வாகத்தின் திட்டம் குறித்து கேட்டதற்கு, “அரசின் சம்பந்தப்பட்ட துறைகள் இது குறித்து ஆலோசித்து வருகின்றன என பதிலளித்தார். இப்போது வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. அனைத்து பிரச்சனைகள் குறித்தும் அதில் விவாதிக்க உள்ளோம்'' என்கிறார் அவர்.

## அதிகரிக்கும் அமெரிக்காவின் நிர்பந்தங்கள்!

இந்தியாவுக்கு எதிரான டிரம்பின் தாக்குதல்கள் மென்மேலும் தொடர்ந்து வருகின்றன. அடுத்த கட்டமாக மரபணு மாற்றப்பட்ட தானியங்கள், பால் பொருட்கள் போன்றவற்றை இந்தியாவுக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும், டாலர் மேலாண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ள பிரிக்ஸ் மற்றும் ஷாங்காய் கூட்டமைப்புகளில் இருந்து இந்தியா வெளியேற வேண்டும் என்றும் மிரட்டுகிறார் டிரம்ப்.

டிரம்பின் நிர்பந்தங்களுக்கு அடிபணியும் நிலையில் தான் மோடி உள்ளார். ஏனெனில் அதானி, அம்பானி போன்ற தேசங்கடந்த கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சார்பான ஆட்சியைத்தான் அவர் நடத்தி வருகிறார். சுயசார்பு என்று ஒரு புறம் பேசிக்கொண்டே ஏகாதிபத்தியங்களை சார்ந்த பொருளாதார மற்றும் வெளியுறவு கொள்கைகளைத்தான் மோடி கடைப்பிடித்து வருகிறார்.

இந்தியாவில் பாசிச மோடி அரசுக்கு எதிரான அதிருப்தி மனநிலையை திசை திருப்ப நரேந்திர மோடி தேசிய வெறியை தூண்டுவதைப் போலவே, அமெரிக்காவில் டிரம்ப் தேசநலன் என்ற பெயரில் நாடகமாடுகிறார். ஆனால் உண்மையில் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து திசை திருப்பவே நடைமுறை சாத்தியங்களற்ற அதிரடி அறிவிப்புகளை செய்து வருகிறார். இந்த பாசிஸ்டுகளை ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றுவதன் மூலம்தான் மக்களுக்கான ஆட்சியை மலரவைக்க முடியும். அது இந்தியா, அமெரிக்கா இரண்டுக்கும் பொருந்தும்.

■ அன்புச்செல்வன்

# வக்ஃப் சட்டத் திருத்தத்தை ஏற்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு! இஸ்லாமிய மக்களுக்கு பேரிடி!

வக்ஃப் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு பிறகு கடந்த ஏப்ரல் 08-ஆம் தேதி அமலுக்கு வந்தது. இந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்து முஸ்லிம் அமைப்புகள் மற்றும் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் செப்டம்பர் 15 ஆம் தேதி உத்தரவிட்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு, ‘‘வக்பு திருத்த சட்டம் முழுமைக்கும் இடைக்கால தடை விதிக்க முகாந்திரம் இல்லை. ஆனால் இந்த சட்டத்தில் உள்ள சில பிரிவுகளுக்கு நாங்கள் இடைக்கால தடை விதித்துள்ளோம்’’ என வக்ஃப் திருத்த சட்டத்தினை முழுமையாக ரத்து செய்யாமல், சில விதிகளுக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பை, ஒன்றிய பாஜக அரசும் வழக்கு தொடுத்த எதிர்கட்சிகளும் என இரு தரப்பிலும் வரவேற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும். இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் புரட்சிகர ஜனநாயக அமைப்புகள் இடைக்கால தீர்ப்பை விமர்சித்துள்ளன.

## காவி கும்பலுக்கு சாதகமான இடைக்கால தீர்ப்பு!

கார்ப்பரேட்டுகளுடன் இணைந்து கொண்டு பாசிச பாஜக வக்ஃப் வாரிய சொத்துக்களை மொத்தமாக முழுங்கவும், இஸ்லாமியர்களை இரண்டாம்தர குடிமக்களாக மாற்றவும் சட்ட திருத்தத்தில் உள்ள சிறு தடைகளையும் சரி செய்து கொள்ளும் வகையில் புதிய விதிகளை உருவாக்கி கொள்வதற்கே உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பு உதவும் என்பதே நிதர்சனமான உண்மை. இதனால் தான் தீர்ப்பை வரவேற்று பேசியுள்ளார் பாஜக அமைச்சர். அதாவது, ‘‘தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம். உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ள விதிகள் குறித்து அரசு ஆராய்ந்து பார்க்கும்’’ என்று ஒன்றிய சிறுபான்மை துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறியுள்ளதை கவனித்தாலே காவி பாசிஸ்டுகளின் திட்டம் புரியும். இடைக்கால தீர்ப்பு என்பது இஸ்லாமிய மக்களுக்கு உச்ச நீதிமன்றத்தால் இழைக்கப்பட்ட துரோகமாகும். இதனை கொண்டாடவோ, வரவேற்கவோ ஏதுமில்லை.

ஐந்து வருடங்கள் இஸ்லாத்தை பின்பற்றியவர்கள் மட்டுமே வக்ஃப்-க்கு தன்னுடைய சொத்தை தானமாக வழங்க முடியும் என்கிற இஸ்லாமியர்களுக்கு எதிரான விதிக்கு உச்சநீதிமன்றம் தடை விதிக்கவில்லை. இதன் மூலம் இந்தியாவில், எந்தவொரு அமைப்பு, மதம் அல்லது தொண்டு நிறுவனங்கள் மீது நம்பிக்கையை கொண்ட எந்தவொரு தனி நபரும் தனது சொத்துக்களை நன்கொடையாக வழங்க முடியும் என்ற ஜனநாயக உரிமையை சட்டபூர்வமாக பறிக்கும் காவி பாசிசத்திற்கு துணை போயுள்ளது உச்ச நீதிமன்றம்.

மேலும், ஒருவர் ஐந்து ஆண்டுகள் இஸ்லாத்தை பின்பற்றுகிறாரா என்பதை தீர்மானிக்கும் விதிகளை மாநில அரசுகள் உருவாக்கி கொள்ளலாம் என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது மிகவும் ஆபத்தானதாகும். பாஜக ஆளக்கூடிய மாநில அரசுகள் சிறுபான்மை மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தான் தொடர்ச்சியாக கடைபிடித்து வருகின்றன.




இந்த சூழலில் இஸ்லாமியர்கள் யார் என்பது பற்றிய விதிமுறைகளை வரையறை செய்யும் உரிமையை மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் கொடுத்து விட்டதால் காவி பாசிஸ்டுகள் ஆளும் மாநிலங்களில் 05 ஆண்டுகளாக இஸ்லாத்தை பின்பற்றும் நபர்களை இஸ்லாத்தை பின்பற்ற வில்லை என நிரூபிக்கும் வகையிலான விதிகளை உருவாக்கி வக்ஃப் வாரியத்திற்கு சொத்துக்கள் சேர்க்க விடாமல் தடுக்க முடியும். இதன் மூலம் சிறிது சிறிதாக வக்ஃப் வாரியத்திற்கும் இஸ்லாமியர்களுக்கும்




**அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவே இடைக்கால தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் மூலம் இருக்கின்ற அரசியல் அமைப்பு சட்டம் உழைக்கும் மக்களுக்கானது அல்ல. பாசிச கும்பலுக்கானதே என்பதை நிரூபித்து விட்டது உச்சிக் குடுமி மன்றம்.**

உள்ள உறவை பிரித்து வக்ஃப் வாரியத்தை கட்டுப்படுத்தும் பாதையை பாசிச பாஜகவிற்கு வகுத்துக் கொடுத்து விட்டது உச்ச நீதிமன்றம்.

## சிறுபான்மையினருக்கு எதிரான உச்சி குடுமி மன்றத்தின் தீர்ப்பு!

இடைக்கால தீர்ப்பினை முழுவதும் கவனமாகப் படித்தால், உச்ச நீதிமன்றம் தனது குடுமியை மறைக்க மறந்து விட்டது என்ற உண்மை புலப்படும். அதாவது தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவும், சிறுபான்மை மக்களுக்கு விரோதமாகவும் உள்ள நான்கு முக்கிய அம்சங்களை உச்ச நீதிமன்றம் ரத்து செய்யவில்லை. அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவே இடைக்கால தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் மூலம் இருக்கின்ற அரசியல் அமைப்பு சட்டம் உழைக்கும் மக்களுக்கானது அல்ல. பாசிச கும்பலுக்கானதே என்பதை நிரூபித்து விட்டது உச்சிக் குடுமி மன்றம்.

இந்து அல்லாதவர்கள் இந்து அறநிலையத் துறையில் உறுப்பினர்களாக இருக்க முடியாது. அதேபோல், சீக்கிய குருதுவாராக்களில் சீக்கியர் அல்லாதோர் அதன் நிர்வாக குழுவில் பங்கு பெற முடியாது என்பது விதியாக உள்ளது.

காஞ்சி சங்கர மடத்திலும், திருப்பதி திருமலை தேவஸ்தான குழுவிலும் இந்து அல்லாத ஒருவரை சேர்ப்பதை கடுமையாக எதிர்க்கின்றனர் காவி பாசிஸ்டுகள். சமீபத்தில் இந்து அல்லாத 18 பேரை வேறு துறைகளில் நியமிக்க அல்லது விருப்ப ஓய்வு (VRS) எடுத்துக்கொள்ள அனுமதிக்குமாறு கூறி நடவடிக்கை எடுத்தது திருப்பதி தேவஸ்தானம். அதேபோல், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள கோவில் ஒன்றில், அறங்காவலராக இஸ்லாமிய பெயர்கொண்ட இந்து ஒருவர் நியக்கமிப்பட்டதற்கு இஸ்லாமியர் என நினைத்து காவி பாசிஸ்டுகள் புனிதம் கெட்டு விட்டதாக கூப்பாடு போட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், வக்ஃப் வாரியத்திற்குள் நுழைந்து மொத்த சொத்தையும் அபகரிக்க துடியாய் துடிக்கின்றனர் காவி பாசிச கும்பல். இதற்காகவே வக்ஃப் வாரியங்களில் முஸ்லிம் அல்லாதவர்களைச் சேர்ப்பது தொடர்பான திருத்தத்தை கொண்டு வந்தனர். இது அரசியல் அமைப்பு சட்டத்தின் 26 வது பிரிவுக்கு எதிரானது என்பதை பற்றி சிறிதும் கவலை கொள்ளாமல் உச்சி குடுமி மன்றம் எண்ணிக்கையை குறைத்து கொள்ள சொல்கிறது. அதாவது, மத்திய வக்ஃப் கவுன்சிலில் முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கு மற்றும் மாநில வக்ஃப் வாரியங்களில் மூன்று என குறைத்து கொள்ளுங்கள் என காவி கும்பலை தடவி கொடுத்துள்ளது. இதன் மூலம் வக்ஃப் வாரியங்களில் காவி கும்பல் நுழைந்து கட்டுப்படுத்துவதற்கான அனுமதிக்கான அங்கீகாரத்தை கொடுத்து விட்டது உச்சிக் குடுமி மன்றம்.

வக்ஃப் சொத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்; பதிவு செய்யப்படவில்லை எனில் அந்த சொத்துக்களை அரசு கைப்பற்றி கொள்ளலாம் எனும் விதிக்கும் தடை விதிக்கவில்லை என்பதுடன், தீர்ப்பின் எந்த பக்கத்திலும் இந்த விதிகள் பற்றி குறிப்பிடாமல், காவி கும்பலுக்கு நேரடியாக துணை போயுள்ளது. குறிப்பாக, பாரம்பரியமான பள்ளிவாசல்கள் மற்றும் அதன் சொத்துகள் உள்ளிட்டவற்றை இஸ்லாமிய மக்களிடமிருந்து அபகரித்து கொள்வதற்கு காவி பாசிஸ்டுகளுக்கு தடை இல்லை என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டது.

மாநில வக்ஃப் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக முஸ்லிம் அல்லாத ஒருவரை அனுமதிக்கும் விதிக்கும் தடை விதிக்கவில்லை. மாற்றாக முடிந்தவரை ஒரு முஸ்லிம் நபரை நியமிக்க முயற்சிக்க வேண்டும் என காவி கும்பலுக்கு விருப்ப உரிமை (options) தருகிறது உச்ச நீதிமன்றம். இதனை பயன்படுத்தி நாங்கள் முயற்சித்தோம் திறமையான யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறி தாங்கள் விரும்பும் ஒருவரை தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கும் காவி கும்பல்.

இதனால் முழு வக்ஃப் கட்டமைப்பும் சிதைந்து போவதையும், யாரும் வக்ஃபுக்கு எந்த சொத்தையும் கொடுக்கக்கூடாது என்பதையும், மீதமுள்ள வக்ஃப்

இஸ்லாமிய சமூகத்திடமிருந்து பறிக்கப்பட வேண்டும் என்ற காவி பாசிச கும்பலின் நோக்கம் எளிதில் நிறைவேற உதவியுள்ளது இடைக்கால தீர்ப்பு.

## இடைக்கால தீர்ப்பின் சதித்தனமும்! எதிர்க்கட்சிகளின் பாசிசத்திற்கு சாதகமான அணுகுமுறையும்!

இடைக்கால தீர்ப்பின் ஒரே ஆறுதல், சட்ட திருத்தத்தில் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம் "தனிப்பட்ட குடிமக்களின் உரிமைகளை ஒரு மாவட்ட ஆட்சியர் தீர்மானிக்க அனுமதிக்க முடியாது. இது அதிகாரப் பிரிவினையை மீறும் செயல். ஆட்சியருக்கு அத்தகைய அதிகாரங்கள் அளிக்கும் விதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்" என்று கூறியுள்ளது மட்டுமே. மற்ற அனைத்தும் காவி கும்பலுக்கு சாதகமானதே. இதனை வரவேற்பதோ அல்லது இஸ்லாமியர்களுக்கு சாதகமானது என கூறுவதோ காவி பாசிசத்திற்கே உதவி புரிவதாக அமையும்.

நீதித்துறை முழுவதும் பாசிசமயமாகியுள்ள நிலையில் பாசிச கும்பலுக்கு ஆதரவான தீர்ப்பையே வழங்கும் என்பதே உண்மை. இதனால் தான் காவி பாசிச கும்பலுக்கு ஆதரவாக முழுச்சட்டத்தை இரத்து செய்யாமல், சில விதிகளுக்கு மட்டும் இடைக்கால தடை என ஏமாற்றியுள்ளது. இதனை புரிந்து கொள்ளாமல், இடைக்கால தீர்ப்பினை இஸ்லாமிய அமைப்புகள் அனைத்தும் எதிர்த்து இருந்தாலும் இறுதி தீர்ப்பில் சாதகமாக வரும் என நம்புகின்றனர். நாடாளுமன்றக் கூட்டுக் குழுக் கூட்டங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்த ஆலோசனைகளும், திருத்தங்களும் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் இரண்டாவது நாளில் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்தது ஆகியவற்றை இணைத்து பார்த்தால் பாசிச கும்பல் தனது அகண்ட பாரத கனவிற்காக அரசு கட்டமைப்பு முழுவதையும் தனக்கு சாதகமாக செயல்படும் வகையில் மாற்றி விட்டதை உணர முடியும்.

ஆனால், எதிர்கட்சிகள் இடைக்கால தீர்ப்பை வரவேற்று இருப்பது மக்களிடம் நாங்கள் நீதிமன்றத்திற்கு சென்று வெற்றி பெற்றுள்ளோம் என்று கூறி ஓட்டு அரசியலில் வாக்கு வங்கியை உயர்த்திக் கொள்வதற்கான முன்னேற்பாடு தவிர வேறு ஏதும் இல்லை. ஓட்டு அரசியலிலே மூழ்கி விடுவதால் காவி பாசிசத்தின் கோர முகத்தை மேலோட்டமாக அணுகுகின்றனர். இதனால் காவி பாசிசத்திற்கு எதிராக சில அறிக்கைகள் விடுவது, போராட்டங்களை நடத்துவது என்பதை தாண்டி பெரிய அளவில் வினையாற்றுவதில்லை.

இதன் விளைவே, சிறுபான்மை மக்களுக்கு எதிராக காவி பாசிச கும்பலுடன் உச்சநீதிமன்றமும் கூட்டுச் சேர்ந்து அநீதி இழைத்து உள்ளதை அம்பலப்படுத்தி, காவி பாசிசத்திற்கு எதிராக மக்களை ஒன்றிணைத்து போராட்டங்களை கட்டியமைப்பதற்கு மாற்றாக, உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடையை வரவேற்பது என்று காவி பாசிச கும்பலுக்கு ஏற்ப சாதகமான சூழலை தங்களை அறியாமலேயே உருவாக்குகின்றன எதிர்க்கட்சிகள்.

எதிர்க்கட்சிகள் இருக்கின்ற அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாத்து வைத்துக் கொண்டும், தேர்தல் மூலமும் மாற்றத்தை கொண்டு வர முடியும் என பகல் கனவு காண்கின்றனர். இதன் மூலமாக மதச் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு எதிரான துரோகத்திற்கும், அவர்களின் சொத்துக்களை சட்டப் பூர்வமாகவே பறிக்கும் அயோக்கியத்தனத்திற்கும் துணை போயுள்ளனர் என்பதே நிதர்சனமாகும்.

உண்மையில் நடைமுறையில் இருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் பார்ப்பன பனியாக்கள் ஆகியோரின் நலன்களை பாதுகாக்கும் வகையில் மாற்றப்பட்டு விட்டது. அதே நேரத்தில் அரசியல் அமைப்பு சட்டம் அமுலான காலத்திலிருந்தே நாட்டின் பெரும்பான்மை மக்களான பட்டியலினமக்கள், பழங்குடிகள், மதச் சிறுபான்மையினரை பாதுகாக்க தவறிவிட்டது. அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை கானல் நீராகி விட்டது. ஏறக்குறைய 75 ஆண்டு காலத்தில் 106 முறை திருத்தப்பட்ட இந்த சட்டத்தை அப்படியே பாதுகாக்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருந்தாது. இதுவரை செய்யப்பட்டுள்ள திருத்தங்களில் எதுவும் இந்திய அரசியல் அமைப்பின் அடிப்படையான கட்டமைப்பை மாற்றவோ, திருத்தவோ செய்யவில்லை. அதற்கு மாறாக மேலும், மேலும் இந்திய ஒன்றிய அரசு என்கின்ற மையப்படுத்தப்பட்ட அரசை வலிமையானதாக ஆக்கிடவும், நாட்டின் சொத்துக்கள் சிலரிடம் மட்டுமே குவிக்கப்படுவதை நன்றாக ஊக்கப்படுத்தி பாதுகாக்கவும் ஏற்ற வகையிலேயே இந்த திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த அரசியல் அமைப்பு சட்டத்தை வைத்துக் கொண்டு சிறுபான்மை நலன்களை பாதுகாக்கவே முடியாது. காவி பாசிசத்திற்கு எதிராக சிறுபான்மை மக்களுடன், விவசாயிகள், தொழிலாளர்கள் மாணவர்கள், இளைஞர்கள், ஜனநாயக சக்திகளை ஒன்றிணைத்து குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் மக்கள் முன்னணி, ஐக்கிய முன்னணி உருவாக்கி கீழிருந்து எழுச்சியின் மூலம் ஜனநாயகக் கூட்டரசை நிறுவினால் மட்டுமே சிறுபான்மையினர் பாதுகாப்பு சட்டத்தை பெயரளவில் இல்லாமல் அதன் உண்மைப் பொருளில் அமல்படுத்த முடியும். குறிப்பாக அரசியலில் இருந்து மதத்தை பிரித்து தனிநபர் விவகாரமாக மாற்றி மதச் சிறுபான்மையினரின் மதவழிபாட்டு உரிமைகளை உத்திரவாதப்படுத்தவும் முடியும்.

அதே நேரத்தில் உடனடியாக மதச் சிறுபான்மையினரின் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்துவதற்கு தற்போதிலிருந்தே சமூக நல்லிணக்க குழுக்களை உருவாக்கி அதன் மூலம் உத்தரவாதமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு செயல்பட வேண்டும். இவைகள் மட்டுமே இஸ்லாமியர் உள்ளிட்ட மத சிறுபான்மையினரின் வாழ்வாதாரத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கும்.

■ விஜயன்

# இந்துத்துவாவிற்கு வால்பிடித்து பாசிஸ்டுகளுக்கு பாதையமைக்கும் சிபிஎம்-திமுக ஓட்டரசியல்!

“பாசிச சர்வாதிகாரம் நிறுவப்படுவதற்கு முன்னாள் முதலாளித்துவ அரசுகள் சாதாரணமாக பல்வேறு ஆரம்பக்கட்டங்களை கடந்து செல்கிறது. அதைத் தொடர்ந்து பலவிதமான பிற்போக்கு நடவடிக்கைகளை நிறுவுகிறது. அந்த பிற்போக்கு காரியங்கள் பாசிசம் அதிகாரத்துக்கு வருவதற்கு நேரடியாக உதவி வசதி செய்து கொடுக்கிறது.” - பல்கேரிய கம்யூனிஸ்ட் தலைவர் தோழர். ஜார்ஜ் டிமிட்ரோவ்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் சபரிமலை ஐயப்பன் கோவிலை நிர்வகிக்கும் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் பவளவிழாவை முன்னிட்டு உலக ஐயப்பன் மாநாட்டை கேரளாவை ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசு நடத்தியது. இம்மாநாட்டையொட்டி சபரிமலை, பம்பை, நிலக்கல் உள்ளிட்ட அதன் சுற்றுவட்டார பகுதிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக சுமார் 1,034 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருப்பதி ஏழுமலையான் கோயில்போல சபரிமலை ஐயப்பன் கோயிலை ஒரு உலகலாவிய யாத்திரை தலம் ஆக்குவதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று கேரளா அரசு தரப்பில் கூறப்பட்டது.

இந்த மாநாட்டில் ஆர்எஸ்எஸ்-சைச் சேர்ந்தவர்களும், ஸ்ரீநாராயண தர்மபரிபாலன யோகம் (SNDP), நாயர் சேவை சங்கம் (NSS) போன்ற சாதிய அமைப்புகளும் கலந்துகொண்டன. தமிழ்நாட்டில் ஏற்கனவே முருகன் மாநாட்டை நடத்திய ‘அனுபவமுள்ள’ தமிழக முதல்வருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் முதல்வர் போகாமல் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சரும், அரை சங்கியுமான சேகர்பாபுவையும், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சரும், பக்தி பாரம்பரியமுள்ள பழனிவேல் தியாகராஜனையும் அனுப்பி வைத்தார்.

தமிழ்நாட்டில் திமுக அரசு நடத்திய முருகன் மாநாடும், தற்போது கேரளா மார்க்சிஸ்டுகள் நடத்தியுள்ள ஐயப்பன் மாநாடும் தாங்கள் இந்து மதத்துக்கு எதிரானவர்களல்ல என்று இந்துக்கள் மத்தியில் பதியவைப்பதற்கும் எதிர்வரும் தேர்தல்களில் இந்து ஓட்டுகளை அறுவடை செய்வது பதவியில் நீடிப்பதும்தான். ஆர்எஸ்எஸ்-பாஜக உள்ளிட்ட பாசிச சங்கபரிவார கும்பல் இக்கட்சிகளை இந்துக்களுக்கு எதிரானவை என்று மக்கள் மத்தியில் தொடர் பிரச்சாரம் செய்துவருவதால் அதை நேருக்கு நேர் எதிர்கொள்ள திராணி இல்லாமல் திமுக மற்றும் மார்க்சிஸ்டுகள் இத்தகைய மாநாடுகளை நடத்தி அக்கும்பலின் நிகழ்ச்சிநிரலுக்கு அடிபணிந்து வருகின்றன.

இதில் இன்னும் கொடுமையாக, இம்மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசிய கேரள முதல்வர் பினராயி விஜயன், சாதியப் படிநிலையை எப்பாடுபட்டாவது காக்கவேண்டும் எனும், “பகவத் கீதையும், கேடுகெட்ட ஆபாச புராண கட்டுக்கதைகளைக் கொண்ட சபரிமலை ஸ்தல புராணமும் சமத்துவத்தை போதிக்கிறது” என்று இந்துத்துவா பொய்யர்களுக்கு சற்றும் சளைக்காமல் பேசியுள்ளார். இனிமேல், கேரளத்தில் “சாமியே சரணம் அய்யப்பா! நாத்திகம் பேசும் மார்க்சியம் பொய்யப்பா” என சரண கோஷம் காதைப் பிளக்கும்.





## உலக ஐயப்பன் மாநாடு எதற்காக?

உலக ஐயப்ப மாநாட்டை நடத்துவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது முன்னணி மேலே குறிப்பிட்ட காரணங்களைக் கூறினாலும் 2018-ஆம் ஆண்டில், இளம் பெண்கள் கோயிலுக்குள் நுழைவதற்கு அனுமதியளித்த உச்சநீதிமன்ற உத்தரவை இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசு அமல்படுத்த முயன்றது. அதை எதிர்த்து ஆர்எஸ்எஸ்-பாஜக உள்ளிட்ட இந்துத்துவ பாசிச சக்திகளும், மேற்கண்ட NSS என்ற உயர்சாதி அமைப்பும் கலவரங்களை நடத்தின. அதன்பிறகு நடந்த 2019 பொதுத்தேர்தலில் இடது முன்னணிக்கு மொத்தமுள்ள 20 இடங்களில் ஒன்றை மட்டுமே வெல்ல முடிந்தது. அதற்கடுத்த 2024 பொதுத்தேர்தலிலும் நான்கு தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. இந்தத் தோல்விகள் பெரும்பான்மையான இந்து மக்கள் தங்கள் மீது அதிருப்தியில் இருப்பதாகக் கருதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசு அவர்களை தாஜா செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதிதான் உலக ஐயப்ப மாநாடு.

இதைப்போன்ற இந்துமத சார்பான நடவடிக்கைகள் மூலம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தல்களிலும், அடுத்த ஆண்டு மே மாதத்தில் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் இந்துக்களின் ஓட்டைப் பெற்று மீண்டும் ஆட்சிக்கு வரமுடியும் என்று கருதுகிறது. அதனால்தான் சமூகநீதி பேசும் திமுகவும், சமதர்மம் பேசும் மார்க்சிஸ்டுகளும் தங்கள் தடம் விலகிப்போய் மிதவாத இந்துத்துவாவை கையிலெடுக்கின்றன. ஆனால் உண்மையில் இக்கட்சிகள் தாஜா செய்வது இந்துமதத்தின் சாதிய அடுக்குகளில் மேல்நிலையில் இருக்கும் பார்ப்பனக் கும்பலையும், மற்ற உயர்சாதி இந்துக்களையும்தான் என்பது வெளிப்படை. ஏனெனில் பெரும்பாலான இந்துக்கள் பார்ப்பனிய வேதங்களையும், வழிபாட்டு முறைகளையும் கடைபிடிப்பதில்லை, சரியாகச் சொன்னால் அத்தகைய வழிபாட்டு முறைகளுக்கு எதிராகத்தான் உள்ளார்கள்.

ஆனால் அனைத்தையும் தின்று செரிக்கும் பார்ப்பனீயத்தை, அதன் நேரடி விளைவான இந்துத்துவாவை பகுத்துப் பார்த்து தனிமைப்படுத்துவதற்கு பதிலாக இந்துக்களை ஒற்றைத் தன்மையுடன் பார்த்து பார்ப்பனீயத்திடம் சரணடைவது தற்கொலைப் பாதை என்பதை இக்கட்சிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

## மிதவாத இந்துத்துவா – ஒரு சுடுகாட்டுப்பாதை!

தங்களுக்கென ஒரு கட்சி இல்லாததாலும், உள்ளிருந்தே அழிப்பது என்ற நரித்தனத்தாலும் காந்தி காலம் முதல் இன்றுவரை காங்கிரசில் வியாபித்திருக்கும் பார்ப்பனர்களால் மிதவாத இந்துத்துவாவை காங்கிரஸ் கைக்கொண்டு வருகிறது. இதற்கு வரலாறு முழுக்க பல்வேறு உதாரணங்கள் இருந்தாலும் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோதுதான் முஸ்லிம்களுக்கு எதிரான நெல்லி படுகொலை (1983), ஹசிம்புரா படுகொலை (1987), மும்பை கலவரம் (1992) போன்ற பல கலவரங்கள் அதிகார வர்க்கத்தால், இந்துத்துவ குண்டர்களால் நடத்தப்பட்டன. அன்றைய பிரதமரான இராஜீவ் காந்தியால் இரகசியமாக பாபர் மசூதியின் பூட்டு திறந்துவிடப்பட்டதும், தொடர்ந்து நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்தில் அம்மசூதி இந்துத்துவ வெறியர்களால் இடிக்கப்பட்டதும் நடந்தன.

தற்போதுகூட தான் ஒரு பார்ப்பனர் என்று ராகுல்காந்தி பூணூலை உருவிக்காட்டுவதும், கோவில் கோவிலாக செல்வதும், கேரளாவின் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிதரூர் பாசிச மோடியைப் புகழ்வதும், கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவகுமார் சட்டப்பேரவையில் ஆர்எஸ்எஸ்-ன் பாடலைப் பாடுவதும், மத்திய பிரதேசத்தின் கமல்நாத் ராமாயணத்தையும், அனுமன் பாடல்களையும் மக்களிடம் பரப்ப எடுத்த முயற்சிகளையும் கூறலாம். மிதவாத இந்துத்துவாவின் நோக்கமும் இராமராஜ்ஜியம், தீவிரவாத இந்துத்துவாவின் நோக்கமும் இராமராஜ்ஜியம்தான் எனும்போது, இரண்டு தரப்பும் ஒரே எதிரியைக் குறிக்கும்போது அந்த எதிரி மீது அதிரடியாக தாக்குதல் தொடுக்கும் தீவிரவாத இந்துத்துவாவைதான் மக்கள் விரும்புவர். அதைத்தான் வடமாநிலங்களில் மிதவாத இந்துத்துவாவை முன்னிறுத்திய காங்கிரசின் தேர்தல் தோல்விகள் வெளிச்சம்போட்டுக்காட்டுகின்றன.

இதுமட்டுமல்லாமல், தற்போது ராகுல்காந்தி கையிலெடுத்துள்ள ஓட்டுத்திருட்டு விவகாரத்திலும்கூட அவர் குறிப்பிடும் தேர்தல் மோசடிகள் காங்கிரசின் வட்டாரத் தலைவர்களுக்கு, வாக்குச்சாவடி முகவர்களுக்குத் தெரியாமலா நடந்திருக்க முடியும் என்ற கேள்வியும் எழுகிறது. ஏனெனில் மிதவாத இந்துத்துவாவில் அவர்களும் அடக்கம்தானே?

## சோரம் போகும் முற்போக்காளர்களும், இடதுசாரிகளும்!

“இது வேதங்களின் நாடு” என்று தனது பார்ப்பன பெருமையை பேசிய ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடுவையும், “நான் முதலில் ஒரு பார்ப்பனர், அதன் பின்னரே கம்யூனிஸ்ட்” என்று தனது பூணூலை உருவிக்கொண்ட சோம்நாத் சாட்டர்ஜீயையும் தங்களது முன்னோர்களாகக் கொண்டு அநீதியான “அரியவகை ஏழைகளுக்களுக்கான” இடஒதுக்கீட்டை ஆதரித்தது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பார்ப்பன அடிவருடித்தனத்துக்கு சில எடுத்துக்காட்டுகள்.

கேரளாவில் சேரிகள் மற்றும் நிலச்சீர்திருத்தங்கள் குறித்த ஒரு ஆய்வறிக்கையானது இடதுசாரி மற்றும் வலதுசாரி நிர்வாகங்கள் எந்தவித வேறுபாடும் இல்லாமல் தலித் சமூகங்களை எவ்வாறு ஓரங்கட்டி, பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகளுக்குத் தள்ளியுள்ளன என்பதை விளக்குகிறது. அம்மாநிலத்தில் நிலச்சீர்திருத்தங்கள் மூலம் உழைப்பவருக்கு நிலங்களை பகிர்ந்தளிப்பதில் செய்யப்படும் மோசடிகளையும்

அம்பலப்படுத்துகிறது, கேரளாவில் இடதுசாரிகளின் ஆட்சி பெரும்பாலும் நால்வர்ண ஆதிக்க அமைப்பாக செயல்பட்டு இந்துத்துவா நலன்களுடன் ஒத்துப்போவதை அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டிலும் பெரியாரின் வாரிசுகள், பகுத்தறிவு நேசர்கள் என்று பேசிக்கொண்டே முருகன் மாநாட்டை ஆளும் திமுக அரசாங்கம் நடத்துகிறது. அந்த மாநாட்டில் அர்ஜுன் சம்பத் போன்ற கடைந்தெடுத்த பார்ப்பன பயங்கரவாத கழிசடைகளையும் மேடையேற்றி அழகு பார்க்கிறது. தவிர பல்லாயிரம் கோடி தொகைகளைக் கொட்டியழுது கோவில்களுக்குக் குடமுழுக்கு நடத்துவது, பாலாபிஷேகம் நடத்துவது; நாள்தோறும் திருவிழாக்களை கொண்டாடுவது என்று இந்துத்துவா கும்பலைப் போலவே மக்களை பக்தி போதையில் ஆழ்த்தி ஓட்டுகளை அறுவடை செய்ய ஆளாய்ப் பறக்கிறது.

இந்துக்களுக்கு எதிரான கட்சிகள் என்று ஆர்எஸ்எஸ்-பாஜக சங்கப்பரிவார கும்பல் அனுதினமும் செய்துவரும் பிரச்சாரத்துக்கு எதிராக கருத்தியல் ரீதியில் இக்கும்பலை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தாமல் நாங்கள் இந்துக்களுக்கு எதிரிகள் அல்ல என்று காட்ட இத்தகைய போங்காட்டத்தை ஆடி மக்களின் பகுத்தறிவை முடமாக்குகின்றன. இன்னும் குறிப்பிடத்தக்க அம்சமாக, தங்கள் கட்சிகளில் முஸ்லிம்களின் பங்களிப்பையும், குறிப்பாக தேர்தலில் சீட்டு வழங்குவதிலும், அமைச்சரவையில் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதையும் இக்கட்சிகள் கணிசமாகக் குறைத்துவருகின்றன.

அரசியல் ரீதியில் இப்படியென்றால் கலாச்சார பண்பாட்டு ரீதியில் மக்களிடம் பகுத்தறிவையும், அறிவியல் மனப்பான்மையையும், தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றலையும் வளர்ப்பதை, பிரச்சாரம் செய்வதை விட்டுவிட்டு அவர்களிடமுள்ள மூடப்பழக்கவழக்கத்தையும், பிற்போக்குத்தனங்களையும் ஊக்குவித்து தங்களுக்கு ஓட்டு விழுவதை மட்டுமே உறுதிப்படுத்திக்கொள்கின்றன. இதனால்தான் இந்த 22-ஆம் நூற்றாண்டிலும் சாதியைப் பிடித்துக்கொண்டு தொங்குவதும், சாதியைக் காப்பாற்றிக்கொள்ள சாதிவெறி கொடுமைகள், படுகொலைகள் நாள்தோறும் நடந்தவண்ணம் உள்ளன.

இதைப்போன்ற மிதவாத இந்துத்துவா கொள்கைகையைக் கடைபிடித்துவந்த காங்கிரஸ் கட்சியானது தீவிர இந்துத்துவா கட்சியான பாரதிய ஜனதாவால் துடைத்தெறியப்பட்டதுதான் வரலாறு. ஒன்றியத்தில் காங்கிரசை வீழ்த்தி அரசியலதிகாரத்துக்கு வந்து 12 வருடங்கள் ஆகியும் பாஜக பாசிஸ்டுகளை ஆட்சியிலிருந்து அகற்றமுடியவில்லை. அதற்கு காரணம் இந்துத்துவாவுக்கு எதிரான, அதனுள்ளே புரையோடிப்போயுள்ள சனாதனத்தை, அதாவது சாதிய படிநிலையைத் தகர்க்கும் வகையிலான பகுத்தறிவு, சமூகநீதி, சமவாய்ப்பு என்ற அடிப்படையில் நாட்டின் பெரும்பான்மையோருக்கான அரசியல் செய்யாமல், பார்ப்பனர்களையும், அவர்களின் அடிவருடிகளையும் தாஜா பண்ணும் மிதவாத இந்துத்துவாவை பின்பற்றுவதுதான். அதே வழியில்தான் அயோத்தியில் ராமன், ஒரிஸ்ஸாவில் பூரிஜெகன்நாதர், என்ற வரிசையில் தற்போது தமிழகத்தில் முருகன், கேரளாவில் ஐயப்பன் என மதவாத அடையாளங்களை முன்னிறுத்தி மார்க்சிஸ்டுகளும், திமுகவும் பாசிஸ்டுகளுக்கு ஆள்பிடித்துத் தருகின்றனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான கேரள மாநில அரசாங்கத்தால் நடத்தப்பட்ட உலக ஐயப்ப சங்கமம், அரசு ஆதரவுடன் நடத்தப்படும் பார்ப்பனமயமாக்கத்தின் துலக்கமான எடுத்துக்காட்டாகும். இதன்படி இந்துக் கடவுளான ஐயப்பனை மையமாகக் கொண்ட மாநாட்டில் பங்கேற்குமாறு ''இந்து சமூகங்களை'' அம்மாநில அரசு வலியுறுத்துகிறது. இந்துக்களை இந்துக்கள் அல்லாதவர்களிடமிருந்து பிரித்து, சமூகங்கள் இந்துவாக அடையாளம் காணப்பட வேண்டும் என்று மறைமுகமாக ஆணையிடுகிறது. ஒரு பரந்த, அரசியல் ரீதியாக ஒருங்கிணைந்த இந்து அடையாளத்தை வளர்ப்பதன் மூலம், சாதிய ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யாமலே ஒன்றுக்கொன்று வெட்டிக்கொண்டு சாகும் பல்வேறு குழுக்களை உள்ளடக்கிய "இந்துத்துவம்" பற்றிய சங்பரிவார கும்பலின் பார்வையுடன் இந்த திட்டம் ஒன்றுபடுகிறது.

## மிதவாத இந்துத்துவா அல்ல! இந்துத்துவாவை எதிர்க்கும் செயல்திட்டமே தேவை!

இந்துத்துவ பாசிஸ்டுகள் ஒன்றியத்தில் அரசியலதிகாரத்துக்கு வந்ததிலிருந்து நாட்டு மக்களை ஓட்டாண்டியாக்கி தமது புரவலர்களான அதானி, அம்பானி உள்ளிட்ட தேசங்கடந்த தரகு முதலாளி கும்பலுக்காகவே ஆட்சி நடத்திக்கொண்டிருப்பதையும், பெரும் முதலாளிகளின் கடன் தள்ளுபடி, அதை சமன்படுத்த மக்களின் மீது தொடர்ந்து ஏற்றப்பட்டுவரும் வரிகள், சர்வதேச அளவில் விலை குறைந்திருக்கும்போதும் உள்நாட்டு எரிபொருள் மீதான வரிகளை ஏற்றி விலை குறையாமல் அடித்துவரும் கொள்ளை, பிரதமரிலிருந்து உள்ளூர் பிரமுகர் வரை செய்துவரும் மெகா ஊழல்கள், மோசடிகள், தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு முறையான GST பங்கீட்டை வழங்காமல் தனக்கு அடிபணியுமாறு மிரட்டுவது, பேரிடர் நிவாரண நிதியைத் தராமல் வஞ்சிப்பது, கல்விக்கான ஒதுக்கீட்டை மறுப்பது, ஆண்டுதோறும் தாக்கல் செய்யப்படும் ஒன்றிய பட்ஜெட்டில் தன்னுடைய கட்சி/கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்வது, எல்லா துறைகளிலும் வெளிப்படையாகவே நடக்கும் மிகப்பெரும் ஊழல், வெளியுறவுத்துறையில் அடுத்தடுத்து தோல்வி, பெண்கள், சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்ட மக்கள், பழங்குடியினர் மீதான அதிகரித்துவரும் கொடூர தாக்குதல்கள், பாஜக ஆளும் மாநிலங்கள் குற்றங்களில் முன்னணி வகிப்பது, இந்துத்துவா கும்பல்களின் பிரிவினைவாதம், ஒடுக்கப்பட்ட

சாதியினருக்கு எதிரான ஆணவப்படுகொலைகள், குற்றங்களைக் குறித்து நவதுவாரங்களையும் மூடிக்கொண்டிருப்பது, தொழிலாளர், விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், NEET, CUET உள்ளிட்ட தேர்வுகள், மக்கள் நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ந்து குறைத்துவருவது, இஸ்லாமியர்களின் வீடுகளை, குடிசைகளை புல்டோசர் மூலம் அழித்தொழிப்பது, ஓட்டுத்திருட்டு, நாட்டின் அனைத்து கட்டமைப்புகளையும் ஊழல்மயப்படுத்தி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது, சர்வதேச குறியீடுகளில் சரிவு என்று இக்கும்பலை அம்பலப்படுத்தி முறியடிக்க இன்னும் ஏராளமான விடயங்கள் உள்ளன.

ஆனால் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, மிதவாத இந்துத்துவாவை முன்னிறுத்துவதும் மூலம் பெரும்பான்மை மக்களின் ஓட்டுகளை பெற்றுவிடலாம் என்று எண்ணுவது எதிர்க்கட்சிகளின் அரசியல் ஓட்டாண்டித்தனத்தையே காட்டுகிறது.

இந்துத்துவ பாசிஸ்டுகளை தேர்தல்களில் வீழ்த்த எதிர்கட்சிகளிடையே ஒற்றுமையும், ஒருங்கிணைந்த குறைந்தபட்ச செயல்திட்டமும்தான் தேவை. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நிர்வாகத்தில் உள்ள இந்துத்துவ ஆதரவு சக்திகளையும், தமது கட்சிக்குள்ளிருக்கும் இந்துத்துவ ஸ்லீப்பர் செல்களை களையெடுப்பதும் உடனடித் தேவை.

அதுபோலவே, இந்து மதத்துக்கும் சங்கபரிவார கும்பலுக்கும் என்ன தொடர்பு? அனைத்து சாதி இந்துக்களும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை ஏன் இக்கும்பல் எதிர்க்கிறது? பெரும்பாலான இந்து மக்களின் நம்பிக்கைக்கும், வழிபாட்டுக்கும், சங்கபரிவார கும்பல் முன்னிறுத்தும் பார்ப்பனமயமாக்கப்பட்ட நம்பிக்கைக்கும், வழிபாட்டுக்கும் என்ன தொடர்பு? என்று வேர்மட்ட அளவில் ஆர்எஸ்எஸ்-பாஜக உள்ளிட்ட இந்துத்துவ கும்பலை எதிர்த்துப் பிரச்சாரங்களை மேற்கொள்வதும், இந்துராஷ்டிரம் என்ற பெயரில் இரண்டாயிரம் வருடத்துக்கு முந்தைய நிலையான பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிறுவி, நாட்டின் பெரும்பாலான மக்களை தற்குறியாக்கி மீண்டும் அடிமைகளாக ஆக்குவதும்தான் இக்கும்பலின் செயல்திட்டம் மக்களிடம் அம்பலப்படுத்துவதும்தான் உடனடித் தேவை.

இவற்றை விட்டுவிட்டு இக்கும்பலுக்கு வால்பிடிக்கும் விதமாக மிதவாத இந்துத்துவாவை கையிலெடுப்பது நாட்டையும் நாட்டு மக்களையும் இக்கும்பலின் பிடியிலிருந்து மீட்க எந்நாளும் உதவாது.

## கடமையைக் கைகழுவும் ‘இடதுசாரிகள், முற்போக்காளர்கள்!’

‘‘தங்களது தனிப்பட்ட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும், வறுமை, பொருளாதார-சமூக பிரச்சினைகளுக்கும் முதலாளித்துவ சுரண்டலும், அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறையும் காரணமல்ல, மாறாக தான் முற்பிறவியில் செய்த பாவம் அல்லது கடவுள் அவரவர்க்கு எழுதியுள்ள தலையெழுத்து’’ என்றுதான் ஆளும்வர்க்கம் மக்களின் ஆழ்மனதில் கருத்தியல் ரீதியாக பதிய வைத்துள்ளது. பாட்டாளிவர்க்கத்திடம் பதிந்துள்ள இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளை அகற்றி அவர்களை வர்க்கமாகத் திரட்டி, அரசியல் பழக்கி அரசியல் அதிகாரத்தை வென்றிடச் செய்யவேண்டிய கம்யூனிஸ்டுகள் இவற்றைப் பற்றி சிந்திக்காமல் உலகளாவிய ஐயப்ப சங்கமம் போன்ற மாநாட்டை நடத்துவதன் மூலம் அரசியல் ரீதியாக சங்க பரிவார கும்பல் தனது நிகழ்ச்சிநிரலை முன்னெடுத்துச் செல்ல ஒரு மாற்றுத் திட்டத்தை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. வரவிருக்கும் தேர்தலுக்காக ஐயப்பனின் பார்ப்பன இடது பதிப்பு அல்லது பார்ப்பன வலது பதிப்பு என்ற இரட்டைத் தேர்வில் கேரள மக்களை சிக்க வைத்துள்ளது.

‘‘ஒரு ஜனநாயக அரசு எனில் மதம் அரசிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்’’ என்கிறது மார்க்சியம். ஆனால் மார்க்சிஸ்டுகளால் இந்த அடிப்படை கொள்கை அளவிலான மதச்சார்பற்ற ஜனநாயக அரசை கூட தாங்கள் ஆளும் மாநிலத்தில் வழங்க முயற்சிக்காமல் சமூகத்தின் இந்துமயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம், பார்ப்பனீயத்தின் தீய விழுமியங்களை மாநிலக் கொள்கையின் மையப்புள்ளியாக உயர்த்துவதன் மூலம் இந்துக்களின் வாக்குகளை பெற்றுவிடலாம் என்று வாக்குகளை பெறுவதும் ஆட்சியில் நீடித்திருப்பதுமே முக்கியம் என்று தரம்தாழ்ந்து போயுள்ளனர்.

தமிழ்நாட்டை பெரியார் மண், சமூகநீதி மண் என்று புளங்காகிதமடையும் திமுகவும் முருகன் மாநாடு, கோவில் குடமுழுக்கு என்று மிதவாத இந்துத்துவா மூலம் பார்ப்பனர்களை தாஜா செய்வது என்ற புதைகுழிக்குள் சறுக்கிவிழப் பார்க்கிறது. கருணாநிதி காலத்திலேயே இது தொடங்கிவிட்டது என்றாலும் தற்போது ஒரு புதிய பரிணாமத்தை அடைந்திருக்கிறது. மக்களிடையே தீவிரமாகப் பரவிவரும் இந்துத்துவ விசத்தை முறியடித்து மக்களை சாதி வேறுபாடுகள் இன்றி ஒன்று திரட்டி இந்துத்துவ பாசிஸ்டுகளுக்கு எதிராக போர்க்களம் காண வேண்டி உள்ளது. அதற்காக மார்க்சிஸ்ட்டுகள், பெரியாரிஸ்டுகள், அம்பேத்கரிஸ்டுகளுடன் கைகோர்க்கவேண்டிய திமுக மக்களின் பிற்போக்கு சிந்தனையோட்டத்திற்கு ஏற்ற வகையில் வால்பிடித்துச் செல்வது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். அதை ஏற்கனவே கடந்த காலம் உணர்த்தியுள்ளது.

இந்துத்துவாவை அது மிதவாதமோ அல்லது தீவிரவாதமா எந்தவகையிலும் முறியடிக்கும் செயல்திட்டத்தை மார்க்சிஸ்டுகளும், திமுக உள்ளிட்ட கட்சிகளும், கூட்டணிக் கட்சிகளும், ஜனநாயக, அம்பேத்காரிய அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டும் என்பதும், இந்திய அளவில் எதிர்க்கட்சிகள் பாசிசத்தை வீழ்த்துவதற்கு குறைந்தபட்ச செயல்திட்ட அடிப்படையில் ஒன்றிணைந்து கார்ப்பரேட் காவி பாசிஸ்டுகளை அதிகாரத்திலிருந்து வீழ்த்த வேண்டும்.

■ மதியழகன்

# வட மாநிலங்களில் தொடரும் நவராத்திரி வன்முறை வெறியாட்டங்கள்! தடுக்கும் வழிமுறை நோக்கி முன்னேறுவோம்!

மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரி நாட்களில் கர்பா, தாண்டியா எனும் கோலாட்டங்கள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு செப்டம்பர் 22-ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 01 ஆம் தேதி வரை நவராத்திரி விழா நடைபெற்றது.

சென்ற ஆண்டு நடைபெற்ற நவராத்திரி விழாக்களில் பல மாநிலங்களில் இந்து மதவெறி அமைப்புகள் 'லவ் ஜிஹாத்' தடுப்பதாக கூறி இஸ்லாமிய இளைஞர்களை குறிவைத்து தாக்கியது நடந்தேறியது. இந்த ஆண்டும் நவராத்திரி விழாக்களில் இஸ்லாமிய வெறுப்புகள் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந்த ஆண்டில் நவராத்திரி மற்றும் துர்கா பூஜை, கர்பா நடன நிகழ்ச்சி விழாக்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடிய நிலையில் உயிரிழப்புகள், வன்முறை சம்பவங்கள், மோதல்கள், கைதுகள் என பதட்டமான நிலையிலேயே சென்றது. குறிப்பாக, மத்தியப் பிரதேசத்தில் துர்க்கை சிலையை நீரில் கரைக்கும் நிகழ்ச்சியின் போது, அருகில் இருந்த ஏரியில் டிராக்டர் கவிழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், பல மாநிலங்களில் VHP, பஜ்ரங்தள் போன்ற இந்துமதவெறி குண்டர் படை அமைப்புகள் உருவாக்கிய சிறுபான்மைக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம் வன்முறையை உருவாக்கின.

குஜராத்தின் காந்திநகர் மாவட்டத்தில் உள்ள பஹியால் கிராமத்தில் நவராத்திரி கர்பாவின் போது தீவைத்துக் கொளுத்தப்பட்ட இஸ்லாமியர்களின் கடைகள்.



## இந்து அல்லாதோர் அனுமதியில்லை! சிறுபான்மையினருக்கு எதிரான விஷம பிரச்சாரம்!

வட இந்திய மாநிலங்களில் நவராத்திரி ஏற்பாடுகள் தொடங்கிய போது, விஸ்வ இந்து பரிஷத் (VHP) தேசிய செய்தித் தொடர்பாளர் ராஜ் நாயர் ஓர் அறிவிப்பு வெளியிட்டார், அதில் "கர்பா என்பது வெறும் நடனம் அல்ல, தெய்வ வழிபாட்டின் ஒரு வடிவம். சிலை வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர்கள் இவற்றில் பங்கேற்க உரிமை இல்லை. இதுபோன்ற நிகழ்வுகளில் இந்துக்கள் அல்லாதோர் இருப்பது எங்கள் மத உணர்வுகளை புண்படுத்துகிறது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கர்பாவில் கலந்து கொள்பவர்களுக்கு குங்கும திலகமிட்டும், ஆதார் அட்டையை சரி பார்த்தும் அனுமதிக்க வேண்டும். இதனை எங்களது அமைப்பு கண்காணிக்கும்" என மதவெறியை தூண்டும் விதமாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் செயல்படும் விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் மாநில செய்தி தொடர்பாளர்கள், கர்பா, தாண்டியா நடனக் கூட்டங்களில் ஊடுருவுபவர்கள், லவ் ஜிஹாத், மதமாற்றம் போன்ற சதித் திட்டங்களுக்கு முயற்சிக்கின்றனர். எனவே நவராத்திரி விழாக்களில் இந்துக்கள் அல்லாதோர் நுழையக்கூடாது என அறிக்கைகள் வெளியிட்டு விஷமப் பிரச்சாரத்தை தொடங்கினர்.

செப்டம்பர் 29-ஆம் தேதி மத்தியப் பிரதேசம் போபாலின் நவராத்திரி விழாவில் கலந்துக் கொண்டு பேசிய பிரக்யா சிங் தாக்கூர், ''இந்து அல்லாதவர்கள் கோயில்களின் முன்பாக கடைகள் வைத்திருந்தால் தாக்குங்கள். வீட்டிற்கு விளக்குகள், பிளம்பிங் சாதனங்கள் அல்லது துப்புரவுப் பணியாளர்கள் என எந்த பணிக்காக பிற எந்த மதத்தைச் சேர்ந்தவர் வந்தாலும் வீட்டிற்குள் அனுமதிக்காதீர்கள். அடித்து விரட்டுங்கள்!'' என பார்ப்பன பாசிச மதவெறியை தூண்டும் விதமாக வெறுப்பைக் கக்கினார்.

விஎச்பியின் இந்த அறிவிப்பு வடக்கு மற்றும் மேற்கு இந்திய மாநிலங்களில் இந்து மதவெறியை தூண்டியதுடன் மதவெறி சக்திகளுக்கு ஒரு வெளிப்படையான அழைப்பாக மாறியது. இதனால் நவராத்திரியின் போது சில இடங்களில் மோதல்கள், சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அரங்கேறியது. இதற்கு மாநில மற்றும் மாவட்ட அரசு நிர்வாகங்கள் துணை நின்றன. அதாவது, பாஜக ஆளும் மாநிலங்களில் நவராத்திரி விழா நடைபெறும் மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகங்கள் பாதுகாப்பு நடைமுறைகள் என்ற பெயரில் கர்பா நிகழ்வுகளில் நுழைய அடையாள அட்டைகளை கட்டாயமாக்கியுள்ளதும், தாக்குதலுக்குள்ளான இஸ்லாமியர்களையே கைது செய்ததுள்ளதும் நடந்தேறியுள்ளது.

## இஸ்லாமியர்கள் மீதான தாக்குதலும்! மாநில அரசின் கைது நடவடிக்கையும்!

- மத்தியப் பிரதேசத்தின் சாகரில் உள்ள ஒன்றிய அரசு பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த அப்தாப் உசேன் எனும் இஸ்லாமிய இளைஞர் தனது இந்து நண்பர் அழைப்பின் பேரில் வந்த போது நவராத்திரி கர்பா நிகழ்வில் அத்துமீறி நுழைந்ததாகக் கூறி பஜ்ரங்தங்கள், விஸ்வ இந்து பரிஷத் மற்றும் இந்து ஜாக்ரன் மன்ச் ஆகிய அமைப்பை சேர்ந்த இந்து மத வெறியர்களால் கொடூரமாக தாக்கப்பட்டார். இந்த தாக்குதல் சம்பவத்தில் இஸ்லாமிய இளைஞர் காவல்துறையால் பாதுகாக்கப்படுவதற்கு பதிலாக கைது செய்யப்பட்டார்.
- செப்டம்பர் மாத துவக்கத்தில் நபிகள் பிறந்தநாளின் போது நடத்தப்படும் பரவாபத் ஊர்வலத்தில் ‘ஐ லவ் முகமது’ என்ற முழக்கத்தை இஸ்லாமியர்கள் முன்வைத்து கோஷமிட்டனர். அப்போது இந்துக்கள் அமைதியாகவே இருந்தனர். VHP யின் இஸ்லாமிய வெறுப்பு பிரச்சாரத்திற்கு பிறகு செப்டம்பர் 25 ஆம் தேதியன்று, குஜராத் மாநிலத்தின் காந்திநகரில் இந்து மதத்தை சேர்ந்த ஒருவர், “ஐ லவ் மகாதேவ்” என்று சமூக ஊடகங்களில் ஒரு செய்தியை வெளியிட்டதுடன் “ஐ லவ் முகமது” என்பதற்கு பதிலளிக்கும் விதமாக அதை ட்ரெண்ட் செய்ய இந்துக்களுக்கு அழைப்பு விடுத்தார். இந்தப் பதிவு இந்து - முஸ்லிம் மக்களிடையே பதட்டத்தை உருவாக்கி கலவரத்தில் முடிந்துள்ளது. கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த கலவரம் தொடர்பாக 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் இஸ்லாமியர்களே அதிகம் என்கின்றனர் அந்த மாநில சமூக ஆர்வலர்கள்.
- அதேபோல், செப்டம்பர் 21-ஆம் தேதி மும்பையின் மன்குர்டு பகுதியில் துர்கா சிலையை ஒவ்வொரு ஆண்டு கொண்டு செல்லும் பாதையில் செல்லாமல், இஸ்லாமியர்கள் குடியிருப்பு பகுதியில் மசூதி இருக்கும் மிகவும் குறுகலான தெருவில் அதிக சத்தத்தில் இசை வாசித்து துர்கா சிலையை கொண்டு சென்றுள்ளனர். குறுகலான தெரு என்பதால் துர்கா சிலையின் கை உடைந்துள்ளது. இதனை இஸ்லாமியர்கள் தான் உடைத்தனர் என கூறி தகராறில் ஈடுபட்டனர் இந்துமத வெறியர்கள். இதனால் இரு மதத்தினர் இடையே கலவரம் வெடித்துள்ளது. போலீசு தலையீட்டால் இரு தரப்பில் இருந்து 14 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.




- குஜராத் ராஜ்கோட் பகுதியில் உள்ள நீல் சிட்டி கிளப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நவராத்திரி விழாவில் இந்து அல்லாதோர் கலந்து கொண்டுள்ளனர் என்பதை அறிந்து சோதனையிட VHP அமைப்பை சேர்ந்த இந்து மத வெறியர்கள் வந்துள்ளனர். இந்து மத வெறியர்களை உள்ளே அனுமதிக்க முடியாது என்றும், இந்து அல்லாதோர் நவராத்திரியில் கலந்து கொள்வதில் தவறில்லை என்றும் நீல் சிட்டி கிளப் உரிமையாளரான இந்திரனில் ராஜ்குரு கூறியுள்ளார். இதனால் எரிச்சலடைந்த இந்து மத வெறியர்கள் நீல் சிட்டி கிளப்பில் இருந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்ததை தொடர்ந்து கலவரமாக வெடித்தது. இந்த கலவரத்திலும் இரு தரப்பை சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டனர்.

மேற்கூறிய சம்பவங்களில் பாதிக்கப்பட்ட இஸ்லாமியர்கள் மீதே போலீசின் கைது நடவடிக்கை அதிகமாக உள்ளது. தாக்குதல் நடத்திய, கலவரத்திற்கு காரணமான இந்து மதவெறி பாசிச குண்டர் படை அமைப்புகளைச் சேர்ந்தவர்களை கண் துடைப்பிற்காக கைது செய்துள்ளது போலீசு. மொத்தத்தில் இந்த ஆண்டு நவராத்திரி நிகழ்ச்சியில் இந்து மதவெறி அமைப்புகளும், போலீசும் கூட்டு சேர்ந்து சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர் என்பதே நிதர்சனமான உண்மை.

## ‘இந்து’ மக்களிடையே மோதலை உருவாக்கிய நவராத்திரி விழா!

மும்பையின் கோரேகான் பகுதியில் கர்பா கொண்டாட்டத்தில் இந்து மதத்தை சேர்ந்த இளைஞர்கள் நடனம் ஆடும் போது அவர்களுக்குள் ஏற்பட்ட வாய் தகராறு மோதலாக மாறி 19 வயது இளைஞன் தாண்டியா குச்சியால் தாக்கி தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**பார்ப்பனியம் என்பது படிநிலை சாதி – வர்க்க ஆதிக்கம் – தீண்டாமையையும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும், மொழி – இன ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்துகின்ற, போற்றிக் கொண்டாடுகின்ற சித்தாந்தம். இது வெறும் பண்பாடாக இல்லை, அரசியல், பொருளாதார அமைப்பாக, ஆளும் வர்க்கத்தின் சட்டமாகவே நமது அரசமைப்பு சட்டத்திலும் தொடர்கிறது.**

டெல்லியில் நடந்த மற்றொரு சம்பவத்தில், நவராத்திரி ஊர்வலங்களின் போது முந்திச் செல்வது மற்றும் உரத்த இசை தொடர்பாக இரு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறு மத்திய டெல்லியில் வன்முறை மோதலாக வெடித்தது, இதில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

குஜராத் ராஜ்கோட் பகுதியில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் விஜபி சீட் ஒதுக்கவில்லை என்ற காரணத்திற்காக ஏற்பட்ட மோதலில் 03 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஒடிசா மாநிலத்தின் கட்டாக் மாவட்டத்தில் உள்ள தர்கா பஜார் வழியாக அக்டோபர் 03 ஆம் தேதி அதிகாலை 2:00 மணியளவில் துர்கா சிலை ஊர்வலம் கொண்டு செல்லும் பொழுது அதிக சத்தங்கள் எழுப்பியதால் உள்ளூர் மக்கள் சத்தத்தை குறைக்கும்படி கோரியுள்ளனர். ஊர்வலத்தில் இருந்தவர்கள் பொதுமக்கள் மீது கற்கள் மற்றும் கண்ணாடி பாட்டில்களை வீசியதால் கட்டாக்கின் துணை காவல் ஆணையர் உள்ளிட்ட பலர் படுகாயம் அடைந்தனர். இதனைத் தொடர்ந்து மறுநாள் விஸ்வ இந்து பரிஷத் தடையை மீறி மோட்டார் சைக்கிள் பேரணி நடத்த முயன்றது. போலீசு தடுத்ததால் வன்முறையில் ஈடுபட்டு பல வண்டிகள், தள்ளுவண்டி கடைகள் போன்றவற்றை தீயிட்டு கொளுத்தியுள்ளது இந்து மத வெறி கும்பல். ஒடிசா அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்ததுடன் இணைய சேவையும் முடக்கியது. இந்து மதவெறி அமைப்பான VHP அக்டோபர் 06 ஆம் தேதி பந்திற்கு அழைப்பு விடுத்து பதட்டத்தை இன்னும் தீவிரப்படுத்தி உள்ளது.

“திருவிழா என்றால் சண்டை சச்சரவு இருக்கும்” என்று இதனை சுருக்கி பார்க்க முடியாது. கடந்த 11 ஆண்டு மோடியின் ஆட்சிக் காலத்தில் வட மாநிலங்கள் அனைத்திலும் இஸ்லாமியர்கள் உள்ளிட்டு மதச்சிறுபான்மையின மக்களுக்கு எதிராக ஒவ்வொரு நாளும் எண்ணற்ற தாக்குதல்கள், கொலைகள் நடந்து வருகின்றன. இத்தகைய தாக்குதல்கள் இந்துப் பெரும்பான்மையினர் மத்தியில் சகஜமாக்கப்பட்டிருக்கின்றன. பலர் சிறுபான்மை மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை வெறும் செய்திகளாக கடந்து செல்கின்றனர். இந்த மனநிலை தான் ஆர்.எஸ்.எஸ்சும், அதன் பரிவார கும்பலும் மதத் திருவிழா என்ற பெயரில் தனது சமூக மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்துவது, தட்டிக் கேட்கும் மக்களை தாக்குவது, போலீசு தடுத்தால் வன்முறையில் ஈடுபடுவது என செயல் படுகின்றனர்.

## இந்து மதக் கொடுங்கோன்மையை புரிந்து கொள்வோம்! மக்களை பாதுகாப்போம்!

இந்துமதம் ஜனநாயகப் பூர்வமானது, பன்முகத் தன்மை கொண்டது, ஆனால், ஆர்.எஸ்.எஸ். முன்வைக்கும் இந்துத்துவம் என்பதுதான் ஒற்றைப் பண்பாட்டை வலியுறுத்தும் பாசிசத் தன்மை கொண்டது என்ற வகையிலேயே பாஜக எதிர்ப்பு பேசும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பார்ப்பன (இந்து) மதத்தை அணுகுகின்றனர். பார்ப்பன சித்தாந்தத்தை பெரியார், அம்பேத்கர் புரிந்துக் கொண்டு முன் வைத்தது போல், கையாண்டது போல் தற்போது எதிர்கட்சிகள் கையாளுவதில்லை. எனவேதான், மிதவாத இந்துத்துவாவை கடைபிடிப்பது, இந்து மதவெறி பாசிசத்தை மென்மையாக கையாளுவது என செயல்படுகின்றனர். இந்து மதம் எனப்படும் பார்ப்பன மதத்திற்கு தரப்படும் இந்த அங்கீகாரத்தை சங்பரிவாரம் பயன்படுத்திக் கொண்டு சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதலை நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் காவி பாசிசத்தை தீவிரமாக அமல்படுத்துகிறது.

பார்ப்பனியம் என்பது படிநிலை சாதி - வர்க்க ஆதிக்கம் - தீண்டாமையையும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையையும், மொழி - இன ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்துகின்ற, போற்றிக் கொண்டாடுகின்ற சித்தாந்தம். இது வெறும் பண்பாடாக இல்லை, அரசியல், பொருளாதார அமைப்பாக, ஆளும் வர்க்கத்தின் சட்டமாகவே நமது அரசமைப்பு சட்டத்திலும் தொடர்கிறது. பாசிச ஆர்எஸ்எஸ்-பாஜக அதில் சிறியதொரு மாற்றத்தைக்கூட அனுமதிக்க முடியாது என கொக்கரிக்கிறது.

பார்ப்பன (இந்து) மதம் பிறப்பின் அடிப்படையில் தொழில்களை வரையறுத்திருக்கிறது. பார்ப்பனியத்தின் (இந்துதர்ம)படி இன்றுவரை அருந்ததி இன மக்கள் துப்புரவு தொழில்களையே மேற்கொண்டு வருகின்றனர். சலவைத் தொழில், முடிவெட்டும் தொழில், பிணம் எரிக்கும் தொழில் என்று பெரும்பான்மையாக சாதியின் அடிப்படையில் பணி செய்வது இன்றும் தொடர்கிறது.

மறுபுறம் பார்ப்பன (இந்து) மதக்கலாச்சாரம் எனும் பெயரில் பார்ப்பனிய பிற்போக்குத் தனங்கள் இன்றும் செல்வாக்கோடு அடிமைப்படுத்துகின்றன. இதன் விளைவே, ஆணவக் கொலை, வரதட்சிணைக் கொடுமைகள், காதல் மண மறுப்பு என்பதை ஆதிக்க சாதி இந்துக்கள் இன்றளவும் பின்பற்றுகிறார்கள்.

பார்ப்பன (இந்து) மதம் மொத்த சமூகத்திற்கும் எதிரானது என்பதை புரிந்துகொண்டு, முதலில் மதத்தை அரசியலில் இருந்து பிரிப்பதும், மக்களுக்கு சொந்த அனுபவத்தின் மூலம் இந்து மதக் கொடுங்கோன்மையை புரிய வைத்து அவர்களை பாதுகாப்பதும் அவசியம். இதன் மூலமாக மட்டுமே கர்வா, தாண்டியா போன்ற நடனங்கள் மட்டுமின்றி இந்துக்களின் திருவிழாக்களிலும் பிற மதத்தினர் பங்கேற்கும் உண்மையான சகோதரத்துவம் உருவெடுக்கும்.

■ தயாளன்

# பீகார் தேர்தல்கள்:

# மக்களின் ஓட்டுக் கோவணமும் ஓட்டும் திருட்டு! அதானிக்கு வரிச்சலுகை, கனிமவளம் அப்பீட்!

பீகாரில் வருகின்ற நவம்பர் மாதத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஒவ்வொரு கட்சிகளும் தேர்தலுக்கான பிரச்சார திட்டங்களை வகுத்து களத்தில் இறங்கி தீவிரமாக வேலை செய்து வருகின்றனர். காங்கிரசு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாசிச பாஜகவின் வாக்கு திருட்டை மக்களிடம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

ஒன்றிய பாஜக மற்றும் மாநில நிதிஷ்குமார் - பாஜக கூட்டணி அரசுகள், எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தை மறைக்கும் விதமாக பெண்கள் தொழில் தொடங்க நிதியளிப்பது உள்ளிட்ட மக்களுக்கு பொருளாதார சலுகைகளையும் மாநில வளர்ச்சியை உருவாக்குவதற்கு என திட்டங்களையும், ஏற்கனவே பட்ஜெட்டில் பீகாருக்கு என அறிவித்த திட்டங்களையும் வேகமாக தொடங்கி, ஆயிரக்கணக்கான கோடி நிதியை அள்ளி கொட்டி வருகின்றன. இதில் மேலோட்டமாக பார்க்கும் பொழுது மாநில மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களாக தெரிகிறது, ஆனால் உண்மையில் மக்களை சுரண்டுவதற்கும், பெரும்பான்மையாக கார்ப்பரேட்டுகள் கொள்ளையடிப்பதற்கான திட்டங்களாகவே உள்ளன.

உதாரணமாக, தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு ரூ.3872 கோடி மதிப்பிலான திட்டம்; பக்கியாப்பூர், ராஜ்கீர் இடையிலான 104 கிலோ மீட்டர் ரயில்வே பாதையை 2 வழித்தடமாக மாற்றுவதற்கு ரூ.2192 கோடி மதிப்பிலான திட்டம்; பீகாரில் உட்கட்டமைப்பு மேம்படுத்த ரூ.7616 கோடி மதிப்பிலான திட்டம்; பீகாரில் மாநில வளர்ச்சிக்கான ரூ.11500 கோடி மதிப்பிலான திட்டம்; பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள பிர்பைண்டியில் ரூ.25,000 கோடி மதிப்புள்ள, 2400 மெகாவாட் திறன் கொண்ட நிலக்கரி அடிப்படையிலான அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டம் என அனைத்து திட்டங்களும் உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், மாநிலத்தில் உள்ள வீடுகளுக்கு மாதந்தோறும் 125 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்து உள்ளார். இதற்கான மின்சாரம் தயாரிக்க மாநிலத்தில் உள்ள இயற்கை வளங்களை அதானிக்கு தாரை வார்த்து உள்ளது பீகார் அரசு.

அதாவது, மின்சாரம் தயாரிப்புக்கான அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் பாசிச மோடியின் நண்பரான அதானிக்கு தரப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி பீகாரில் பல திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய பிரதமர் மோடி, அதானி அமைக்கும் அனல்மின் நிலையத்தின் மூலம் பீகார் மாநிலம் மின்சாரத் துறையில் தன்னிறைவு அடைய செய்வதுடன், பீகாரின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும்'' என்று பெருமை பீற்றிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2014-ஆம் ஆண்டில் அரசின் திட்டம்! 2025-ஆம் ஆண்டில் அதானிக்கு மட்டும்!




பீகாரின் பிர்பைன்டியில் சூப்பர் கிரிட்டிகல் 1,320 மெகாவாட் கொண்ட அனல் மின் நிலையம் அமைப்பது என 2014-ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. இதற்கென பிர்பைன்டி பிஜ்லீ நிறுவனம் எனும் தனியார் நிறுவனத்துடன், பீகார் மாநில அரசின் மின் உற்பத்தி நிறுவனம் (BSPGCL) மற்றும் ஒன்றிய அரசின் தேசிய நீர் மின்சாரக் கழகம் (NHPC- National Hydroelectric Power Corporation) ஆகிய மூன்று நிறுவனங்கள் இணைந்து அனல்மின் நிலையம் அமைப்பது என ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனல் மின் நிலையத்தை உருவாக்குவது மட்டுமே பிர்பைன்டி பிஜ்லீ நிறுவனத்தின்

வேலை. அனல் மின் நிலையத்தின் பங்குகள் பீகார் மாநில மின்சார வாரியத்திடமும், தேசிய நீர் மின் கழகத்திடமும் இருக்கும் வகையில் அரசு நிறுவனமாக தொடங்க முடிவு செய்யப்பட்டது.

2021-ஆம் ஆண்டில் சுற்றுச் சூழல் பாதிப்பு, நீர் நிலை மற்றும் மரங்கள் அழிக்கப்படுவது உள்ளிட்ட காரணங்களை முன் வைத்து விவசாயிகளின் எதிர்ப்பால் அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டதுடன், சூரிய மின் நிலையமாக மாற்றப்பட்டு தேசிய நீர் மின்சார கழக்கத்தின் மூலம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த திட்டமும் கைவிடப்பட்டு 2025-ஆம் ஆண்டில் மீண்டும் அனல் மின் நிலையமாக மாற்றப்பட்டது.

அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பான ஆன்லைன் ஏலம் கடந்த ஜூன் மாதத்தில் நடைபெற்றது. இதில், அதானி குழுமம் மட்டுமின்றி, JSW எனர்ஜி, டோரண்ட் பவர் மற்றும் பஜாஜ் குழுமத்தின் லலித் பவர் ஆகியவை ஏலத்தில் பங்கேற்றன. ஆனால், அதானி பவர் நிறுவனம் மற்ற நிறுவனங்களை விட வெறும் 07 பைசா வித்தியாசத்தில் ஏலத்தில் வெற்றி பெற வைக்கப்பட்டுள்ளது. அதாவது, அதானி குழுமம் மின்சாரம் தயாரித்து ஒரு கிலோவாட் மின்சாரத்தை ஒரு மணி நேரத்திற்கு (kilo watt per hour) ரூ.6.075 (6 ரூபாய்,7 பைசா) என்ற விலை நிர்ணயம் செய்தது. டோரண்ட் பவர் லிமிடெட் ரூ.6.145-க்கும், லலித்பூர் பவர் ஜெனரேஷன் கம்பெனி லிமிடெட் ரூ.6.165-க்கும், JSW எனர்ஜி லிமிடெட் ரூ.6.205-க்கும் மின்சாரம் வழங்க விலை நிர்ணயம் செய்துள்ளனர். எளிமையாக சொன்னால், பாஜக அரசும் அதானி குழுமத்தின் கூட்டு சேர்ந்து மற்ற நிறுவனங்களை தோற்கடித்து உள்ளனர்.

அனல் மின்நிலையத்தை 25 ஆண்டுகளுக்கு கட்டமைக்கவும், சொந்தமாக வைத்திருக்கவும், இயக்கவும் அதானி குழுமத்திற்கு மட்டுமே உரிமை உண்டு. அரசு அதானி உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்கி மக்களிடம் விற்று தரும் சேல்ஸ் மேன் வேலையை மட்டுமே செய்யும். இதன் மூலம், பாசிச பாஜக அரசு அதானி - அம்பானி போன்ற தரகு முதலாளிகளில் ஒரு பிரிவான தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் பிரதிநிதிகளாகவே செயல்படுகிறது என்கின்ற மா.லெ அமைப்புகளின் வரையறை மிக சரியானது என நிரூபித்துள்ளது பீகார் மாநில பாஜக அரசு.

## மக்களின் வீடு - நிலம் பறிப்பு! அதானிக்கு ஒரு ஏக்கர் ஒரு ரூபாய்க்கு தாரை வார்ப்பு!

பீகார் தொழில்துறை மேம்பாட்டு ஆணையத்தின் பெயரில் 2010 - 2012-ஆம் ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்படும் வேலை தொடங்கியது, பின்னர் அந்த நிலங்களை மின்சாரத் துறையிடம் ஒப்படைத்துள்ளனர். ஏறக்குறைய 1,000 ஏக்கர் விவசாய நிலத்தை கையகப்படுத்தும் வேலையை அப்போதைய நிதிஷ்குமார் - பாஜக கூட்டணி பீகார் அரசு.

**மக்களின் நிலங்களை பொது சொத்துக்களை ஒரு ரூபாய் கட்டணத்தில் அதானிக்கு கொடுப்பது பாஜக அரசுக்கு ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே 2014-ஆம் ஆண்டில் குஜராத் கட்ச் வளைகுடாவில் துறைமுகத்திற்கு ஒரு சதுர மீட்டர் ஒரு ரூபாய்க்கு அதானிக்கு விற்றது அப்போதைய மோடி அரசு.**

விவசாயிகளிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டதில் பாஜக அரசு பல விவசாய நிலங்களை பொய்யான தரவுகள் காட்டி பாழடைந்த நிலம் என்று பட்டியலிட்டு குறைந்த பணத்தை கொடுத்து நிலத்தை பறித்து விட்டது என்கின்றனர் பல விவசாயிகள். இவ்வாறு தரப்பட்ட இழப்பீடு தொகையும் பெரும்பான்மை விவசாயிகளுக்கு 20% முதல் 50% வரை நிலுவை வைத்துள்ளது மற்றும் இழப்பீடு வழங்கியதில் முறைகேடுகள் உள்ளது என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர் பீகார் விவசாயிகள். இதனால் அவர்கள் அந்த இடங்களில் இன்று வரை வசித்தும் வருகின்றனர்.

இந்நிலையில், கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் இருக்கும் வீடுகளில் குடியிருக்கும் விவசாயிகள் 15 நாட்களுக்குள் காலி செய்யுமாறு சென்ற மாதம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது பீகார் அரசு. அரசாங்கம் கையகப்படுத்திய நிலத்திற்கு தசமத்திற்கு (Decimal) ரூ.40,000 (1 தசமம் = ஒரு ஏக்கரில் 1/100 பங்கு) இழப்பீடு வழங்குகிறது. அதே நேரத்தில், வெளியே நிலம் வாங்குவதற்கான செலவு தசமத்திற்கு ரூ.2 லட்சம் ஆகிறது. அரசின் இழப்பீட்டுத் தொகையை வைத்து வேறெங்கும் வீடு கட்ட முடியாது என்று கூறுகின்றனர் விவசாயிகள்.

கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் பெரும்பான்மையாக மா, லிச்சி போன்ற லட்சக்கணக்கான பழ மரங்களைக் கொண்டுள்ளன. மாம்பழம் மற்றும் லிச்சி இரண்டும் இம்மாநிலத்தின் முக்கியமான பணப்பயிராகும். இந்தியாவில் லிச்சி உற்பத்தியில் பீகார் முதலிடத்திலும், மாம்பழ உற்பத்தியில் மூன்றாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த லட்சக்கணக்கான மரங்களை வெட்ட தயாராகி வருகின்றனர் அதானி குழுமத்தினர்.

விவசாயிகளுக்கான இழப்பீடு நிலுவை குறைவு மற்றும் மரங்கள் வெட்டப்படுவது தொடர்பாக பாகல்பூர் மாவட்ட ஆட்சியர் நவால் கிஷோர் சௌத்ரி, ''இழப்பீடு என்பது வீடு, தரிசு நிலம், மரங்கள் கொண்ட நிலம் என அதற்கேற்ப மதிப்பிடப்படுகிறது. அரசாங்கம் ஏற்கனவே இதைச் செய்துவிட்டது. எனவே, என்ன வழங்கப்பட்டது, என்ன வழங்கப்படவில்லை என்ற கேள்விக்கே இப்போது இடமில்லை என்றும், தேவைக்கு ஏற்ப மட்டுமே மரங்கள்

வெட்டப்படும் என்று அதிகார திமிரில் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கும் இழப்பீடு முறையாக தராமலும் பிடுங்கப்பட்ட 1050 ஏக்கர் நிலங்களை வருடத்திற்கு ஒரு ஏக்கர் வெறும் ஒரு ரூபாய்க்கு என 25 ஆண்டுகளுக்கு அதானி நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கி உள்ளது பீகார் அரசு. மக்களின் நிலங்களை பொது சொத்துக்களை ஒரு ரூபாய் கட்டணத்தில் அதானிக்கு கொடுப்பது பாஜக அரசுக்கு ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே 2014-ஆம் ஆண்டில் குஜராத் கட்ச் வளைகுடாவில் துறைமுகத்திற்கு ஒரு சதுர மீட்டர் ஒரு ரூபாய்க்கு அதானிக்கு விற்றது அப்போதைய மோடி அரசு. மக்களின் வயிற்றில் அடித்து பிடிங்கப்பட்ட நிலங்கள் வருடத்திற்கு ஒரு ஏக்கர் ஒரு ரூபாய் குத்தகை என்ற பெயரில் இலவசமாக தரப்பட்டுள்ளது என்பதே உண்மை.

## சுற்றுச்சூழல் நாசமும்- நோய்களும் மக்களுக்கு! கொள்ளை லாபம் அதானி குழுமத்திற்கு!

அதானி குழுமத்தின் அனல் மின் நிலையம் அமைக்க இருக்கும் பகுதியிலிருந்து 20 கி.மீ சுற்றளவில் ஏற்கனவே இரண்டு அனல் மின் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதே பகுதியில் புதிய அனல் மின் நிலையம் அமைத்தால் மாசுபாட்டை மேலும் அதிகரிக்கும் என்கின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.

நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்கள் உற்பத்தி செய்யும் பல மாசுபடுத்திகளில் ஆர்சனிக் ஒன்றாகும். நிலக்கரி வெளியேற்றம் இந்த மாசுபாட்டை காற்றில் வெளியிடுகிறது, அதே நேரத்தில் நிலக்கரி எரிப்பின் துணைப் பொருளான நுண்ணிய, தூள் போன்ற சாம்பல் தரையில் கசிந்து, மண்ணையும் நீரையும் மாசுபடுத்துகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு கொடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக, மனநலக் கோளாறுகள், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஹார்மோன் சமநிலையின்மை, நரம்பியல் கோளாறுகள் மற்றும் புற்றுநோய்கள் போன்ற பல கடுமையான உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பதை 2023-ஆம் ஆண்டில், பாட்னாவில் உள்ள மகாவீர் புற்றுநோய் சன்ஸ்தான் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானிகள் மக்களிடம் நேரடியாக ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளனர். இந்த நிலையில் இதே பகுதியில் மற்றொரு நிலக்கரி அனல் நிலையம் உருவானால் மக்கள் பல நோய்களால் பாதிக்கப்படுவதுடன் மாநிலத்தின் சுற்றுச்சூழலே முற்றிலுமாக நாசமாகும்.

மாநிலமே சுற்றுச்சூழல் பாதிப்பால் அழிந்தாலும் பரவாயில்லை லாபம் மட்டுமே குறிக்கோளாக அலைகின்றனர் கார்ப்பரேட்டுகள். பீகாரின் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டும், மக்களின் வாழ்வாதாரமாக இருக்கும் மா மற்றும் லச்சி மரங்கள் அழிக்கப்பட்டும், மக்களின் நிலம், உழைப்பு, நிலக்கரி ஆகியவை கொண்டு தயாரிக்கப்பட்ட மின்சாரம் மீண்டும் பீகார் மக்களிடம் அதிக விலைக்கு விற்கப்படும் அல்லது அரசே அதானி நிறுவனத்திடம் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கி மக்களுக்கு வினியோகம் செய்யும். இரண்டில் எது நடந்தாலும் அதானி குழுமத்திற்கு கொள்ளை லாபம் கிடைக்கும். ஆனால் மக்களுக்கு நட்டமும் நோய்களும் மட்டுமே கிடைக்கிறது.

## கார்ப்பரேட் நலன் சார்ந்த கட்டமைப்பை தூக்கி எறிவோம்! மக்கள் நலன் சார்ந்த ஜனநாயகக் கூட்டரசை நிறுவுவோம்!

2014-ஆம் ஆண்டிற்கு பிறகு மாநில சட்டமன்றத் தேர்தல்களில் தோல்வி பயம் வரும் போதெல்லாம் அதானிக்கு மாநில வளங்களை பாசிச பாஜக தாரை வார்ப்பது நடந்து வருகிறது. குறிப்பாக, மகாராஷ்டிராவில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, மின் உற்பத்தி நிலைய திட்டமும் தாராவி மறுசீரமைப்பு திட்டமும் அதானிக்கு வழங்கப்பட்டன. அதேபோல், ஜார்க்கண்ட், சட்டீஸ்கரிலும் தேர்தலுக்கு முன்பு அதானிக்கு பல திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் தற்போது பீகார் தேர்தலில் வாக்கு திருட்டு உருவாக்கியுள்ள பயம் அதானிக்கு அனல் மின் நிலையத்தை கொடுத்துள்ளது பாஜக. இதற்கு அதானி பாஜகவிற்கு தேவையானதை செய்வார் என்பதில் ஐயமில்லை.

பீகார் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் கோடிக்கணக்கான மக்களின் அன்றாட உழைப்பின் பலன் அவர்களுக்கு கிடைப்பதில்லை. பசி - பட்டினி - வேலையின்மை - நிலம் மற்றும் வாழ்வாதாரம் பறிப்பு- கொள்ளை நோய்கள் மட்டுமே கிடைக்கிறது. மாறாக, மக்களின் உழைப்பில் உருவாக்கப்படும் செல்வம் அதானி- அம்பானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகளுக்கு கொடுக்கப்படுகிறது.

பாசிச பாஜகவினை ஆட்சியில் வைத்துக்கொண்டு நாட்டின் வளங்களையும் மக்களின் உழைப்பையும் தங்கு தடையின்றி சூறையாடி வருகின்றனர் கார்ப்பரேட் முதலாளிகள். நாளை பாஜகவின் மோடி இல்லையென்றாலும், வேறு ஒருவரை பிரதமராக்கி, அவரின் மூலமாக இந்த கொள்ளை தொடரும். கார்ப்பரேட்டுகளின் தேவையை நிறைவேற்றும் கட்சியை சேர்ந்தவர் மட்டுமே பிரதமராக இருக்க முடியும் என்ற வகையில் அரசு கட்டமைப்பின் உள்ளடக்கம் கார்ப்பரேட் காவி பாசிசமாக மாற்றப்பட்டு விட்டது.

இதனை மாற்றாமல் யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்களின் பிரச்சனையை தீர்க்க முடியாது. கார்ப்பரேட் காவி பாசிசத்தை வீழ்த்துவதற்கு குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணி அமைத்து ஜனநாயகக் கூட்டரசு நிறுவுவதும், ஜனநாயக கூட்டரசு மூலம் அம்பானி, அதானி போன்ற தேசங்கடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் சொத்துக்களை பறித்து மக்களுக்கு கொடுக்காமல் மக்களின் வாழ்வை முன்னேற்ற முடியாது.

■ லூர்துசாமி

# அதிகரிக்கும் புலம்பெயர் தொழிலாளர்கள்! தேவை சர்வதேச ஒருங்கிணைப்பு!

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்றதிலிருந்து சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுப்பது என்ற பெயரில் புலம் பெயர்ந்தவர்களின் குடியேற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வந்தார். தற்போது புலம் பெயர்ந்த குடியேற்றத்திற்கு எதிரான கருத்துக்கள் ஐரோப்பிய நாடுகளில் மேலோங்கியுள்ளது. ஆசியாவின் சில பகுதிகளில் குடியேற்ற எதிர்ப்பு கருத்து வலுப்பெற்று வருகிறது. இதனால் உலகின் பல நாடுகளில் குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

கடந்த சில மாதங்களில் மட்டும் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜெர்மன், ஜப்பான், அயர்லாந்து, இத்தாலி, போலந்து ஆகிய நாடுகளில் புலம் பெயர்ந்த குடியேற்றத்திற்கு எதிரான போராட்டங்கள் தொடங்கி வன்முறையாக மாறியுள்ளன. அங்குள்ள ஊடகங்கள் இதனை புலம் பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு எழுச்சி என அறிவிக்கின்றன.

2017- ஆம் ஆண்டில் ட்ரம்பின் எல்லைச் சுவர் (Border Wall) திட்டத்தை புகுத்தி புலம் பெயர்ந்த குடியேற்றத்திற்கு எதிராக செயல்பட்ட பிறகு ஐரோப்பாவின் சில பகுதிகளிலும் இதே பிரச்சனை வெடித்தது. அப்போது, ''நாங்களில்லாமல் ஒரு நாள்'' என்ற பெயரில் ஒரு நாள் வேலை நிறுத்தத்தை புலம் பெயர்ந்த மக்கள் நடத்தினர். எனினும், கட்டாயமாக வெளியேற்றப்பட்ட மக்களுக்கு துருக்கி, வங்காள தேசம் மற்றும் உகாண்டா ஆகிய மூன்று நாடுகள் அடைக்கலம் கொடுத்தன என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டனில் தீவிர வலதுசாரி ஆர்வலர் டாமி ராபின்சன் ஏற்பாடு செய்த புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான பேரணி.



## மக்களின் குடியேற்ற எதிர்ப்பு காரணமும்! பாசிச சக்திகளின் பங்கும்!

உலக அளவில் புலம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக போராடும் ஒவ்வொரு நாட்டின் மக்களும் முன் வைக்கின்ற கருத்தானது, தங்களது வேலைகளை பறித்து போட்டியாளர்களாக உள்ளனர்; ஊதியங்களைக் குறைக்கிறார்கள்; அமைதியான சமூகத்தில் குற்ற சம்பவங்களை அதிகரிக்கிறார்கள்; பணத்தை சம்பாதித்து அவர்கள் நாட்டிற்கு அனுப்புவதால் பொருளாதார பாதுகாப்பின்மை உருவாக்கும் போன்றவையே. இந்தக் காரணங்கள் எதுவும் மக்கள் தங்களது சொந்த அனுபவத்திலிருந்து உணர்ந்து வரவில்லை. மாறாக அந்தந்த நாட்டில் உள்ள தீவிர வலதுசாரி மற்றும் பாசிச கட்சிகளால் ஏகாதிபத்திய உலகமயமாக்கல், அதன் தோல்வி போன்ற உண்மைக் காரணங்களை மறைத்து மேற்கண்ட விளைவுகளை மட்டும் பெரிதுபடுத்தி கட்டியமைக்கப்பட்ட பிரச்சாரத்தினால் உருவானதே.

மறுபுறம், சமூக ஊடக தளங்களின் பயன்பாடு அதிகரிப்பு தன்மை மற்றும் AI போன்ற தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை கருவியாக பயன்படுத்தி கொண்டு புலம்பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு பிரச்சனையை தீவிரப்படுத்துகின்றன. பாசிச சக்திகளால் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட தவறான தகவல்கள் புலம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக நேரடி வன்முறையின் அடிப்படையில் கடுமையான மற்றும் உடனடி விளைவுகளை ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல. உதாரணமாக, பிரிட்டனில், ''மூன்று குழந்தைகளைக் கொன்று தாக்குதல் நடத்தியவர் சட்டவிரோத குடியேறி'' என தீவிர வலதுசாரி நபர் ஒருவர் பதிவிட்டதே மக்கள் வன்முறையில் இறங்க காரணமாக இருந்தது.

மறுபுறம் தீவிர வலதுசாரி - பாசிச சக்திகளுக்கு தீனி போட்டு வருகிறார் எலான் மஸ்க். குறிப்பாக, ஒவ்வொரு நாட்டில் நடக்கும் புலம்பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு போராட்டத்தை ஆதரித்து தனது வலைதளத்தில் பாராட்டி எழுதுவது என செய்து வருகிறார். 2024-ஆம் ஆண்டு தொடக்கம் முதலே எலான் மஸ்க், எல்லைகள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் ''பேரழிவு'' ஏற்படும் என்று பதிவு செய்து வருகிறார். அமெரிக்க தொடங்கி ஆஸ்திரேலியா ஜப்பான் வரையிலான

அவரது குடியேற்ற எதிர்ப்பு கருத்துக்கள் பரப்புவதை தீவிர வலதுசாரி குழுக்கள் - பாசிச சக்திகள் செய்து வருகின்றனர்.

## குடியேற்ற எதிர்ப்பு எழுச்சி அல்ல! பாசிச சக்திகளின் சூழ்ச்சி!

உலகம் முழுவதும் ஏகாதிபத்திய முதலாளித்துவம் நெருக்கடியில் சிக்கி மீள முடியாமல் முட்டு சந்தில் நின்று கொண்டு திணறுகிறது. இதில் மேல்நிலை வல்லரசான அமெரிக்கா, ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளில் நெருக்கடி இன்னும் தீவிரமாக உள்ளது என்பதே உண்மை.

இந்த நிலையில், 2020-ஆம் ஆண்டு ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று அதனால் உருவான பொது முடக்கம், மூன்று ஆண்டுகளாக முடிவுக்கு வராமல் பதட்டத்தை அதிகரித்து வரும் உக்ரைன்-ரஷ்யா போர், பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் இன அழிப்புப் போர் உள்ளிட்டவை ஏகாதிபத்திய நெருக்கடிகளை மேலும் மேலும் தீவிரப்படுத்தி பாசிசத்தை நோக்கி நகர்த்தி வருகிறது. இதன் விளைவு உலக நாடுகளில் தீவிர வலதுசாரி -பாசிச சக்திகள் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு மக்களிடம் செல்வாக்கு பெற்று வருகின்றன. இந்த கட்சிகள் ஏகாதிபத்திய முதலாளித்துவம் உருவாக்கியுள்ள பொருளாதார சமத்துவமின்மை, வேலை பாதுகாப்பின்மை, வேலையின்மை, கலாச்சார மாற்றங்கள் மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை, அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கோவத்தை, அதிருப்தியை, எழுச்சி மனப்பான்மையை புலம் பெயர்ந்த மக்களுக்கும் எதிராக திருப்பி இனவெறி பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றன.

குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் அரசியல் - பொருளாதார ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகியவை. சென்ற ஆண்டு நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய தேர்தலில் ஜெர்மனியின் நவ-நாஜி கொள்கைகளை தீவிரமாக பேசும் ஜெர்மனிக்கான மாற்று (AfD - Alternative for Germany) என்ற பாசிசக் கட்சியும், பிரான்சில் தேசிய பேரணி (National Rally) என்ற பாசிசக் கட்சியும், இத்தாலியில் ஏற்கெனவே இத்தாலியின் சகோதரர்கள் (Brothers of Italy) என்ற பாசிசக் கட்சியும் அதிக வாக்கு சதவீதத்தை பெற்று குறிப்பிடத்தக்க வெற்றியை பெற்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் தனி முகாமாக இருந்து வருகின்றன.

2024-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஐரோப்பிய நாடாளுமன்றத்தில், இடம்பெயர்வு மற்றும் புகலிடக் கொள்கையை மறுவடிவமைப்பு செய்வதற்கான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஐரோப்பிய நாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த மக்களின் குடியிருப்புக்கு பெரும் ஆபத்தை உருவாக்கியது. ஆனால், ஐரோப்பிய நாடுகளில் உள்ள தீவிர வலதுசாரி-பாசிசக் கட்சிகள் புலம்பெயரும் மக்களை தடுப்பதற்கு மறு வடிவமைப்பு ஒப்பந்தம் போதுமானதாக இல்லை என ஏற்க மறுத்தன.

மேற்கண்ட தீவிர வலதுசாரி பாசிசக் கட்சிகள் தான் தற்போதைய புலம்பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆணி வேராக உள்ளன. அதேபோல், பிரிட்டனில் உள்ள தீவிர வலதுசாரி கட்சியான சீர்திருத்த கட்சியும் அதன் தலைவருமான நிகேல் ஃபரேஜ் புலம்பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு பிரச்சாரத்தை செய்து வருகிறது. புலம்பெயர்ந்த மக்களுக்கு எதிரான உலக அளவில் நடைபெறும் போராட்டம் பாசிச சக்திகளின் சூழ்ச்சியால் உருவாக்கப்பட்டதே தவிர ஒவ்வொரு நாட்டு மக்களுடைய இன எழுச்சி போராட்டம் அல்ல.

## புலம்பெயர்வுக்கான காரணங்களும் - உண்மைகளும்!

ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்க அதிகார போட்டியால் உருவாகியிருக்கும் போர்களாலும், மறுகாலனியாக்க பொருளாதார கொள்கைகளை தீவிரமாக அமல்படுத்தியதாலும் மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்டிருக்கும் வறுமை, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளில் தேவைப்படும் மனித உழைப்பு, திறன் சார்ந்த உழைப்பு உள்ளிட்ட காரணங்களால் மக்கள் உலகின் பல நாடுகளுக்கு புலம் பெயர்கிறார்கள்.

மேற்கண்ட கூற்றை நிரூபிக்கிறது புலம் பெயர்வோருக்கான சர்வதேச ஆய்வறிக்கை. போர், பொருளாதார நிலையற்ற தன்மை, பருவநிலை மாற்றம் ஆகிய மூன்று காரணிகள் சர்வதேச புலம் பெயர்வுகளுக்கு காரணமாக இருக்கலாம் என்கிறது புலம் பெயர்வோர்க்கான சர்வதேச அமைப்பின் 2024-ஆம் ஆண்டிற்கான “உலக புலம் பெயர்வு” ஆய்வறிக்கை. உண்மையில்,புலம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மிகவும் நிச்சயமற்ற, கடுமையான வாழ்க்கையை நடத்துகிறார்கள். இவர்களின் உழைப்பு ஏகாதிபத்திய முதலாளிகளால் சுரண்டப்படுகிறது.

நோபல் பரிசு பெற்ற இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அபிஜித் பானர்ஜி மற்றும் ஃபிரெஞ்சு -அமெரிக்கப் பொருளாதார நிபுணரான எஸ்தர் டுஃப்லோ ஆகிய இருவரும் ‘‘புலம்பெயர்ந்தோர் ஊதியத்தைக் குறைக்கிறார்கள் அல்லது வேலைகளைத் திருடுகிறார்கள் என்பது கட்டுக்கதை’’ என்கின்றனர். பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை மேற்கோள் காட்டி, “குடியேறிகள் பெரும்பாலும் தொழிலாளர் பற்றாக்குறையை நிரப்புகிறார்கள், பொருளாதார வளர்ச்சியை உந்துகிறார்கள், மற்றும் வயதான சமூகங்களுக்கு சுறுசுறுப்பைக் கொண்டு வருகிறார்கள்’’ என நிறுவுகின்றனர்.

மேலும் புலம்பெயர்ந்தோர் பூர்வீக மக்களிடமிருந்து வேலைகளைப் பறிக்கிறார்கள் என்ற கருத்து தரவுகளால் நிரூபிக்கப்படவில்லை என பல பொருளாதார நிபுணர்கள் சமீப காலமாக எழுதி வருகின்றனர். இவைகள் அனைத்தும் மக்களிடம் மறைக்கப்படுகின்றன. மாற்றாக, புலம் பெயர்ந்த குடியேறிகளால் தான் நமது வாழ்வு பாதிக்கப்படுகின்ற தவறான கருத்து பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது என்பதே நிதர்சனமான உண்மை.

இது நாள் வரையிலும், இத்தகைய புலம் பெயர்ந்த மக்களுடன் கை கோர்க்க வெகு சிறிய அளவில் தான்

அரசியல் முயற்சிகள் நடந்து உள்ளன. இதனால்தான் இவர்களின் உரிமையை பாதுகாக்க அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு சிறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவர்களை உலக அளவில் ஒரு சக்திவாய்ந்த அரசியல் சக்தியாக ஒருங்கிணைக்கும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இது உடனடியாக செய்யப்பட வேண்டும். இல்லையெனில், இன்று ஐரோப்பிய நாடுகளில் தீவிரமடைந்து வரும் புலம்பெயர்ந்த குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் வன்முறை வெறியாட்டங்களாக மாறி புலம்பெயர்ந்த மக்கள் தாக்குதலுக்கு உள்ளாவார்கள். எனவே பல்வேறு நாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த மக்களை ஒருங்கிணைக்கும் ஓர் அமைப்பு உடனடி தேவையாக உள்ளது. பாட்டாளி வர்க்க சர்வதேச கண்ணோட்டத்தில் அத்தகைய அமைப்பு உருவாக்கத்துக்காக போராடுவோம்.

அதே நேரத்தில் நிரந்தர தீர்வு நோக்கி நகர்வதும் அவசியம். அதாவது ஏகாதிபத்திய முதலாளித் துவத்திற்கும் வளர்ந்து வரும் பாசிச சக்திகளுக்கும் எதிரான பாட்டாளி வர்க்க முகாம் இல்லை. பாட்டாளி வர்க்க முகாம் அமைக்கும் நோக்கில் உலகு தழுவிய புரட்சிகர கட்சி என்பதும் இல்லை. மாறாக இருக்கின்ற குழுக்களும் தங்களுக்குள் விவாதித்து சித்தாந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியாமல் சிதறி கிடக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புரட்சிகர சக்திகள் உலக தழுவிய பாட்டாளி வர்க்க முகாமை ஏற்படுத்துவது தங்களது கடமையாக கொண்டு வேலை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புரட்சிகர கட்சிகள் தங்கள் நாட்டில் வளர்ந்து வரும் பாசிச கட்சிகளுக்கு எதிராக குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்கி அந்நாட்டில் உள்ள பாசிச எதிர்ப்பு ஜனநாயக சக்திகளோடு விவாதித்து ஐக்கிய முன்னணி உருவாக்கி பாசிசத்தை வீழ்த்தும் வேலைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவைகளை செய்தால் மட்டுமே ஏகாதிபத்திய முதலாளித்துவம் உருவாக்கி வைத்துள்ள நெருக்கடியில் இருந்து மீண்டு, மக்களின் உண்மையான பிரச்சனைகளை தீர்க்கும் வழியை நோக்கி முன்னேற முடியும். திசை திருப்பும் பாசிச சக்திகளை ஒழித்துக் கட்ட முடியும். இத்தகைய சித்தாந்த அடிப்படை கம்யூனிஸ்டுகளிடம் மட்டுமே உள்ளது என்பதுதான் வரலாற்று உண்மை.

■ இரணியன்

# ஹிண்டன்பர்க் விவகாரத்தில் “அதானி ஃபிராடு இல்லை” ‘குற்றவாளிகளின்’ தீர்ப்பு!

ஹிண்டன்பர்க் அறிக்கை அடிப்படையில் அதானி குழுமம் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதா என விசாரிக்க இந்திய பங்கு சந்தை பரிவர்த்தனை வாரியமான செபிக்கு கடந்த 2023 மார்ச் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. கிட்டத்தட்ட 30 மாதங்களான பிறகு ‘‘அதானி மீதான முறைகேடு குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை’’ என்று இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (செபி) நிராகரித்துள்ளது. இதனை தொடர்ந்து அதானி குழுமப் பங்குகளின் விலை 1 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை ஏற்றம் கண்டது. இந்த பொய்யை புளுகுவதற்கு 2 ஆண்டுகள் தேவைப்பட்டதா என உங்களுக்கு கேள்வி எழலாம். உடனே சொன்னால் சந்தேகப்படுவீர்களே? ஆகையால் ‘‘பொய்யையும் பொருந்தப் புளுகுவதற்கு’’ தான் இந்த தாமதம்.

இந்தியாவில் அதானி என்ற ஒரு முதலாளிக்கு பிரச்சினையென்றால் அது இந்தியாவிற்கே பிரச்சினை, இந்தியாவின் பொருளாதாரத்திற்கே பிரச்சினை என்பது போல் துடிதுடித்து விடுவார் அவரது சக பங்குதாரரும், நண்பருமான மோடி. ஹிண்டன்பர்க் விவகாரத்தில் அதானியின் பங்குகள் வீழ்ந்த போது நாடே இருண்டுவிட்டதாக கருதினார் மோடி. ஆனால் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மறைமுகமாக காய்களை நகர்த்தினார். அதானி விவகாரம் நாடாளுமன்றத்தில் ஒலித்த போது வாயை திறக்காமல் மௌனம் காத்தார். அவரது சங் பரிவார் கும்பலும், மக்களவை சபாநாயகரும் அதானி குறித்த கேள்விகளை திட்டமிட்டே தள்ளிவைத்தனர் அல்லது நிராகரித்தனர். வெளிநாடுகளை பொறுத்தவரையில் இது மோடியின் இந்தியா அல்ல, அதானியின் இந்தியா என்ற அளவிற்கே சங் பரிவார் கும்பலின் செயல்பாடுகள் உள்ளன.

## ஹிண்டன்பர்க் அறிக்கையும், அதானி குழும மோசடிகளும்!

2023 ஜனவரி மாதத்தில் அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் இந்திய நிறுவனமான அதானி குழுமத்தின் மீது பங்குச் சந்தை மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டியது. வெளிநாட்டு வரி சொர்க்கங்களை முறையற்ற முறையில் பயன்படுத்தியதாகவும், குழுமத்தின் பங்கு கையாளுதல் குறித்தும் அறிக்கை குற்றம் சாட்டியது. அதாவது தமது நிறுவனங்களின் பங்குகளின் விலையை வெளிநாட்டு போலி நிறுவனங்களின் மூலம் செயற்கையாக விலையை உயர்த்திக் காட்டி மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டியது. அதானி குழுமத்தில் ஏழு பொது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களும், 578 துணை நிறுவனங்களும் பெரும்பாலும் அவராலும் அவரது குடும்பத்தினராலும் கட்டுப்படுத்தப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றன என்று அறிக்கை சுட்டிக்காட்டியது. ஹிண்டன்பர்க்கின் இந்த ஆய்வறிக்கைக்குப் பிறகு, அதானி குழுமத்தின் மீதான நம்பிக்கை இழந்து ஏராளமான

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தாங்கள் முதலீடு செய்திருந்த பங்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். இதனால் அதானி குழும நிறுவனங்களின் பங்குகள் விலை இரண்டே நாள்களில் 20 முதல் 30 சதவிகிதம் வரை சரிந்தது. அதானி நிறுவனத்திற்கு 12 லட்சம் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. உலகின் மூன்றாவது பணக்காரர் என்ற நிலையில் இருந்து 20வது நிலைக்கு தள்ளப்பட்டார்.

குஜராத்தை சேர்ந்த தேசங்கடந்த தரகு முதலாளியான அதானி மோடியின் நெருங்கிய நண்பர் என்பதாலும், 2014ல் மோடி பிரதமராக பதவியேற்ற பின்பே அதானியின் சொத்துமதிப்பு பல மடங்கு உயர்ந்தது என்பதாலும், உலகின் மூன்றாவது பெரிய பணக்காரன் என்ற அளவுக்கு அதானி உயர்ந்ததற்கு மோடியும் ஒரு காரணம் என்பதாலும் ஹிண்டன்பர்க் அறிக்கை ஏற்படுத்திய விளைவு இந்திய அரசியலில் பெரும் விவாதப் பொருளாக வெடித்தது. இதனை தொடர்ந்து தான் மக்களிடையே பெரும் விவாதப்பொருளாக மாறிவிடக் கூடாது என்பதற்காக உச்சநீதிமன்றம் இந்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்து மூன்று மாதத்தில் அறிக்கை அளிக்குமாறு கடந்த 2023 மார்ச் மாதம் பங்குச்சந்தையை ஒழுங்குப்படுத்தும் அமைப்பான செபிக்கு (SEBI) உத்தரவிட்டது. மேலும் அதானி குழும விவகாரத்தில் பங்குசந்தையில் செய்யப்பட்ட விதிமீறல்களை செபி சரியாக கையாண்டதா என்பது பற்றி விசாரிக்க ஒரு நிபுணர் குழுவையும் உச்சநீதிமன்றம் நியமித்தது. இது அனைத்தும் அதானியை காப்பாற்றவே என்பது உச்சநீதிமன்றம் நடந்துக் கொண்ட விதமும் செபி விசாரணையின் லட்சணத்தில் இருந்து புரிந்துக் கொள்ளலாம்.

இந்த நிலையில்தான் அதானியின் தலையில் இரண்டாவது குண்டைப் போட்டது ஹிண்டன்பர்க். ஆனால் இந்த முறை சிக்கியது அதானி இல்லை. மாறாக, அதானி குழுமத்தின் முறைகேட்டை விசாரித்த செபியின் தலைவர். இரண்டாவது அறிக்கை வெளியான சில மணி நேரங்களிலேயே அதானி நிறுவன பங்குகள் வீழ்ச்சியடைந்து 53,000 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டதாக செய்திகள் கூறின. இந்த பிரச்சினை முதல் அறிக்கை போல் மக்களிடம் பேசுபொருளாகாமல் அதானியின் பெயர் கெடாமல் ஒன்றிய மோடி அரசும் கவனமாக கையாண்டது எனக் கூறலாம். செபியை விசாரிக்க உச்சநீதிமன்றம் அமைத்த நிபுணர் குழுவானது இரண்டு மாதங்கள் விசாரணை செய்து 'உத்தமர்' அதானி விவகாரத்தில் செபியின் தரப்பில் எந்தவித ஒழுங்குமுறை தோல்வியையும் கண்டறிய முடியவில்லை என தனது முடிவை அறிவித்தது.

உச்சநீதிமன்றம் நியமித்த இந்த நிபுணர் குழுவில் பட் மற்றும் சுந்தரேசன் அதானி குழுமத்துடன் தொழில்ரீதியாக தொடர்பு வைத்திருந்ததாக உச்சநீதிமன்றத்தில் மற்றொரு மனுதாரரான அனாமிகா ஜெய்ஸ்வால் தனது ஆட்சேபனையை எழுப்பினார். ஆனால் உச்சநீதிமன்றமோ 'இந்திய பிரதமர் மோடிக்கு நெருக்கமான விவகாரம்' நாம் எதற்கு மூக்கை நுழைத்துக் கொண்டு என கண்டுக் கொள்ளாமல் புறந்தள்ளியது. இந்த நேரத்தில் தான் ஹிண்டன்பர்க்கின் இரண்டாவது அறிக்கை செபியின் தலைவராக இருந்த மாதபி புரி புச் மற்றும் அவரது கணவர் தவல்புச் ஆகியோர் அதானி குழுமத்திற்கு தொடர்புடைய மொரீசியஸ் மற்றும் பெர்முடா தீவுகளில் உள்ள போலியான நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளனர் என்று குற்றம் சாட்டியது.

அதானியின் முறைகேடு மற்றும் ஊழல் விவகாரத்தில் கடந்த 2024 செப்டம்பர் புதிய ஜனநாயகம் இதழில் *"ஹிண்டன்பர்க் அறிக்கை 2.0: அதானியும் செபியும் ஒண்ணு! அதை அறியாதவன் வாயில மண்ணு!* என தலைப்பிட்டு அதானிக்கும் செபிக்கும் உள்ள தொடர்பை அம்பலப்படுத்தி புதிய ஜனநாயகத்தில் எழுதியிருந்தோம். குறிப்பாக *"செபியின் தலைவராக இருந்த மாதவி புரி புச் 2013 அக்டோபரில் ஐசிஐசிஐ பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றதையும், 2015 ஆம் ஆண்டில் அதானியின் போலி நிறுவனங்களின் பல்லாயிரக்கணக்கான பங்குகளை வாங்கியதையும், 2017 ஆம் ஆண்டில் செபியின் நிரந்தர உறுப்பினராகப்பட்டதையும், 2022ல் செபியின் தலைவராக நியமிக்கப்பட்டதையும், செபியின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் மாதவியின் பெயரிலிருந்து பங்குகள் அவரது கணவர் தாவல் பூரி புச் பெயரில் மாற்றப்பட்டதையும் குறிப்பிட்டிருந்தோம்."*

அதே மாதபி புரி புச் 2013 ஆம் ஆண்டு ஐசிஐசிஐ வங்கி பதவிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றபின் 2017 ஆம் ஆண்டில் செபி நிரந்தர உறுப்பினராக ஆன பிறகு இன்று வரை ஐசிஐசிஐ வங்கியிடமிருந்து 16.8 கோடி ஊதியமாக பெற்று வருகிறார். அது செபியின் தலைவராக அவர் பெற்ற 3.3 கோடி ஊதியத்துடன் ஒப்பிடுகையில் 509 சதவீதம் அதிகமாகும் என காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவு தலைவர் பவன் கேரா குற்றம் சாட்டியதையும் எழுதி இருந்தோம். அதுமட்டுமல்ல செபியின் முக்கிய பொறுப்பில் அதானியின் சம்மந்தி அதாவது அதானி மகனின் மாமனார் இருக்கிறார் என்பதால் தனியாக ஒரு குழு அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மனு செய்த போதும், அதை மறுத்து செபிதான் விசாரிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் பிடிவாதம் பிடித்து தானும் மோசடி கும்பலின் கூட்டாளிதான் என்பதை அப்போதே நிலைநாட்டிக் கொண்டது.

கடந்த மார்ச் 2025 அன்று சர்ச்சைக்குள்ளான அதானியின் கூட்டுகளவானியான செபியின் தலைவர் மாதபி புரி புச்சின் பதவிக்காலம் முடிவடைந்ததால் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) புதிய தலைவராக மத்திய நிதித் துறை செயலாளர் துஹின் காந்தா பாண்டே நியமனம் செய்யப்பட்டார். அதானி மீதான விசாரணை நடைபெறும் பொழுது நியமிக்கப்பட்ட செபியின் தலைவர் நியாயமாக செயல்படுவார் என எண்ணினால் நாம் இன்னும் பாசிச மோடியை புரிந்துக் கொள்ளவில்லை என்றே அர்த்தம். இவர் இந்திய பொதுத்துறை நிறுவனமாக இருந்த ஏர் இந்தியா நிறவனத்தை டாடா குழுமத்திற்கு தாரை வார்த்ததில் முக்கிய பங்காற்றியவர் ஆவார். தரகுமுதலாளிகளின் நம்பிக்கைக்குரிய நபர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஒரு விசாரணை நடைப்பெற்றால் அது அதானிக்கே சாதகமாக அமையும் என்பது சாதாரண பாமரனுக்கே தெரியும். ஆகையால் செபி அறிவித்த முடிவு நமக்கு ஆச்சரியமளிக்கவில்லை. ஆனால் அதானி என்ற முதலாளியை காப்பாற்ற இந்திய ஒன்றிய

அரசு, அதிகார வர்க்கம், உச்ச நீதிமன்றம் என அனைத்தும் வரிந்துக் கட்டி வருவது இந்திய உழைக்கும் மக்களுக்கு மிகப்பரிய ஆபத்து என்பது தான் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கிய விசயம்.

## செபியின் clean chit to Adani Group அறிக்கையும்! அதானியின் குதூகலமும்!

மோடி அரசின் அனைத்து துறைகளும் எப்படி அதானிக்கு சாதகமாக செயல்பட்டது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக் காட்டு தான் அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் தாக்கல் செய்த அவதூறு வழக்கின் மீதான ஒரு இடைக்கால ஆணை. பத்திரிக்கையாளர்களும் சமூக வலைதள பதிவாளர்களும் சமூக செயல்பாட்டாளர்களும் அதானி நிறுவனம் குறித்த "அவதூறான" செய்திகள் (2023 ஹிண்டன்பர்க் அறிக்கையை மையமாகக் கொண்ட) கட்டுரைகள், சமூக ஊடக பதிவுகள் உள்ளிட்டவற்றை அகற்ற வேண்டும் என்பதே அந்த இடைக்கால ஆணை. அதாவது அதானிக்கு எதிராக பேசியவர்கள், எழுதியவர்களின் பதிவுகளை நீக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணைப் பிறப்பித்துள்ளது. நிறுவனம் எந்தப் பதிவுகளுக்கான இணைப்புகளையும், தரவுத்தளங்களையும் அனுப்புகிறதோ, அதன்படி அரசாங்க அமைப்புகள், 36 மணி நேரத்திற்குள் அவற்றை நீக்குவதற்கு ஆணையிடும். இப்படி அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்க வைக்கும் அதிகாரத்தையும் நீதிமன்ற ஆணை அதானி குழுமத்திற்கு அளிக்கிறது என்றும் எடிட்டர்ஸ் கில்ட் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆணையைத் தொடர்ந்து தகவல்ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் அவசர நடவடிக்கையையும் பத்திரிக்கையாளர் சங்கம் விமர்சித்திருக்கிறது.

''ஒரு கார்ப்பரேட் நிறுவனத்திற்கு இதுபோன்ற ஒட்டுமொத்த அதிகாரங்களை வழங்குவதும், அமைச்சகம் பதிவு நீக்க ஆணைகளைப் பிறப்பிப்பதும் தணிக்கையை நோக்கி ஓரடி எடுத்து வைப்பதேயாகும் என்று சங்கம் கவலை கொள்கிறது. இது, நியாயமான செய்தி சேகரிப்புக்கும், விமர்சனத்திற்கும், நையாண்டிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி, பேச்சுச் சுதந்திரத்திற்கும் கருத்து வெளிப்பாட்டிற்குமான அடிப்படை உரிமையை அரித்துவிடும்,'' என்று சங்கத்தின் தலைவர் அனந்த் நாத் (தி கேரவன்), பொதுச் செயலாளர் ருபேன் பானர்ஜி (அவுட்லுக்), பொருளாளர் கே.வி. பிரசாத் (தி டிரிபியூன்) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். செபியின் அதானி clean chit அறிக்கை வெளியாவதற்கு முன் இப்படியான கருத்துச் சுதந்திர பறிப்பு நடந்துள்ளது.

"ஒரு விரிவான விசாரணைக்குப் பிறகு, ஹிண்டன்பர்க் முன்வைத்த குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்பதையே எப்போதும் நாங்கள் வலியுறுத்தியபடி, செபி (SEBI) மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. வெளிப்படைத்தன்மையும், நேர்மையும் எப்போதும் அதானி குழுமத்தின் அடையாளங்களாகவே இருந்து வருகின்றன. இந்த போலியான நோக்கமுடைய அறிக்கையால் பணத்தை இழந்த முதலீட்டாளர்களின் துயரத்தை நாங்கள் ஆழமாக உணர்கிறோம். தவறான கதைப்போக்குகளை பரப்பியவர்கள் நாட்டிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்தியாவின் நிறுவனங்களுக்கும், இந்திய மக்களுக்கும், தேச கட்டமைப்பிற்குமான எங்களின் அர்ப்பணிப்பு எப்போதும் அசைக்க முடியாததாகவே உள்ளது'' என்று 'தேசப் பற்றாளரான' பங்குச்சந்தை மோசடி பேர்வழியான அதானி உணர்ச்சிப் பொங்க அறிக்கை அளித்துள்ளார். அதாவது தனக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது இந்தியாவிற்கே பாதிப்பு என்றும் தன்னை எதிர்ப்பவர்களை தன்மீது குற்றம் சுமத்துபவர்களை தேசவிரோதிகள் என ஆர்எஸ்எஸ் பாணியில் அறிக்கை விட்டுள்ளார்.

இந்தியாவில் அதானி ஊழல் மோசடிகள் செய்வது இது முதல்முறை அல்ல. 1999 ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு மோசடி குற்றச்சாட்டுகளுக்காக அபராதம் கட்டியுள்ளார். கௌதம் அதானியின் சகோதரர் மீது சுங்க வரி ஏய்ப்பு மற்றும் மோசடி குற்றங்களுக்காக பலமுறை கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் இப்போது அதானியின் நம்பிக்கைக்குரிய நண்பர் மோடி அதிகாரத்தின் உச்சத்தில் அமர்ந்திருப்பதால் என்ன தவறுகள் செய்தாலும் தப்பிவிடலாம். எவ்வளவு நிதி தேவையானாலும் அரசின் கஜானாவில் இருந்து சூறையாடிக் கொள்ளலாம். எவ்வளவு கடன் வாங்கி கட்டாமல் இருந்தாலும் வாராக் கடன் மூலம் தள்ளுபடி செய்யச் சொல்லலாம் என்ற மிதப்பில் தான் அதானி தேசபக்தி வேசம் போடுகிறார். மக்களின் பணத்தை சூறையாடுகிறார். அதற்கு உடந்தையாக உச்சநீதிமன்றம், செபி என அரசின் அதிகார மையங்களை பயன்படுத்திக் கொண்டு தன்னை விடுவித்துக் கொள்கிறார்.

இந்தியாவில் அதானி, அம்பானி போன்ற தேசங்கடந்த தரகு முதலாளிகளின் கார்ப்பரேட் கொள்ளையால் அவர்களின் சொத்து மதிப்பு பலமடங்கு உயர்ந்துள்ளது. அதாவது நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 50 சதவீத மக்களின் சொத்துக்கு நிகராக 1 சதவீத முதலாளிகளிடம் சொத்துக்கள் குவிந்துக் கிடக்கின்றன. இதனால் இந்தியாவில் சமூக ஏற்றத்தாழ்வு அதிகரித்து மக்கள் வறுமையின் பிடியில் சிக்கி ஒருவேளை சோற்றுக்காக அல்லாடும் நிலை உருவாகியுள்ளது.

நீங்கள் என்மீது என்ன வழக்கு போட்டாலும் என் சொத்து மதிப்பு குறையவில்லை, லாபம் அதிகரித்து வருகிறது என திமிராக பேசுகிறார் அதானி. அதற்கான தைரியத்தை அதானிக்கு அளித்தது பாசிச மோடியே. அதானியின் கொள்ளைக்கு ஆதரவாக அரசின் அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து நிற்கின்றன. அதானிக்கு ஒன்றென்றால் துடித்துப் போய் அதனை சரிக்கட்ட திட்டங்கள் தீட்டுகின்றன. ஆனால் அதானி உள்ளிட்ட முதலாளிகளாலும் அவருக்கு ஆதரவான காவி பாசிச கும்பலும் பாதிக்கப்பட்ட நாம் சாதி, மத, மொழி, இன ரீதியாக சிதறிக் கிடக்கிறோம். மிகப்பெரும் சக்தியாய் வளர்ந்து நிற்கும் கார்ப்பரேட் காவி பாசிச கூட்டணியை வீழ்த்த நமது ஒன்றுபட்ட மக்கள் எழுச்சியின் மூலம் தான் பதிலளிக்க முடியும். நமக்கான அரசை அமைக்க முடியும் என்பதை உணர்ந்து முன்னேறுவோம்.

■ மாரிமுத்து

# துருக்கி:
# எர்டோகன் ஆட்சியின் பாசிசத் தாக்குதல்கள்!

உலகம் முழுவதும் ஏகாதிபத்திய முதலாளித்துவப் பொருளாதாரம் உருவாக்கியுள்ள மிகப்பெரும் பொருளாதார மற்றும் அரசியல், பண்பாட்டு நெருக்கடிகள் சொல்லிக் கொள்ளப்படும் ஜனநாயக ஆட்சி முறைக்கு படிப்படியாக முடிவு கட்டி வருகிறது.

நாட்டை ஆள்வதற்கு முன் வைக்கப்படும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் உரிமைகளை வழங்குகின்ற பிரிவுகள் அனைத்தும் நீக்கப்படுகின்றன அல்லது அரசியல் அமைப்புச் சட்டமே தனது பாசிச பயங்கரவாத ஆட்சிக்கு பொருத்தமாக மறுவார்ப்பு செய்யப்படுகிறது.

இந்த வகையில் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான துருக்கியில் அதன் பாசிச சர்வாதிகாரியான எர்டோகன் ஆட்சி சொல்லிக் கொள்ளப்படும் ஜனநாயக உரிமைகளுக்கு சாவு மணியடித்து வருகிறது.

உலகின் 17-வது பெரிய பொருளாதாரமான துருக்கி, ஐரோப்பாவை விட வருமானத்திலும், செல்வ சமத்துவமின்மையிலும் முன்னிலை வகிக்கிறது. ஒரு கட்டத்தில் 80 சதவீதத்தை எட்டிய அதிகாரப்பூர்வ பணவீக்கம் 2022 முதல் உச்சத்தை அடைந்துள்ளது. மேலும், அரசாங்கத்தின் கடுமையான சிக்கன நடவடிக்கைக்கான திட்டம், உண்மையான ஊதியங்களையும், தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தையும் பேரழிவிற்கு உட்படுத்தியுள்ளது. கோவிட்-19 தொற்றுநோய்க்கு அரசாங்கம் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டத்திற்கு செல்வத்தை பெருமளவில் மாற்றுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கையானது, வர்க்க ரீதியிலான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்து சமூகப் பதட்டங்களை அதிகரித்துள்ளது.

மதச்சார்பற்ற குடியரசு மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான எக்ரெம் இமாமேக்லு கைது செய்யப்பட்டதை கண்டித்து துருக்கி மக்களின் போராட்டம்.



2000-ஆம் ஆண்டில், துருக்கியின் 65 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்ந்தாலும், இந்த எண்ணிக்கை இப்போது 90 சதவீதத்தை தாண்டியுள்ளது. 2022-ஆம் ஆண்டில், கூலித் தொழிலாளர்களின் விகிதம் 70 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இது, 2000-ஆம் ஆண்டில் 48 சதவீதமாக இருந்தது. 35 மில்லியன் தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் பெரிய தொழில்துறையைக் கொண்ட நகரங்கள் ஆகியவற்றுடன் துருக்கி மிகவும் வளர்ந்த மற்றும் அதிகரித்து வரும் போர்க்குணமிக்க தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டுள்ளது.

"துருக்கியில் ஆளும் நீதி மற்றும் மேம்பாட்டுக் கட்சி என அழைக்கப்படும் ஏகே கட்சியின் தலைவரும், பிரதமருமான எர்டோகன் இந்தியாவின் நரேந்திர மோடி போன்று ஒரு மத ரீதியிலான ஆட்சி நடத்தும் வலதுசாரி அடிப்படைவாதி. மூன்றுமுறை தேர்தலில் வென்று பிரதமரானவர். பத்து ஆண்டுகளுக்கு மேல் பிரதமராக இருக்கும் அவருக்கு இது மூன்றாவது பதவிக் காலம். தேர்தல் எல்லாம் நடக்கும் ஜனநாயக நாடுதான் துருக்கி என தப்புக்கணக்கு போடக் கூடாது. ஜனநாயக முறை தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்க அதிபர் முதலாளிகளின் நலன்களுக்காக செயல்படுவதை போலத் தான் துருக்கியிலும், பிரதமர் பன்னாட்டு முதலாளிகளுக்கும் அமெரிக்க நலன்களுக்காகவும்தான் செயல்படுகிறார்" என்று துருக்கியில் நடந்த மக்கள் எழுச்சி பற்றி 2013-ஆம் ஆண்டு எமது இணையதளத்தில் எழுதியிருந்தோம்.

2003-ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை துருக்கியின் அதிபராக உள்ள எர்டோகன் 2019-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் செய்த திருத்தத்தின்படி பிரதமர் ஆட்சி முறையை ஒழித்துக் கட்டிவிட்டு ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டு வந்துள்ளார். 2023-ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற தேர்தலில், AKP தலைமையிலான கூட்டணி 49.5 சதவீத வாக்குகளைப் பெற்று பெரும்பான்மையான நாடாளுமன்ற இடங்களை வென்றது, அதே நேரத்தில் CHP தலைமையிலான கூட்டணி 35 சதவீத வாக்குகளைப் பெற்றது. குர்திஷ் ஆதரவு பசுமை இடது கட்சி (YSP) 10.6 சதவீதத்தை பெற்றது. சட்டமன்ற கட்டுப்பாடுகள், தேர்தல் செயல்பாட்டில் அரசியல் தலையீடு மற்றும் பிற காரணிகளால் தேர்தல்கள் பாதிக்கப்பட்டதாக அப்போதே சர்வதேச பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

2023-ல் புதிதாக ஆட்சிக்கு வந்த பிறகு, "வாக்களிக்கும் உரிமை; நடைமுறையில்


பாசிஸ்ட் எர்டோகன்

**''வாக்களிக்கும் உரிமை; நடைமுறையில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள்; ஒன்றுகூடும் சுதந்திரம்; கருத்துச் சுதந்திரம்; மற்றும் பத்திரிக்கைச் சுதந்திரம்'' - அனைத்தும் எர்டோகன் அரசினால் நிராகரிக்கப்பட்டு வருகிறது.**

மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள்; ஒன்று கூடும் சுதந்திரம்; கருத்துச் சுதந்திரம்; ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான சுதந்திரம் மற்றும் பத்திரிக்கைச் சுதந்திரம்'' ஆகியவை அனைத்தும் எர்டோகன் அரசினால் நிராகரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2025 மார்ச் மாதம் இஸ்தான்புல் நகர மேயராகவும், மதச்சார்பற்ற குடியரசு மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான எக்ரெம் இமாமேக்லு கைது செய்யப்பட்டதன் மூலமாக எர்டோகனின் பாசிச சர்வாதிகாரம் பளிச்சென வெளிப்படத் தொடங்கியது.

எர்டோகனின் ஆட்சிக்கு எதிராக 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற உலோக தொழிலாளர்களின் போராட்டம் மற்றும் 2025-ஆம் ஆண்டு துவங்கியது முதல் நடந்து வருகின்ற சுரங்கத் தொழிலாளர்கள், ஜவுளித் தொழிலாளர்கள் போராட்டம், சுகாதார வல்லுநர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் போராட்டம் ஆகியவை அனைத்தும் புதிய உச்சத்திற்கு சென்றுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் புதிய ஒழுங்கமைப்பு ஒன்றை உருவாக்க துடிக்கின்ற அமெரிக்க மேல்நிலை வல்லரசின் ஆணைக்கு இணங்க நேட்டோவின் ரஷ்யா மீதான தாக்குதல்களை ஆதரிப்பது; ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்துகின்ற பதிலிப் போர்கள் மற்றும் பகிரங்க போர்களுக்கு ஆதரவு தருவது; காசாவின் மீதான இஸ்ரேலின் யூத, ஜியோனிச பயங்கரவாத தாக்குதலை ஆதரிப்பது என்ற வகையில் எர்டோகன் ஆட்சி பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பாசிச பயங்கரவாத ஆட்சியாக நீடித்து வருகிறது.

1922-ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தில் இருந்த துருக்கியை முஸ்தபா கெமாலின் தலைமையில் சோவியத் யூனியன் உதவியுடன் துருக்கியில் தேசியப்புரட்சி நடந்தது. மதச்சார்பற்ற அறிவியல் கல்விக்கான கதவினையும் அந்தப் புரட்சி தன் குடிமக்களுக்கு திறந்து விட்டது. பரிணாமவியல் பற்றி அடிப்படை வகுப்புகளில் இருந்தே கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அழுத்தத்தையும் அது ஆழமாக விதைத்திருந்தது.

மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த எர்டோகன் இஸ்லாமிய சட்டத்தை அமலாக்க துவங்கினார். அதுவரை அறிவியல் பூர்வமான உண்மைகளின் அடிப்படையில் ஆட்சி நடந்தது. ஆனால் எர்டோகன் ஆட்சியில் அவை அனைத்தும் தூக்கி எறியப்பட்டு அறிவியலுக்கு முரணான மத அடிப்படையிலான கல்வி திணிக்கப்பட்டது. பரிணாம வளர்ச்சி கோட்பாட்டுக்கு சாவு மணியடிக்கப்பட்டது.

நூற்றாண்டுகளுக்குப் பிறகு அறிவியலைப் பற்றியதான துருக்கியின் இந்த நிலைப்பாடு இசுலாமிய அடிப்படைவாதிகளுக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல. மதச்சார்பற்ற ஆட்சி, ஜனநாயக குடியரசு என்ற பெயரில் எல்லாம் பம்மாத்து செய்து வருகின்ற மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்களின் ஆட்சி படிப்படியாக பாசிச சர்வாதிகாரத்தை நிலை நாட்டுகின்ற ஆட்சியாக உருவெடுத்து வருகிறது.

ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சிப் போக்கானது நிதி மூலதனத்தின் சுரண்டல் மற்றும் கொள்ளை லாப வேட்டைக்காக, கார்ப்பரேட்டுகளின் நலனை பாதுகாக்கின்ற அரசியல், பொருளாதார, பண்பாட்டுக் கொள்கைகளை திணிப்பதும் அதற்கு எதிராக போராடுகின்ற மக்களின் மீது மத ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்துவது; அதன் தொடர்ச்சியாக பாசிச சர்வாதிகார அடக்குமுறைகளை ஏவி விடுவது என்ற முறையில் பயணிக்கிறார்கள்.

இந்தியாவின் பிரதமரான பாசிச மோடி இதுபோன்ற வழிமுறையை தான் கையாண்டு வருகின்றார் என்பதும், அமெரிக்க எஜமானனின் அடிமைகளான துருக்கியின் எர்டோகன் மற்றும் இந்தியாவின் மோடி ஆகியவர்கள் இணை பிரியாத நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது, எர்டோகனும் மற்றொரு சகபாடியான நெதன்யாகுவும் இணைந்து மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்காவிற்கு விசுவாசமான ஆட்சியை நடத்துகின்றனர். புதிய மத்திய கிழக்கின் ஒழுங்கமைப்பு என்ற பெயரில் அமெரிக்க மேல்நிலை வல்லரசு மற்றும் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் லாப வேட்டையை உத்திரவாதப்படுத்துகின்ற அடிப்படையிலேயே துருக்கியின் எர்டோகன் ஆட்சி நீடிக்கிறது.

துருக்கியில் செயல்பட்டு வரும் கம்யூனிச புரட்சிகரக் குழுக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள், இடதுசாரிக் குழுக்கள் ஆகியவை அனைத்தும் தன்னை ஒன்றிணைத்துக் கொண்டு பாசிச ஆட்சிக்கு எதிராக குறைந்தபட்ச செயல் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து போராடுவது காலத்தின் கட்டாயமாக மாறி உள்ளது.

■ நன்னிலம் சுப்பராயன்

# நேபாளத்தில் வெடித்த ஜென் Z போராட்டங்கள்:
# முன்னேற்றமா? பின்னடைவா?

சமீபத்தில் நேபாளத்தில் வெடித்த ஜென் Z போராட்டமானது மூன்று முக்கிய காரணிகளால் உருவானது. முதலாவதாக, தற்போது ஆட்சியதிகாரத்தில் உள்ள நேபாள காங்கிரஸ் (NC), நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) ஆகியவை இணைந்த கூட்டணி அரசாங்கமானது மக்களை வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டதிலும் ஆழ்த்தியுள்ளது. மக்கள் கொடூரமாக பாதிக்கப்பட்டுள்ள சூழலிலும் அதனை தீர்ப்பதற்கு முயற்சிக்காமல் மெத்தனமாக செயல்படுகிறது. ஆனால் இந்த ஆட்சியாளர்களின் குலக்கொழுந்துகளோ (மகன்கள் முதல் பேரன்கள் வரை) ஆடம்பர, உல்லாச ஊதாரி வாழ்க்கை வாழ்கின்றனர். அதனை சமூக ஊடகங்களிலும் பகிர்கின்றனர். இவை புதிய தலைமுறை இளைஞர்களுக்கு கடுமையான ஆத்திரத்தை ஊட்டியுள்ளது இதனால் தான் போராட்டக்காரர்கள் ஏந்திய பதாகைகளில் டிக்டாக்கில் வரும் வாரிசுக் குழந்தைகளை குறிக்கும் நெப்போ பேபி, நெப்போ கிட்ஸ் போன்ற வாசகங்கள் பிரபலமாகியுள்ளது.

இரண்டாவதாக, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 10% முதல் 15% மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 லட்சம் புதிய பட்டதாரிகள் அல்லது இளைஞர்கள் வேலைக்கு தயாராகின்றனர். அன்றாடம் சுமார் 1500 படித்த இளம் பட்டதாரிகள் நாட்டை விட்டு வேலை தேடி வெளியேறுகின்றனர். இதனால் நாட்டின் தேசிய உள்நாட்டு உற்பத்தியில் 33 சதவீதம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக தற்போதைய அதிபரான சர்மா ஒலி ஆட்சி 26 சமூக ஊடகங்களை முடக்கியுள்ளது. இவை வெறும் தகவல் தொடர்பு; செய்தி பரிமாற்றம் போன்ற அம்சங்களைத் தாண்டி ஒருவருக்கொருவர் தனது உணர்ச்சிகளை பரிமாறிக் கொள்ளவும், வெளிநாட்டில் குடியிருக்கின்ற பெரும்பான்மையான நேபாளியர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் முக்கியமான வழிமுறையாக உள்ளது. இதன் மீதான தடை இளைய தலைமுறையினருக்கு மிகப்பெரும் ஆத்திரத்தை உருவாக்கியது.

மேற்கண்ட காரணங்களினால் 2025, செப்டம்பர் 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடந்த இளைஞர்களின் எழுச்சியானது முதல் நாள் அமைதியாக பாடல்களை பாடுவது; நடனமாடுவது; அரசுக்கு எதிராக முழக்கங்கள் போடுவது; நாட்டின் நிலைமைகளை பற்றி மக்களுக்கு உரை வீச்சுகள் மூலம் பிரச்சாரம் செய்வது என்ற நிலையிலேயே இருந்தது. ஆனால் நேபாள இராணுவம் இந்தப் போராட்டங்களை நசுக்கவும், அடக்கவும் 19 இளைஞர்களை சுட்டுக் கொன்றொழித்தது. இதனாலேயே அடுத்த நாள் போராட்டம் தீவிரமடைந்து அரசாங்க அலுவலகங்கள், நீதித்துறை அலுவலகங்கள், முன்னாள் மன்னர் அரண்மனை முதல் போலி புரட்சியாளரான பிரசண்டா குடியிருந்த மாளிகை வரை ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் மத்திய அளவிலான அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. அதிகாரப்பூர்வ ஆவணங்கள் மற்றும் தொடர்பு வசதிகள் அழிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கியமான இடங்கள் அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இத்தகைய ஆர்ப்பாட்டக்காரர்களையும், வன்முறையாளர்களையும் ஒன்றிணைப்பதில் காட்மாண்டுவின் முன்னாள் மேயர் பாலன் ஷா மற்றும் ஹாமி நேபாளம் என்ற என்ஜிஓ அமைப்பைச் சார்ந்த சுதன் குருப் ஆகிய இருவரும் அடங்குவார்கள். அமெரிக்காவின் கார்ப்பரேட் நிறுவனமான கோக்கோ கோலா மற்றும் பார்பாரா பவுண்டேஷன்ஸ் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெரும் தொகையை உதவியாக பெற்றுள்ள சுதன் குருங் ஒரு அமெரிக்க கைக்கூலியாவார். துவக்கதில் இது பேரிடர் பாதுகாப்புக் குழு என்ற பெயரில்தான் துவங்கியது. மற்றொருவரான முன்னாள் ராப் பாடகரும் காத்மாண்டுவின் மேயருமான பாலேந்திர ஷாவை அமெரிக்கவின் டைம் பத்திரிக்கை 2023ஆம் ஆண்டு உலகின் முதல் 100 ஆளுமையான நபர்கள் பட்டியலில் முன்னிறுத்தியது. வாஷிங்டன் போஸ்ட் அவரை பிரபலப்படுத்தியது.

ஜென்-Z இளைஞர்களால் தீக்கிரையாக்கப்பட்ட நேபாள நாடாளுமன்றம்.



நேபாளத்தில் நடந்த இந்தப் போராட்டங்கள் அனைத்துமே அமெரிக்காவின் தன்னார்வக் குழுக்கள்



**அரசியலில் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், அமைப்புகள் மற்றும் அனைத்து தரப்பு இளைஞர்களும், தங்கள் கோபத்தை ஆளும் கே.பி. சர்மா ஒலி, நேபாளக் காங்கிரஸ் கூட்டணியின் மீது 'ஜெனரல் இசட் இளைஞர்கள்' எதிரொலித்துள்ளனர்.**

மூலம் நிதி பெற்று செயல்படுகின்ற சுதன் குருங் என்பவரது ஹாமி நேபாளம் என்ற அமைப்பினாலும், மேயர் ஷாவாலும் மட்டுமே உருவாக்கப்பட்டது என்பது முழு உண்மையல்ல.

இந்தப் போராட்டங்களில் சலுகை இழந்த குடும்பப் பின்னணியை சார்ந்த, 'ஜெனரல் இசட் இளைஞர்கள்', பழங்குடி சமூகங்கள், தலித் குழுக்கள், முஸ்லிம்கள், மதேசி இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் மற்றும் அரசியலில் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், இவை தவிர கிட்டத்தட்ட அனைத்து போராட்ட அமைப்புகளும், அனைத்து தரப்பு இளைஞர்களும் இணைந்துள்ளனர். தங்கள் கோபத்தை தற்போதைய ஆளும் கே.பி. சர்மா ஒலி, நேபாளக் காங்கிரஸ் கூட்டணியின் மீது எதிரொலித்துள்ளனர்.

தற்போது போராடுகின்ற அல்லது வன்முறை வெறியாட்டங்களில் இறங்கியுள்ள கும்பல்களில் ஒன்று பிற்போக்கு மன்னராட்சி தொடர வேண்டும் என்று குரல் கொடுக்கின்ற படுபிற்போக்கான கும்பலாகும். அவர்களை அமெரிக்க மேல்நிலை வல்லரசு ஆதரித்து நிற்கிறது.

நேபாளத்தில் நிலவுகின்ற அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வேலையின்மை, வறுமை ஆகிய நிலைமைகள் ஒருபுறமிருக்க நேபாளத்தில் அமைந்துள்ள 'சொல்லிக் கொள்ளப்படும் இடதுசாரி அரசாங்கத்தை' கவிழ்ப்பதில் இந்திய ஒன்றிய அரசாங்கமும், அமெரிக்க மேல்நிலை வல்லரசும் குறியாக உள்ளன என்பதையே நேபாளத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் தூண்டப்பட்ட வன்முறைகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க மேல்நிலை வல்லரசானது ஏற்கனவே 2008 இல் ஆட்சியமைத்த மாவோயிச கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஆட்சியை கவிழ்ப்பதற்கு பல்வேறு சதித்தனங்களை செய்து வந்தது. இந்திய ஒன்றிய அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகாட்டுதல்களை கொடுத்து வந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்ற பெயரில் இந்தியாவின் மேலாதிக்கத்தை நேபாளத்தில் நிறுவுவதற்கு முயற்சித்தது.

தெற்காசிய நாடுகளில் ஊழல், அதிகரித்து வரும் வறுமை, வேலையில்லா திண்டாட்டம், மற்றும் ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, இலங்கையில் 2022-ஆம் ஆண்டும், பாகிஸ்தானில் 2023-ஆம் ஆண்டும், பங்களாதேஷில் 2024-ஆம் ஆண்டும் நடத்தப்பட்ட மக்கள் எழுச்சிகள் அனைத்தும் சரியான தலைமையின் கீழ் நடத்தப்படாமல் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிரான ஆத்திரத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்துகின்ற வகையிலேயே நடந்துள்ளது.

இந்தப் போராட்டங்களில் உண்மையான நாட்டுப்பற்றாளர்கள் முதல் அராஜகவாதிகள், லும்பன்கள் அடங்கிய கும்பல் வரை தற்காலிகமாக ஒன்றிணைந்து நடத்துகின்ற எதிர் தாக்குதல்கள், ஆட்சிக்கவிழ்ப்புகள் அமெரிக்க மேல்நிலை வல்லரசை எந்த வகையிலும் ஆட்டவோ, அசைக்கவோ செய்யவில்லை.

சோசலிச சமூகத்தை கட்டியமைப்பதற்கு முன்னாள் அந்தந்த நாட்டின் தன்மைக்கு ஏற்ப அரசியல், பொருளாதார, பண்பாட்டு பொருளாதாரக் கொள்கைகளை மாற்றுவதற்கு உரிய ஆட்சி வடிவம் ஒன்றை முன்வைத்து கம்யூனிச இயக்கங்கள் போராட வேண்டும் என்று வலியுறுத்துகிறது மார்க்சிய-லெனினியம். அந்த வகையில் நேபாளத்தில் 2008-ஆம் ஆண்டு நடைபெற்ற மன்னராட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சியானது, மாவோயிஸ்டுகளின் தலைமையிலான ஆயுதப் போராட்டத்தின் வெற்றியாக பரிணமித்து தற்காலிக இடைக்கால அரசாங்கம் ஒன்றை அங்கே நிறுவியது.

"நேபாளத்தின் கிராமப்புறங்களில் மாவோயிஸ்டுகளின் மக்கள் யுத்தம் குறிப்பிட்ட கட்டத்துக்கு முன்னேறியிருந்த நிலையில், மன்னராட்சிக்கு எதிராக நகர்புறங்களில் இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு போராடினர். மன்னராட்சியின் கீழிருந்த நாடாளுமன்றத்தின் அரசியல் கட்சிகள் என்னசெய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த நிலையில், மன்னராட்சியை

வீழ்த்தும் போராட்டத்துக்கு மாவோயிஸ்டுகளைத் தலைமை தாங்குமாறு மக்கள் கோரியதைத் தொடர்ந்து, மக்கள் சக்தியின் முன்னே மண்டியிட்ட நேபாள அரசியல் கட்சிகள் மன்னராட்சியை வீழ்த்தவும், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்தவும் முன்வந்து, மாவோயிஸ்டுகளுடன் ஒப்பந்தம் போட்டன.

இந்தச் சூழலைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, நேபாளத்தில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து ஒரு ஜனநாயகக் குடியரசை நிறுவுவது என்ற முக்கியத்துவம் வாய்ந்த செயல்தந்திரத்தை வகுத்து நேபாள மாவோயிஸ்டு கட்சி செயல்படுத்தியது. அன்றைய பருண்மையான நிலைமையை ஒட்டி மாவோயிஸ்டு கட்சி வகுத்துக் கொண்ட அச்செயல்தந்திரம் சரியானதும், அவசியமானதுமாகும்'' என்று சீனாவில் ஜப்பான் ஏகாதிபத்தியத்தை விரட்டிய பிறகு தோழர் மாவோ தலைமையிலான சீன கம்யூனிஸ்ட் கட்சி கடைபிடித்த மேலிருந்து அமல்படுத்துகின்ற செயல்தந்திர வழிமுறையை, நேபாள மாவோயிஸ்டுகள் அமுல்படுத்தியதை ஆதரித்து புதிய ஜனநாயகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் முடிவெடுத்தது.

அதன் பின்னர் அமைந்த தற்காலிக கூட்டரசாங்கத்தை கொண்டு படிப்படியாக புதிய ஜனநாயக குடியரசை நோக்கி முன்னேற வேண்டும் என்ற முடிவுடன் செயல்பட்டது. இதற்காக ''கூட்டுத்துவ மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவுவதை உடனடி செயல்தந்திரத் திட்டமாகக் கொள்ள வேண்டும். அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைப்பது, அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பது, மக்கள் மீது சர்வாதிகாரத்தைத் திணிப்பது, மக்கள் யுத்தத்தின் சாதனைகளைப் பறித்துக் கொள்வது என்ற ஏகாதிபத்தியவாதிகள், இந்திய விரிவாக்கவாதிகள் மற்றும் அவர்களது விசுவாச பிற்போக்கு அரசியல் கட்சிகளின் சதிகளுக்கு எதிராக மக்களின் போராட்ட எழுச்சிகளை உறுதிப்படுத்த வேண்டும்'' என்று கோர்க்கா மாவட்டத்திலுள்ள பலுங்டார் கிராமத்தில் நவம்பர் 2010 இல் நடந்த நேபாள மாவோயிஸ்டு கட்சி மத்தியக் கமிட்டியின் 6வது விரிவாக்கப்பட்ட பிளீனத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், அம்முடிவுகளுக்கு மாறாகவும், எதிராகவும் மாவோயிஸ்டு கட்சித் தலைவர் பிரசந்தாவும் துணைத்தலைவர் பட்டாராயும் செயல்படத் தொடங்கினர்'' என்று நேபாள புரட்சியின் பின்னடைவுகளைப் பற்றியும், கம்யூனிச துரோகிகளாக சீரழிந்த பிரசந்தா கும்பலை அம்பலப்படுத்தி ஜூன் 2012 புதிய ஜனநாயகம் இதழிலேயே எழுதி இருந்தோம்.

மாவோயிஸ்ட் என்ற பெயரில் இயங்கி வந்த மார்க்சிய லெனினிய இயக்கமானது தனது சித்தாந்தம் மற்றும் அரசியல் தவறுகளினால் இரண்டாக பிளவுபட்டுப்போனது. அதனாலேயே நிரந்தரமான நிலையான ஆட்சி ஒன்றை நேபாளத்தில் அமைக்க முடியாமல் போயுள்ளது குறிப்பாக கடந்த 2018-ஆம் ஆண்டு முதல் 2025 வரை 8 வகையான அரசாங்கங்கள் மாறியுள்ளது.

இந்த அரசாங்கங்கள் 3 பெரிய கட்சிகளின் தலைவர்கள் தலைமையிலான பதவி வெறி, நாற்காலியை கைப்பற்றுகின்ற போட்டி ஆகியவற்றில் மூழ்கியுள்ளது. இந்த தலைவர்களான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) இன் கே.பி. சர்மா ஒலி, நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட் மையம்) இன் புஷ்ப கமல் தஹால் (பிரசந்தா) மற்றும் நேபாள காங்கிரஸின் (டியூபா) ஷேர் பகதூர் ஆகியோர் அந்தந்த கட்சி அமைப்புகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இதன் விளைவாக, நேபாள மக்களிடையே விரக்தி அதிகரித்து வருகிறது,

இதனாலேயே நீண்ட காலம் நிலவிய மன்னர் ஆட்சிக்கு எதிராக உருவான, 'நிலப்பிரபுத்துவ - மன்னராட்சி ஒழிப்பு'' சமூக ஜனநாயக புரட்சியானது, அடுத்த கட்டத்தை நோக்கி அதாவது புதிய ஜனநாயகத்தை நோக்கி நகர்வதற்கு பதிலாக தற்காலிகமாக தேக்கமடைந்துள்ளது. இதனால் மக்கள் சொல்லணா துயரத்தில் ஆழ்ந்து வருகின்றனர்.

மாவோயிசமும், கம்யூனிச லட்சியமும் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள் அனைத்திற்கும் தீர்வை ஏற்படுத்தி தரும் என்ற மிகப்பெரும் நம்பிக்கையில் இருந்த நேபாளத்தின் விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் மாணவர்கள், அறிவு ஜீவிகள் உள்ளிட்ட அனைத்து பிரிவு மக்கள் மேற்கண்ட போலிப் புரட்சியாளர்கள் மற்றும் சந்தர்ப்பவாதிகள், பாரம்பரியமிக்க நேபாள் காங்கிரஸ் போன்ற ஆளும் வர்க்கத்தின் கைக்கூலிகளிடம் சிக்கி விரக்தியடைந்துள்ளனர்.


''இதனால்தான் புதியதொரு கட்சிக்கான தேவை ஏற்படுகிறது எப்படிப்பட்ட கட்சி நமக்கு வேண்டும் ஒரு போர்க்குணமிக்க கட்சி: ஒரு புரட்சிகரமான கட்சி; அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தை தலைமை ஏற்றுச் செல்லக்கூடிய அளவிற்கு துணிவு மிக்க கட்சி நமக்கு வேண்டும். ஒரு புரட்சிகர சூழலின் நடுவே சிக்கலான நிலைமைகளில் தான் செல்ல வேண்டிய வழி எது என்பதை கண்டறிந்து முன்னேற்றும் அளவுக்கு போதுமான அனுபவமிக்க கட்சி நமக்கு வேண்டும். புரட்சி எனும் கப்பல் பயணத்தின் வழியில் மறைந்துள்ள பாறைகளை தெளிவாக அறிந்து அதற்கு ஏற்ப நீக்குப் போக்காக சுக்கான பிடித்து சரியான வழியில் நடத்திச் செல்லும் கட்சி நமக்கு வேண்டும்.

இத்தகையதொரு கட்சி இல்லாமல் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவது பற்றியும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நாட்டுவதைப் பற்றியும் நினைத்துப் பார்ப்பதே பயனற்றது. நமக்குத் தேவை நமது தேவைக்கான புதியதொரு கட்சியே! லெனினியக் கட்சியே!'' என்கிறார் தோழர் ஸ்டாலின்.

நேபாள மக்களின் யதார்த்த வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், அரசியலில் ஏற்பட்ட விரக்தியும் சேர்ந்து ஜென் போராட்டமாகவும், கலகமாகவும் வெடித்துள்ளது. இவற்றுக்கு பின்னாள் உள்ள நேர்மையான நாட்டுப் பற்றாளர்களையும், கம்யூனிச புரட்சியாளர்களையும் இனம் காண்பதும், உண்மையான நாட்டுப்பற்றுள்ள தேசிய அரசாங்கத்தை கட்டமைப்பதும் தான் நேபாள பாட்டாளி வர்க்கத்திற்கு தற்போது உள்ள கடமையாகும்.

■ செல்லப்பன்

# திருடன் மல்லையாவுக்கு சொகுசு ஜெயிலு! அப்பாவி மக்களுக்கு தூக்கு கயிறு!




விஜய் மல்லையாவை பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. பல்லாயிரம் கோடி கடன் வாங்கி கட்டாமல் நாட்டை விட்டு ஓடிப்போன பொருளாதாரக் குற்றவாளி மற்றும் கிங்பிஷர் நிறுவனத்தின் சாராய முதலாளி. மோடி ஆட்சியில் 2016 ஆம் ஆண்டு நாட்டை விட்டு ஓடிய விஜய் மல்லையாவை இன்றுவரை கைது செய்து இந்தியாவுக்கு கொண்டுவர முடியவில்லை. கிட்டத்தட்ட 9 வருடங்கள் கடந்து விட்டது.

சாராய முதலாளி விஜய் மல்லையா இந்திய வங்கிகளிடம் சுமார் 6203 கோடி வரை கடன் வாங்கி கட்டாமல் கடந்த 2016 ஆம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறினார். விஜய் மல்லையா மற்றும் அவரது நிறுவனங்களின் சொத்துக்களை கைப்பற்றிய வங்கிகள் அவற்றை விற்று வட்டியுடன் சேர்த்து 14,131 கோடி வரை வசூலித்ததாக ஒன்றிய நிதி அமைச்சரும் பல நீதிமன்ற ஆவணங்களும் தெரிவிக்கின்றன. "இன்னும் என்னை பொருளாதார குற்றவாளி என்கிறீர்களே, நியாயமா" என ஆதங்கப்படுகிறார் மல்லையா. திருடியவனிடமிருந்து பொருட்கள் மீட்கப்படுவதினால் அவன் திருடன் இல்லை என்றாகி விடுமா? விஜய் மல்லையா கடனை திருப்பி கட்டாமல் ஏமாற்றி சென்றது முதலாளியின் பணமோ அல்லது மோடியின் பணமும் கிடையாது. அரசின் பொதுத்துறை வங்கிகளில் போடப்பட்ட மக்களின் சேமிப்பு பணம்.

இவரைப் போலவே மற்றொரு பொருளாதார கிரிமினல் தான் வைர வியாபாரி நீரவ் மோடி மற்றும் முகுல் சோக்ஷி இவர்கள் பஞ்சாப் நேஷனல் வங்கியில் 14000 கோடி கடன் வாங்கிவிட்டு 2018-ஆம் ஆண்டு நாட்டை விட்டு ஓடினார்கள். பஞ்சாப் நேஷனல் வங்கியில் இருந்த சில ஊழியர்களுடன் சேர்ந்து முறைகேடான Letters Of Undertaking (IOU) மூலம் இவ்வளவு பெரிய தொகையை பெற்றுள்ளனர். இருவருமே பாஜகவின் ஆட்சியில் தான் நாட்டை விட்டு ஓடினார்கள். இதில் விஜய் மல்லையா பாஜக சார்பாக ராஜ்யசபா எம்பியாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 9 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இவரைப் பற்றி எழுத வேண்டிய தேவை ஏன் வந்தது என வாசகர்களுக்கு கேள்வி எழலாம்.

பொருளாதார கிரிமினல்களான மல்லையாவும் நீரவ் மோடியும் தஞ்சம் புகுந்த இடம் இங்கிலாந்து. இருவரையும் நாடு கடத்தும் நடவடிக்கையில் பாஜக 'தீவிரமாக' இறங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 9 ஆண்டுகளாகவே 'தீவிரமாக' இருப்பது போல் செய்திகள் வெளியிடுகின்றன. ஆனால் மல்லையாவோ எனக்கு சிறையில் சகல வசதிகளும் இருந்தால் தான் இந்தியாவிற்கு வருவேன் என அடம்பிடிக்கிறார். இங்கிலாந்தில் இன்று வரை எந்த குற்ற உணர்ச்சியும் இன்றி சொகுசாக வாழ்ந்து வருகிறார். இந்தியாவிற்கு நாடு கடத்துவது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இங்கிலாந்து நீதித்துறை அதிகாரிகள் மல்லையாவின் கோரிக்கையை ஏற்று டெல்லி திகார் சிறையில் ஆய்வு நடத்தியுள்ளார்கள். இந்தியாவிற்கு நாடு கடத்தப்படும் குற்றவாளிகள் பாதுகாப்பான சூழ்நிலையில் தங்க வைக்கப்படுவார்கள் என்றும் தேவைப்பட்டால் உயர்மட்ட சிறைகளில் தங்க வைக்க சிறைக்குள் தனி பிரிவு கட்டலாம் என்றும் இங்கிலாந்து குழுவிடம் இந்திய அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர். மல்லையா மீது

அவ்வளவு பரிவு மற்றும் கரிசனம் மோடி அரசுக்கு.

பல்லாயிரம் கோடி மக்கள் பணத்தை சுருட்டிக்கொண்டு ஓடிய பொருளாதார குற்றவாளிகளுக்கு சகல வசதிகளுடன் சிறை ஏற்பாடு செய்ய தயாராகிறது மோடி அரசு. டிவி, மேற்கத்திய கழிவறை, மெத்தை, தலையணை, பீங்கான் சாப்பாடு தட்டு மேலும் சிறை அறைக்குள் சூரிய ஒளி படுகிற வசதி நடை பயிற்சி மேற்கொள்வதற்கான வசதி, நூலக வசதி உள்ளிட்ட நவீன வசதிகளை செய்து கொடுத்தால் தான் நாங்கள் இந்தியா வருவோம் என குற்றவாளிகள் கோரிக்கை வைத்துள்ளார்கள். திருட்டிலேயே மல்லையா செய்தது உயர் ரகத் திருட்டு போல.

மேல் படித்தவை எல்லாம் இந்தியாவின் ஒரு பக்கம் மறுபக்கம் நமக்கானது இங்கு நாம் ஒரு லட்சம் கடன் வாங்குவதற்கு நாய் போல் அலைய வேண்டும். வேலையின்மை, வறுமையால் கடனை கட்ட முடியாத சூழல் ஏற்படும்போது மல்லையாவைப்போல் நாம் நாட்டை விட்டு ஓடி விடமாட்டோம். வங்கிகள் நம்மை சும்மா விடாது. கூலிப்படைகளைக் கொண்டு மிரட்டும். பெரிய பிளக்ஸ் பேனர் வைத்து கடன் கட்டாதவர்கள் பட்டியலில் நமது படத்தையும் இணைத்து மக்கள் கூடும் இடங்களில் வைத்து அவமானப்படுத்துகிறது. உழைப்பவனுக்கு தன்மானம் அதிகம் என்பதால், உயிரை மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுவோம். இதுவரை மதிப்புமிக்க பல உயிர்களை பலி கொடுத்துள்ளோம்.

கடந்த 10 ஆண்டுகளில் மார்ச் 2015 முதல் 2025 வரை வங்கிகளில் தள்ளுபடி செய்யப்பட்ட வாராக் கடன்களின் மொத்த மதிப்பு 16 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாய். தள்ளுபடி செய்யப்பட்ட மொத்த தொகையில் பெரு நிறுவனங்களின் கடனானது அதாவது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில முதலாளிகளின் கடன் மட்டும் 9.27 லட்சம் கோடி. ஒவ்வொரு முதலாளியும் மல்லையாவை போல் பல்லாயிரம் கோடி கடன் பெற்றிருப்பார். அத்தனையும் மக்களின் சேமிப்பு பணம் தானே என அக்கறை காட்டாத மோடி அரசு வாரா கடனாக தள்ளுபடி செய்துள்ளது.

ஆனால் சாதாரண உழைக்கும் மக்களுக்கு கடன் கட்டவில்லை என்றால் தூக்குகயிறை பரிசளிக்கிறது. மல்லையா போன்ற முதலாளிகளுக்கு சொகுசு சிறை தயார் என அறிவிக்கிறது.. இதுதான் இன்றைய இந்தியாவின் நிலைமை. ■

# கேள்வி பதில்

**கேள்வி:**

***தீண்டாமைக் குற்றம் புரியும் ஆதிக்கச் சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்! சாதி வெறி சங்கங்களை தடை செய் என்று முன் வைப்பது ஆதிக்க சாதிகளில் பிறந்த முற்போக்கு, ஜனநாயக சக்திகளுக்கு மன ரீதியான சிக்கலைக் கொடுக்காதா? பழைய நிலைப்பாட்டை மீண்டும் ஏன் முன் வைக்க வேண்டும். மாற்றவேண்டியதில்லையா?***

**ராம்குமார், சென்னை.**

**பதில்:**

இடஒதுக்கீடு யாருக்கு ஏன் தேவைப்படுகிறது என்பது குறித்து தமிழகத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக நடந்து வரும் பல்வேறு விவாதங்களை சந்தித்திராத புதிய தலைமுறை வாசகர்களுக்கு சில அடிப்படை அம்சங்களை முன் வைக்கிறோம்.

“இட ஒதுக்கீடு பற்றி எமது நிலைப்பாட்டை பலமுறை எழுதியுள்ளோம் அது ஒரு சீர்திருத்தம். ஆளும் வர்க்கங்களின் அடக்குமுறை சுரண்டல் நீடிப்பதற்காக, அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக, தனது சமூக அடித்தள ஆதரவை பெருக்கிக் கொள்வதற்காக செய்யப்படும் சீர்த்திருத்தம். நில உச்சவரம்பு, சத்துணவு, தீண்டாமை, சதி ஒழிப்புச் சட்டங்கள் போன்று இட ஒதுக்கீடு என்பதும் ஒரு சீர்திருத்தம்தான்.

ஆட்சியாளர்கள் கூறிக் கொள்வதைப் போல சமூகநீதியோ, சமூகப் புரட்சியோ, வகுப்புரிமையோ கிடையாது. இட ஒதுக்கீடு போன்ற முதலாளித்துவ சீர்திருத்தங்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல; அதே சமயம் இத்தகைய சீர்திருத்தங்களால் அரசியல், சமூக பொருளாதார அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டு விடும் என்ற வாதத்தை, மாய்மாலத்தை ஈவிறக்கம் இன்றி எதிர்த்து போராடுகிறோம். அரசாங்கம் ஏதாவது ஒரு சீர்திருத்தத்தை எப்போதும் கொண்டு வரும் (ஆளும் வர்க்கங்கள் இதை மகிழ்வுடன் செய்வார்கள் என்கிறார் தோழர் லெனின்) அவற்றில் முற்போக்கு அம்சங்களை தேடி வலியுறுத்துவதும், மேலும் கூடுதலான சீர்திருத்தங்களுக்காக போராடுவதும் இதையே வேலைமுறையாக கொள்வதும் பாட்டாளி வர்க்க அமைப்பை சீர்திருத்த கட்சியாக சீரழித்து விடும்.

இரண்டு போலி கம்யூனிஸ்ட் கட்சிகளும் சிபிஐ, (சிபிஎம்) முன்பு ‘இடது’ சந்தர்ப்பவாதம் பேசிக் கொண்டிருந்துவிட்டு இப்போது வலது திரிபுவாத

சகதிக்குள் விழுந்துவிட்ட போலி புரட்சிகரக் குழுக்களும் [சிபிஐ (எம்.எல்) லிபரேசன்] இப்படித்தான் சீரழிந்து போயின'' என்று 1990, செப்டம்பர் புதிய ஜனநாயகம் இதழில் வெளியான கேள்வி பதிலில் குறிப்பிட்டு இருந்தோம்.

ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்குப் பிறகு இட ஒதுக்கீடு பற்றிய கேள்விகள் மீண்டும் வெவ்வேறு கோணங்களில் எழுப்பப்படுவதால் அதைப்பற்றி மீண்டும் தற்போது புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடுகளை முன்வைக்கின்றோம்.

''தீண்டாமை குற்றம் புரியும் ஆதிக்க சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்!'' என்று புதிய ஜனநாயகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் முழக்கத்தை வைத்து போராடுகின்றன. தீண்டாமைக் குற்றம் புரிகின்ற ஆதிக்க சாதிகளை வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்வதை தடுப்பதற்கு, ''வன்கொடுமை சட்டத்தையே ரத்து செய்'' என்று ஆதிக்க சாதி சங்கங்கள் போராடுகின்றன.

தீண்டாமை ஒரு குற்றம், தீண்டாமை ஒரு பாவச் செயல் என்று ஓயாமல் அரசியலமைப்புச் சட்டம் கதறி கொண்டே இருக்கின்றது. ஆனால் அதற்கு நேர்மாறாக தீண்டாமை மற்றும் சாதி வன்கொடுமைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. சமூக நீதி பேசுகின்ற பெரியாரின் மண் என்று சொல்லப்படுகின்ற தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் சுமார் 6600 சாதி வன்கொடுமைக் குற்றங்கள் பதிவாகியுள்ளன.

ஆதிக்க சாதி வெறியர்கள் பட்டியலின மக்களின் மீது நடத்தும் தீண்டாமை- சாதி வன்கொடுமைக் குற்றத்தை நிரூபணம் செய்வதற்குள் போதும், போதும் என்று ஆகிவிடுகிறது என்பது தான் ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான நிலைமை. ஏனென்றால் முதலில் தீண்டாமை ஒழிப்பு சிவில் உரிமை பாதுகாப்பு சட்டம் என்ற பெயரில் பல்லில்லாத பாம்பாக இளித்துக் கொண்டிருந்த தீண்டாமை ஒழிப்பு 1989-ஆம் ஆண்டு தான் வன்கொடுமை தடுப்புச் சட்டம் என்ற பெயரில் மாற்றப்பட்டது. அதுவும் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகே 1995 முதல் அமுலானது.

அதன் பிறகு தான் தீண்டாமைக் குற்றங்கள் என வரையறுக்கப்பட்ட அம்சங்களின் கீழ் வழக்குகள் பதிவாகத் துவங்கியது. 2019 ஆம் ஆண்டில் 1114, 2020-ல் 1274, 2021-ல் 1377, 2022-ல் 1761, (அதன் பிறகு விவரம் இல்லை) என வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகியுள்ள வழக்குகள் இவ்வளவுதான். அதிகாரப் பூரவமான வெளியிடப்பட்ட இந்த புள்ளிவிவரத்துக்கு மாறாக தேசிய ஆவணக் காப்பகத்தின் அறிக்கை உள்ளது அதன்படி, ''அன்றாடம் இரண்டு பட்டியலின மக்கள் கொல்லப்படுகின்றனர்; 12 பட்டியலினத்தவர் படுகாயப்படுத்தப்படுகின்றனர்; ஆண்டுக்கு சுமார் 1000 பட்டியலினப் பெண்கள் பாலியன் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர்; ஆண்டுக்கு 1000-1200 ஆணவப் படுகொலைகள் நடக்கின்றன, ஒவ்வொரு ஆண்டும் 30,000க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகின்றன'' என்கிறது ஆவணம். அன்றாடம் தீண்டாமை வன்கொடுமைகள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த சட்டத்தினால் 1% கூட வன்கொடுமைகளை தடுக்க முடியவில்லை என்கிறார் பேராசிரியர் கோ. ரகுபதி.

''தீண்டாமைக் குற்றம் புரியும் ஆதிக்க சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டை ரத்து செய்'' என்ற முழக்கத்தை நாங்கள் முன்வைத்தவுடன் அந்த முழக்கத்தில் உள்ள இரண்டாவது பாதி மட்டும்தான் முற்போக்கு என்று சொல்லிக் கொள்பவர்கள் காதிலும், ஜனநாயகவாதிகள் என்று சொல்லி கொள்பவர்கள் காதிலும் விழுகிறது. ஆதிக்க ஜாதிகளுக்கு இது பிரச்சனையே இல்லை ஏனென்றால் அவர்கள் தீண்டாமையை ஒரு குற்றமாக கருதுவதே இல்லை. இதுவே சாதி இந்துக்கள் எனக் கூறப்படும் ஆதிக்க சாதிகளின் மனோபாவம் என்கிறார் டாக்டர் அம்பேத்கர்.

ஒரு குறிப்பிட்ட சாதியில் யாரோ ஒருவர் தவறு செய்வதற்காக அந்த சாதி மக்களையே ஏன் தண்டிக்க வேண்டும். குறிப்பிட்ட குற்றவாளிகளை தண்டிக்கட்டும். அதை விட்டுவிட்டு எல்லோருடைய உரிமையும் ஏன் பறிக்கிறார்கள் என்று கேள்வி எழுப்ப தொடங்கிவிட்டனர். இந்த கேள்வி இப்போது திடீரென எழவில்லை. தென் மாவட்டங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது சாதி தீண்டாமை வன்கொடுமைகள் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் சாதி தீண்டாமை ஒழிப்பு என்ன செய்யப் போகிறீர்கள் என்ற கேள்வி எழுப்பி 96-97 காலகட்டங்களில் புதிய ஜனநாயகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் இயக்கமாக எடுத்த காலத்திலேயே இந்த கேள்வி எழுப்பப்பட்டது.

அப்பொழுதே, ''குறிப்பிட்ட சாதியின் பெயரால் ஒதுக்கீட்டு உரிமை பெறுபவர்களுக்கு தனது சாதி மற்றவர்களை ஆதிக்கம் செய்வதை தடுக்கும் கடமை கிடையாதா? உரிமை என்பது சட்டப்படி வேண்டும். கடமை என்பது முடிந்தால் செய்யும் விஷயமா? இவ்வாறெல்லாம் கேட்பவர்களுக்கு கடுகளவு சமூக பொறுப்புணர்வு இருக்கிறதா? தீண்டாமைக் கொடுமை குறித்த அனுதாப உணர்வாவது இருக்கிறதா அல்லது எந்த சாதியின் பெயரால் நாம் சலுகை பெற்றோமோ அந்த சாதிதான்; நம்முடைய சாதிக்காரன் தான் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குகிறான் என்ற குற்ற உணர்வாவது இருக்கிறதா?'' ஒவ்வொரு சாதியிலும் ஒரு சில சாதி வெறியர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இந்த சாதி வெறியானது தான் பெரும்பான்மை சாதிக்காரன் என்ற திமிரிலிருந்து வருகிறதே, அதை அந்த சாதிக்காரர்கள் கேள்வி

எழுப்புவதில்லையே ஏன்?'' என்று கேள்வி எழுப்பி இருந்தோம் ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலைமையில் முன்னேற்றம் இல்லை.

அதாவது சாதி உணர்வை ஒழித்துவிட்டு வர்க்க உணர்வு அல்லது ஜனநாயக உணர்வு அதிகரிக்கவில்லை. மாறாக சாதிய பிற்போக்கு உணர்வுதான் மேலோங்கி உள்ளது. அதுவும் ஆர்எஸ்எஸ் பாஜக ஒன்றிய ஆட்சியை கைப்பற்றிய பிறகு ஆதிக்க சாதிகளின் சங்கங்களை அங்கீகரிப்பது; ஆதிக்க சாதிகளுக்கு அதிக சலுகைகள் கொடுப்பது; பண உதவி செய்வது என்று பல வழிமுறைகளில் சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு உதவி செய்கின்ற காலகட்டத்தில் சாதிய உணர்வு மேலோங்கி கொண்டுள்ளது எனும் போது இந்த கேள்வியின் அடிப்படையும், அதன் சாராம்ச உண்மையும் மாறவில்லை என்றே கருதுகிறோம்.

இன்னொரு உண்மையையும் நாம் மறைத்து விட முடியாது. பட்டியலின மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தனித் தொகுதிகள் முதல் சட்டமன்ற, பாராளுமன்ற ரிசர்வ் தொகுதிகள் வரை பட்டியலின மக்கள் தாங்கள் விரும்பிய கட்சிக்கு ஓட்டு போட முடியாது. இன்னமும் பல கிராமங்களில் பட்டியலின மக்கள் தலைவராக வந்தாலும் ஊர் தெருவின் நாட்டாண்மைகளுக்கு இணையாக அமர்ந்து அதிகாரம் செய்ய முடியாது என்பதுதான் சமூக யதார்த்தமாக உள்ளது.

புதிய ஜனநாயகம் மற்றும் அதன் தோழமை அமைப்புகள் சாதி ஒழிப்புதான் நிரந்தர தீர்வு என்ற புரட்சிகரமான சமூக மாற்றத்தை முன்வைக்கிறது என்ற முறையில் மக்களை வர்க்க ரீதியாக அணி திரட்டுவதற்கு நடைமுறையில் தடையாக உள்ள சாதிய உணர்வுகளை எதிர்த்து கேள்வி கேட்டு அதனை முறியடிப்பதன் மூலம் தான் வர்க்க உணர்வை அதிகரிக்கச் செய்ய முடியும் என்றே கருதுகிறோம். ஏனென்றால் வர்க்க உணர்வும், சாதி உணர்வும் ஒன்றுக்கொன்று எதிரானது. சாதி ஒழிப்பு என்று பேசும்போது நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல் சாதி ஒழிப்பை பற்றி பேசினால் மணிக்கணக்காக பேசிக் கொண்டிருக்கலாம். இனிக்க, இனிக்க பேசிக் கொண்டாடலாம். அதனை பல்வேறு கோணங்களில் நீள, அகலங்களையும் சுவைபட பேசுவதற்கும் தமிழ்நாட்டில் திராவிட கட்சிகள் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் சாதி ஒழிப்பு என்று பேசும்போது அதன் ஒவ்வொரு படியையும் கடக்கும்போது மக்கள் மனதில் புரையோடிப் போயுள்ள சாதி உணர்வை அகற்றுகின்ற வகையிலான போராட்டங்களும், முழக்கங்களும் முன் வைத்துப் போராட வேண்டியது அவசியமாகின்றது. இந்த அடிப்படையிலேயே தீண்டாமைக் குற்றம் புரியும் ஆதிக்க சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டு உரிமையை ரத்து செய் என்று கோரிக்கை வைக்கின்றோம்.

அதுவும் தீண்டாமைக் குற்றம் செய்வதை, சாதி ஆதிக்கம் செய்வதை நிறுத்தாவிட்டால் ஒதுக்கீட்டு உரிமையை ரத்து செய் என்று முன்வைக்கின்றோம். ''நீ ஏன் எங்கள் சாதிப் பெயரால் தீண்டாமை குற்றம் புரிகிறாய்? எனக்கு அவமானமாக உள்ளது'' என சமூக நீதிக்காரர்களும், முற்போக்காளர்களும், பொங்கவில்லை. மாறாக குற்றம் புரியும் ஆதிக்க சாதிகளுக்கு இட ஒதுக்கீட்டு உரிமையை ரத்து செய் என்றவுடன் மனம் வெதும்பிப் போகிறார்கள் இரட்டை வாழ்க்கை வாழ்கின்ற போலி முற்போக்கு மற்றும் சமூக நீதி பேசும் ஜனநாயக சக்திகள்.

இன்னொரு புறம் ஆதிக்க சாதி சங்கங்களை கடைசி என்ற முழக்கம் தற்போது சாதி வெறி சங்கங்களை தடை செய் என்று மாறி உள்ளது ஏன்? என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். ஆணவப் படுகொலைகள் பற்றி இயக்கம் எடுக்கும் போது, ஆணவப் படுகொலைகள் ஏன் நடக்கின்றன? எந்தெந்த சாதிகள் ஆணவப் படுகொலை செய்வதற்கு முன்னணியில் நிற்கிறார்கள்: ஆணவப் படுகொலைக்கு பலியாகின்ற சாதிகள் யார்?யார்? என்றெல்லாம் ஆய்வு செய்த நிலைமையில் பார்ப்பனர்கள் முதல் பட்டியலின மக்கள் வரை சாதி சங்கங்களாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்த சாதி சங்கங்களில் ஆணவப் படுகொலை நடப்பதற்கு காரணமாக இருக்கின்ற சாதி வெறிபிடித்த சங்கங்களை தடை செய் என்கிறோம். அதாவது சாதி சங்கங்களுக்கும், சாதி வெறி பிடித்த சங்கங்களுக்கும் வேறுபடுத்தி பார்ப்பதும், சாதி வெறி சங்கங்களை தடை செய் என்று முன் வைப்பவதன் மூலம் ஆணவப் படுகொலைகளை செய்துக் கொண்டே; தனது சாதி பெருமையை பேசிக்கொண்டே; இட ஒதுக்கீடு உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் அனுபவிக்கின்ற ரெட்டை நாக்கு பேர்வழிகளையும், சாதிய கிரிமினல் பேர்வழிகளையும் தடுக்க முடியும் என்று கருதுகிறோம்.

அதே சமயத்தில் ஆதிக்க சாதி சங்கங்கள் என்று முன்வைக்கப்படுகின்ற கவுண்டர், முதலியார், செட்டியார், வெள்ளாளர் மற்றும் பிற சாதியினர் சங்கம் வைத்துக் கொள்வதற்கும் பட்டியலின மக்கள் சங்கம் வைத்துக் கொள்வதற்கும் வேறுபாடு உள்ளது என்றே கருதுகிறோம்.

ஆனால் பட்டியலின மக்களுக்குள்ளேயே ஒடுக்கப்பட்ட மக்களான அருந்ததியர்கள், மற்றும் புதிரை வண்ணார்கள் போன்ற சாதியினரை ஒடுக்குவதற்கு வெறிகொண்டு அலைகின்ற சாதி சங்கங்கள் தனது மேன்மையை எடுத்து கூறி ஆணவ படுகொலைகளில் ஈடுபடுவார்களே யானால் அப்படிப்பட்ட சாதி சங்கங்களும் தடை செய்யப்பட வேண்டியதுதான் என்றே கருதுகிறோம். இதில் முரண்பாடு ஏதுமில்லை. ■

# பகத்சிங் பிறந்தநாளை முன்னிட்டு புதுச்சேரி திருபுவனையில் அதிகரித்துவரும் முதலாளித்துவ பயங்கரவாதத்தைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

புதுச்சேரி, திருபுவனை தொழிற்பேட்டையில் அதிகரித்து வரும் முதலாளித்துவ பயங்கரவாதம்! கெஞ்சுவது அவமானம்; கையை உயர்த்தி போராடுவதே தன்மானம்!

என்ற முழக்கத்தின் கீழ் திருபுவனை பேருந்து நிறுத்தம் அருகில் செப்டம்பர் 27 பகத்சிங் பிறந்த நாளை முன்னிட்டு புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் சார்பில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இந்த பொதுக்கூட்டத்தை ஒட்டி கடந்த ஒரு மாத காலமாக புதுச்சேரியில் கடைவீதி பிரச்சாரம், சிக்னல் பிரச்சாரம், பகுதிப் பிரச்சாரம் என தொழிலாளர்களின் பிரச்சினையை மக்கள் மத்தியில் புஜதொமு தோழர்கள் கொண்டு சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் லோகநாதன், மக்கள் அதிகாரம் மாநில தலைமைக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராஜூ மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் ஜனநாயக சக்திகள் கலந்துக் கொண்டு முதலாளிகளின் தொழிலாளர் விரோதப் போக்கை கண்டித்து பேசினார்கள். பொதுக்கூட்டத்தில் திரளான தொழிலாளர்கள் கலந்துக் கொண்டார்கள்.






## கரூரில் விஜய் பரப்புரையில் 41 பேர் படுகொலை:
# தவெக தலைவர் விஜயை கண்டித்து திருச்சி, ஆம்பூர், திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம்!

கரூரில் செப் 27 அன்று இரவு தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் சார்பாக அதன் தலைவர் நடிகர் விஜய் பிரச்சாரம் மேற்கொள்ளும் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில் பலர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கு காரணமான தவெக கட்சியை கண்டித்து மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, மக்கள் அதிகாரம் ஆகிய அமைப்புகளின் சார்பாக திருச்சி, ஆம்பூர், திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் ஜனநாயக சக்திகளை திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழக அரசுக்கு கோரிக்கைகளும் வைக்கப்பட்டன. இவை அல்லாமல் கரூரில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் தோழர் கோவன், மக்கள் அதிகாரத்தின் மாநிலப் பொது செயலாளர் தோழர் திருச்சி செழியன், மகஇக தோழர் லதா உள்ளிட்டோர் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கை யளித்தும் வந்துள்ளார்கள்.






# ஓங்கட்டும் தொழிற்சங்க ஒற்றுமை!
# வெல்லட்டும் தொழிலாளர் உரிமை!

## பேரணி–மாநாடு

திருச்சி | டிசம்பர் 25, 2025



- தொழிலாளி வர்க்கத்தை சீரழிக்கும், பிளவுபடுத்தும் மத - சாதிய - இன - சட்டவாதம் போன்ற மாயைகளிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை பாதுகாப்போம்! ஒரு ஆலைத் தொழிலாளி பாதிக்கப்பட்டால் அவருக்காக அந்த ஆலையில் மட்டும் போராடினால் போதாது. அந்த ஆலை அமைந்துள்ள தொழிற்பேட்டையை சேர்ந்த பிற தொழிலாளிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து போராடும் வகையில் கூட்டமைப்பை உருவாக்குவோம்!

**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**

தமிழ்நாடு – புதுச்சேரி 944444 2374